விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 25 செவ்வாய்க்கிழமை (08.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை வட மாகாணசபையே முன்னின்று நடத்தும்

### அனைவரையும் பங்கேற்குமாறு வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை வழமை போன்று இந்த வருடமும் வடக்கு மாகாண சபையே முன்னின்று நடத்தும் என அறிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், எமது இனத்துக்கு ஏற்பட்ட பேரவலத்தை நினைவுகூரும் நிகழ்வை எம்முடன் இணைந்து நடத்த முன்வருமாறு அனைத்து பொது அமைப்புக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் மாகாண சபை உறுப்பி

24

## நீர்வேலியில் கொலைவெறி வாள்வெட்டுத் தாக்குதல்

### இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் உள்ள கோவில் வளாகத்தில் வைத்து வாள்வெட்டு குழுவினர் மேற்கொண்ட கொலைவெறி தாக்குதலில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டை மேற்கொண்டவர்கள் அப்பகுதியில் நின்றிருந்த ஒரு மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட 3 துவிச்சக்கரவண்டிகளை கிணற்றுக்குள் வீசிவிட்டு

23

## கடலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

### வடமராட்சியில் சம்பவம்

(கரணவாய்)

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற கடற்தொழிலாளி ஒருவர் சடலமாக கரைதிரும்பிய சம்பவம் ஒன்று வடமராட்சி பொலிகண்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

24

### 53 போத்தல் கசிப்புடன்

## இளவாலையில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 53 போத்தல் கசிப்புடன் 2 நபர்கள்

24

## சில்லாலையில் மாணவி ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சில்லாலைப் பகுதியில் வசிக்கும் 13 வயது மாணவி ஒருவர் அவரது வீட்டின் பின்பக்கம்

23

# கூட்டு அரசு மிகவிரைவில் வீட்டுக்கு அனுப்பப்படும்



### மே தின கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை

(கொழும்பு) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்படும் கூட்டு அரசாங்கத்தை விரைவில் வீட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் மேற்கொள்ளப்பட்ட மே தினக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## வட மாகாண சபை முடிவு மன வருத்தத்தை தருகிறது

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர் இனவழிப்பு நினைவு நாளை முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒற்றுமையாக ஒரே நிகழ்வாக நடத்துவதற்கு பல்கலைக்கழக மாணவர் சமூகமாகிய நாம் கடந்த பல வாரங்களாக கடும் முயற்சியை மேற்கொண்டு வந்திருந்தோம்.

கடந்த ஆண்டுகளில் இந்நிகழ்வுகளை தனித் தனியாக நடத்தியவர்களோடு உரையாடி ஒற்றுமையாக ஒரே நிகழ்வாக நடத்துவதற்கான எமது முயற்சிகள் ஆங்காங்கே இடறுப்பட்டாலும் முன்னேற்றகரமாகவே அமைந்திருந்தது.

பல்வேறு அரசியல் 23

### போதையில் வந்த கும்பல் ஒன்று

## எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் குடும்பம் ஒன்றை சிறைப்பிடித்து தாக்குதல்

### சுண்டிக்குளம் பகுதியில் சம்பவம்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சுண்டிக்குளம் உழவனூர் கிராமத்தில் உறவினர் வீட்டுக்கு வந்த குடும்பம் ஒன்றை மது போதையில் வந்த கும்பல் ஒன்று சுமார் 8 மணித்தியாலங்களுக்கு மேல் சிறைப் பிடித்து வைத்திருந்து குடும்பத்தினர் மீது தாக்குதல் நடத்திய போது குடும்பப் பெண் படுகாயமடைந்த நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள

23

## பல லட்சம் பெறுமதியான பாரை மீன்கள் ஆழியவளையில்



23

துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Canada | -850/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி, நெல்லியடி,
கிளிநொச்சி, முல்லைத்தீவு,
மன்னார்.
Hotline -0777554528
(3889)

### 8-வது பாராளுமன்றம்

## ஜனாதிபதி தலைமையில் இன்றையதினம் ஆரம்பம்

(கொழும்பு)

எட்டாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று பிற்பகல் 2.15இற்கு ஆரம்பமாகவுள்ளது.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களுக்கு அமைய 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி நள்ளிரவு

23

## 2020இல் ஓய்வு பெறாமல் தொடர்ந்து சேவை செய்வேன்

### சுதந்திரக்கட்சியின் மே தினத்தில் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

சிலர் தான் 2020இல் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதா? எனக் கேட்பதாகவும் சமூக வலைத்தளங்களிலும் இந்த தகவல் வெளியாகியுள்ளதாகவும் தெரிவித்த

23

# மரண அறிவித்தல்

## மங்கையற்கரசி சிவபாதசுந்தரம்



அராலி மத்தி வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி சிவபாதசுந்தரம் நேற்று (07.05.2018) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நடராசா, காலஞ்சென்ற நடராசா சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்புச் சகோதரியும், மூளாயைப் பிறப்பிடமாக கொண்ட காலஞ்சென்ற வேலாயுதம் சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், சாரதா (செயலாளர், பிரதேச சபை-காரைநகர்), தர்மசீலன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித்திணைக்களம்-வடக்கு மாகாணம்), சத்தியசீலன் (மேலதிக அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம்-கிளிநொச்சி), சி.குணசீலன் (ஆசிரியர்-யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்), காலஞ்சென்ற சி.ஞானசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், உருத்திரசம்பவன் (ஆசிரியர்-யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்), ஜெயமிதுலா (உதவித் தபாலதிபர்-பண்டத்தரிப்பு), சர்மிலா (ஆசிரியர்-யா/இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், கிருசிகா, லோசிகா, வேணுதன், ஹர்மிதன், வர்சாலினி, அபிராம், அனிகா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சதாசிவம், தியாகராசா, சந்திரசேகரம், சண்முகம், சகாதேவன், நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லமான அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் இன்று (08.05.2018) முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேலங்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை

தகவல்:-குடும்பத்தினர்
0212251816

(3887)

# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலாவதியான ஒரு பொருள்

## மே தினத்தில் விமல் வீரவன்ச

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது காலாவதியான ஒரு பொருள் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தான் 2020 ஆம் ஆண்டில் ஓய்வுபெற மாட்டேன் என்றும் நாட்டிற்காக செய்ய வேண்டிய கடமைகள் இன்னும் அதிகமாக உள்ளதாகவும் ஜனாதிபதி நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தின் போது கருத்து தெரிவித்திருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் விதத்தில் பாராளுமன்ற உறுப்பினர விமல் வீரவன்ச, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஓய்வு பெறத் தேவையில்லை, அவரை இப்போதே நாட்டு மக்கள் ஓய்வுக்கு அனுப்பிட்டார்கள் என்றும் ஜனாதிபதி இப்போது காலாவதியான ஒரு பொருள் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# பொருளாதார ரீதியில் அரசு வீழ்ச்சி

## ஜே.வி.பியின் மே தினத்தில் அநுர

பொருளாதார ரீதியில் எவ்வித வெற்றியையும் அடையாத மற்றும் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள அரசாக இந்த அரசாங்கம் ஆட்சியாளர்களினால் ஆக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மே தின கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் ஒன்றிணைந்து ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியமைத்ததாகவும், ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியமைத்ததாகவும், இவ்வாறு 70 வருடங்கள் ஆட்சி செய்தும் நாட்டில் எவ்வித வளர்ச்சியும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ம)

# வருடாந்த பொதுக்கூட்டம்

09.05.2018இல் நடைபெறவிருந்த வருடாந்த பொதுக் கூட்டம், தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு 19.05.2018 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

**காலம்:-** 19.05.2018 சனிக்கிழமை
பி.ப 4.00 மணி

**தலைமை:-** திரு.மு.தங்கவேல் (உப தலைவர்)

**இடம்:-** நிலைய மண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**

01. இறைவணக்கம்
02. தலைமையுரை
03. ஆண்டறிக்கை, அறிக்கைகள் சமர்ப்பிப்பு
04. கணக்கறிக்கை சமர்ப்பிப்பு
05. புதிய நிர்வாகிகள் தெரிவு
06. பிற விடயங்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். பிரேரணைகள் 11.05.2018க்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பொ.சிவஞானசுந்தரம்
செயலாளர் 06.05.2018

(3886)

# மரண அறிவித்தல்



## அமரர் நாகநாதி பத்மநாதன்

பிறப்பு 06.07.1944 — இறப்பு 06.05.2018

சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.245, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் முன்னாள் சாரதா சுல்பார் கிளிநொச்சி, சாரதா ஸ்டோர்ஸ், சந்தையடி வட்டக்கச்சி உரிமையாளருமாகிய நாகநாதி பத்மநாதன் 06.05.2018ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்-நாகம்மா தம்பதிகளின் மருமகனும், சாரதாம்பாளின் (ஓய்வுபெற்ற சைவ ஆசிரியர்) அன்புக் கணவரும், அனுஷா (வைத்தியர்-கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை), லுரேந்திரன் (கணக்காளர்-பிரதேச செயலகம், கரைச்சி) கோகுலதாஸ் (விநாயகர் தளபாடம்-கிளிநொச்சி), பிரசாந்தி (வைத்தியர்-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிஸ்ணாலிங்கம் (வைத்தியர்-கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை), சுலோகா (முன்னாள் கணக்காளர் சேவாலங்கா மன்றம்-வவுனியா), பிரதீபா, திணேஸ்குமார் (பொறியியலாளர்-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பானுஜன், சுபிஷஜன், தாருஜா, யனுஸ்கன், அஸ்மிதா, ஜித்விகா, கஸ்விகா ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, காலஞ்சென்ற அன்னபூரணி, பரமானந்தசிவம், காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் வரதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சிவபாதசுந்தரம், அமரர் சௌந்தரநாயகி, சிவகாமசுந்தரி, சிவகுருநாதன், சாவித்திரிதேவி, சிவானந்தவல்லி, சகுந்தலாதேவி, சதாசிவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி, பத்மநாதன், விமலா (நியூஸ்லாந்து), கமலாம்பிகை, சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உலகேஸ்வரி, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்ற ராசேந்திரம், மகாலட்சுமி, காலஞ்சென்ற சிவராசலிங்கம், விக்னேஸ்வரலிங்கம், தவராசா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (08.05.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:-

இல.245,
சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி

சாரதாம்பாள் (மனைவி)-0094772559705
அனுஷா (மகள்)-0094772304531
லுரேந்திரன் (மகன்)-0094773659106
தாசன் (மகன்)-0094775227505

(த-2528)

# சமுர்த்தி வங்கிகளின் பணத்தை சூறையாட ஐ.தே.க.முயற்சி!

## கீர்த்தி தென்னக்கோன் பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

சமுர்த்தி வங்கிகளையும் மத்திய வங்கியின் கீழ் கொண்டுசென்று மக்களின் பணத்தை கொள்ளையடிக்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்றது என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குற்றம்சாட்டியுள்ளார். மாகாணசபைகளின் மூலமாக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு இந்தக் களவுகளை தடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இய்க்கத்தின் செய்தியாளர் சந்திப்பு நேற்று அந்த அமைப்பின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள சமுர்த்தி வங்கிகள் அனைத்தையும் மத்திய வங்கியின்கீழ்நிர்வகிக்கும்முறைமையினை கொண்டுவரவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி இப்போது சமுர்த்தி வங்கிகளின் பணத்தையும் இலக்கு வைத்து அதையும் சூறையாடும் சதித் திட்டத்தை வகுத்துள்ளது. இதுவரை காலமாக ஐக்கிய தேசியக் கட்சியிடம் குறித்த அமைச்சு இருக்கவில்லை. இப்போது புதிய அமைச்சரவையில் சமூக வலுவூட்டல் அமைச்சினை பெற்றுக்கொண்ட ஒரு வாரத்திலேயே சமுர்த்தி வங்கிகளை இலக்கு வைத்துவிட்டனர். இன்று நாடு பூராகவும் 1074 சமுர்த்தி வங்கிகள் இயங்குகின்றன. இவை 331 மஹா சங்கங்களுக்கு கீழ் இயங்குகின்றன. இவை அனைத்திலுமாக சுமார் 1200 பில்லியன் ரூபா பணம் சேமிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்துமே அரசாங்க பணம் அல்ல. முதலீட்டாளர்களின் பணமும் அல்ல. வெறுமனே தினக் கூலியாகவும், நாளாந்தம் 300 ரூபாய்க்கும் கீழ் வருமானம் பெரும் மக்கள் சேகரித்து வைத்துள்ள பணமாகும்.

மேலும் இந்த சங்காங்கள் மத்திய வங்கியின் கீழ் செயற்படாதவையாகும். சில முகாமைத்துவ விடயங்களில் மாத்திரம் மத்திய வங்கியின் சில குழுக்கள் தலையிடும். ஆகவே இப்போது சமுர்த்தி வங்கிகளை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவந்து அவற்றின் பணத்தை மத்திய வங்கி மூலமாக பெற்றுக் கொண்டு அதன் மூலமாக அரசாங்கம் தனது நெருக்கடிகளை சமாளிக்க முயற்சித்து வருகின்றது. அதற்காக தற்போதுள்ள சட்டத்தையும் திருத்தி அதன் மூலமாக தமது நோக்கத்தை சாதிக்க முயற்சிக்கின்றனர். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் சட்டம் நிறைவேற்றப்படுவதில் சந்தேகம் இல்லை. திருடர்கள் ஆதரித்து வாக்களித்த பாராளுமன்றத்தில் இவ்வாறான களவுகளுக்கு துணை போகும் நடவடிக்கைகள் இடம்பெறுவது ஆச்சரியப்படுவதற்கில்லை. எனினும் மாகாண சபைகள் அழுத்தம் கொடுக்க முடியும். அதன் மூலமாக இந்த செயற்பாட்டினை தடுக்க முடியும். ஆகவே நியாயமாக சிந்திக்கும் நபர்கள் இந்த செயற்பாட்டில் ஒன்றிணைந்து தடுத்து நிறுத்த வேண்டும்.

இதற்கு முன்னர் கடந்த ஆட்சிக் காலங்களில் சமுர்த்தி பணத்தை கொள்ளையடிக்க அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை கையாண்டது. முன்னைய ஆட்சியில் பலர் மீது இன்றும் வழக்கு விசாரணைகள் உள்ளன. ஆகவே சட்டம் கடினமாக இருந்தமையே இதற்குக் காரணமாகும். அவ்வாறு இருக்கையில் இந்த அரசாங்கத்தின் சமுர்த்தி வங்கி பணத்தை கொள்ளையடிக்கும் செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை தேசிய அரசால் இரத்து செய்ய முடியாது

## ஞானசார தேரர் விளக்கம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை இரத்து செய்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் சிறப்பம்சம் வாய்ந்த இந்த முறைமையினை இரத்துச் செய்யும் அதிகாரம் தேசிய அரசாங்கத்திற்கு கிடையாதென பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால அரசாங்கத்திலும் தற்போதைய அரசாங்கத்திலும் சர்வதேசம் மட்டத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் தீர்வுகளுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒரு பக்க பலமாக காணப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை இரத்து செய்வதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த சிறப்பம்சம் வாய்ந்த முறைமையினை இரத்து செய்யும் அதிகாரம் தேசிய அரசாங்கத்திற்கு கிடையாது.

தேசிய அரசாங்கம் காலத்திற்கு காலம் தமது அமைச்சர்களை பலிகொடுத்தே அரசாங்கத்தினை மேற்கொண்டு செல்கின்றது. கடந்த காலங்களில் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டமையின் காரணமாக பகிரங்கமாக அமைச்சுப் பதவிகளில் இருந்து பதவி நீக்கம் செய்தவர்களுக்கு தற்போது புதிய அமைச்சரவை மாற்றத்தில் முக்கிய அமைச்சுப் பதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளமை வேடிக்கையாகவுள்ளது.

நாட்டில் மாற்றங்கள் ஏற்படுத்தும் நோக்கில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 4 அமைச்சரவை மாற்றம் இடம் பெற்றுள்ளது.



இதுவரை காலமும் அமைச்சரவை மாற்றம் மாத்திரமே முறையாக இடம்பெற்றுள்ளது. ஆனால் இந்த மாற்றங்களின் காரணமாக மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. ஆகவே புதிய அமைச்சரவை உருவாக்கம் பயனற்றது.

தேசிய அரசாங்கத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் காரணமாக அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் காரணமாக நாடு எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை எதிர் கொள்ள நேரிடும். தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பினை இரத்து செய்து புதிய அரசியலமைப்பினை கொண்டு வரும் தேவை மக்கள் விடுதலை முன்னணியினருக்கு மாத்திரமே தற்போது காணப்படுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு அரசாங்கத்தின் பங்காளியாகவே தொடர்ந்து அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தி வருகின்றது.

தேசிய அரசாங்கத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தமது நலனை மாத்திரம் கருத்திற்கொண்டு செயற்படாமல் நாட்டின் எதிர்கால நலனை கருதி செயற்பட வேண்டும். தேவையற்ற விடயங்களுக்காக அரசியல்வாதிகள் செல்வாக்கு செலுத்தாமல் மக்களின் நலன் பேணும் திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கத்திற்கு மகிந்த அணி சவால் நடு வீதியில் ஊர்வலம்

(கொழும்பு)

மகிந்த ஆதரவு பொது எதிரணியின் மே தின ஊர்வலம் காலியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

காலி சமனல மைதானத்தை நோக்கி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் மகிந்த அணியினரின் மே தின ஊர்வலம் இடம்பெற்றது.

இதன்போது, அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு, நடு வீதியில் பெருமளவானோர் திரண்டு இந்த ஊர்வலத்தை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருடன் என்றும், அரசாங்கத்தை கவிழ்த்து மீண்டும் ஆட்சிபீடமேறுவோம் என்றும், செயற்றிறன் மிக்க ஆட்சியே அவசியம் என்றும், அதனை மகிந்த தலைமையில் ஏற்படுத்துவோம் என்று நாமல் ராஜபக்ஷ கூற அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து கோஷமெழுப்பினர். குறித்த ஊர்வலமானது நாமலின் முகப்புத்தகத்தில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. (இ-7)

# கண்டிக் கலவரம் தொடர்பில் கூட்டு எதிரணி எம்.பி. அமுனுவுக்கு பயங்கரவாதப் பிரிவு அழைப்பு

(கொழும்பு)

அண்மையில் கண்டி மற்றும் திகன பகுதியில் இடம்பெற்ற இனக்கலவர சம்பவம் தொடர்பில் வாக்கு மூலம் ஒன்றினை பெறுவதற்கு பயங்கரவாத விசாரணை பிரிவினரால் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகமவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விசாரணை தொடர்பில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

திகன கலவரத்தின் போது அப்பிரதேசத்தை சுற்றி அவரது வாகனத்தில் பாதுகாவலர்கள் சென்றமை தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளவே அவர் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தினத்தில் நாடாளுமன்ற அமர்வுகள் காணப்படுவதால் விசாரணை தினத்தை மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அமுனுகம கூறினார்.

விசாரணைக்கு ஆழைக்கப்படும் தினத்தன்று அவர் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# நாடாளுமன்ற ஆசன முறைமையில் மாற்றம்

(கொழும்பு)

நாடாளுமன்றஆசனமுறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 முன்னாள் அமைச்சர்களும் நாடாளுமன்ற எதிர்க்கட்சி தரப்பில் அமர தமக்கு ஆசனங்களை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய ஆசன மாற்றங்கள் இடம்பெறுவதாகவும், குறித்த 16 பேரில் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சித் தரப்பின் முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்தியன் பிறிமியர் லீக் - 2018




**ராஜஸ்தான் றோயல்ஸ் VS சன்ரைசர்ஸ் ஹைதராபாத்**

சுவாமி மன்சிங் அரங்கு, ராஜஸ்தான். | இரவு 8 மணி

## இந்தியன் பிறிமியர் லீக் - 2018 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 10 | 8 | 2 | 16 |
| 2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 10 | 7 | 3 | 14 |
| 3 | கிங்ஸ் XI பஞ்சாப் | 9 | 6 | 3 | 12 |
| 4 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 10 | 5 | 5 | 10 |
| 5 | மும்பை இந்தியன்ஸ் | 10 | 4 | 6 | 8 |
| 6 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 10 | 3 | 7 | 6 |
| 7 | டில்லி டேர்டெவில்ஸ் | 10 | 3 | 7 | 6 |
| 8 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 9 | 3 | 6 | 6 |

# இறுதிப் பந்தில் வீழ்ந்தது பெங்களூர்

ஐபிஎல் தொடரின் 39-வது லீக் போட்டியில் ஹோலியின் பெங்களூரை 5 ஓட்டங்களால் வீழ்த்தியது சன்ரைசர்ஸ் ஹைதராபாத்.

11ஆவது ஐ.பி.எல் தொடர் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன.

இதில் ஹைதராபத்தில் நேற்று நடைபெற்ற 38 ஆவது லீக் போட்டியில் ஹைதராபாத் - பெங்களூர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச் சழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஹேல்ஸ், தவான் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஹேல்ஸ் 5, தவான் 13, மணிஷ் பாண்டே 5 ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

8.2 ஓவரில் 48 ஓட்டங்கள் எடுப்பதற்குள் மூன்று விக்கெட்டுக்களை இழந்த நிலையில், 4ஆவது விக்கெட்டுக்காக கேன் வில்லியம்சன் ஷாகிப் அல் ஹசன் உடன் இணைந்து அணியை மீட்டார். இருவரின் சிறப்பான ஆட்டத்தால் ஹைதராபாத் அணியின் ஓட்டஎண்ணிக்கை 150ஐ தொடும் நிலை ஏற்பட்டது.

கேன் வில்லியம்சன் சிறப்பாக விளையாடி 39 பந்துகளில் 5 பவுண்டரி, 2 சிக்சருடன் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஷகிப் அல் ஹசன் 32 பந்தில் 35 ஓட்டங்கள் எடுத்து அணியின் ஓட்டஉயர்வுக்கு காரணமாக இருந்தார். அதன்பின் வந்த யூசுப் பதான் 12 ஓட்டங்களில் வெளியேறினார். 19-வது ஓவரை முகமது சிராஜ் வீசினார். இந்த ஓவரில் யூசுப் பதான், சகா ஆகியோரை க்ளீன் போல்டாக்கினார். சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 19 ஓவர்கள் முடிவில் 143 ஓட்டங்களை எடுத்திருந்தது.



கடைசி ஓவரை ரிம் சௌதி வீசினார். இந்த ஓவரில் ஹைதராபாத் 3 ஓட்டங்களே எடுத்தது.

இறுதியில் பெங்களூர் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களை எடுத்தது.

பெங்களூர் பந்துவீச்சில் சிராஜ், ரிம் சௌதி தலா மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

147 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய ஹோலியின் பெங்களூரால் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை மட்டும் எடுத்து 5 ஓட்டங்களால் வீழ்ந்தது.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி சொ.கௌதமி
அவர்களின்
பாசமிகு தாயார்



**அமரர்**
**சிவநேசமணி**
**சொர்ணலிங்கம்**
**அவர்களின்**

பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3890)

**பாடசாலைச் சமூகம்**
**யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி.**
**காங்கேசன்துறை.**

## விழிநீர் அஞ்சலி

தோற்றம்
1944 - 01 - 13



மறைவு
2018 - 05 - 07

## திருமதி மங்கையற்கரசி சிவபாதசுந்தரம்

அராலி மத்தி, அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் நெருக்கடியான காலம் தொட்டு எமது இல்லக் குழந்தைகளின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து சேவையாற்றிய பெருமதிப்பிற்குரிய மேலதிக அரசாங்க அதிபர் திரு. சத்தியசீலன் அவர்களின் தாயார் திருமதி மங்கையற்கரசி சிவபாதசுந்தரம் அவர்கள் நேற்று 07.05.2018 (திங்கட்கிழமை) இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைந்தோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பலகடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலைமாறிப் போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பு இணைந்தது
எனினும் உங்கள் இழப்பை நெஞ்சம் ஏற்பதில்லை

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(C-2530)

## மரண அறிவித்தல்

திருமதி
**பாலசரஸ்வதி**
**சிதம்பரநாதன்**
**(ஓம்காரம்மா)**



மலர்வு 1939.10.03 | உதிர்வு 2018.05.06

*பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.916, பாடசாலை வீதி, செல்வநாயகபுரம், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசரஸ்வதி சிதம்பரநாதன் (ஓம்காரம்மா) கடந்த 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - சிதம்பரநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னையா - மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், பாலச்சந்திரன் மற்றும் சிவனேஸ்வரி (பருத்தித்துறை), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் ஜெகஜ்ஜோதி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சிவச்சந்திரன் மற்றும் காங்கேசச்சந்திரன் (லண்டன்), கலைவாணி (ஆசிரியர் - பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயதாசன் (கண்ணன் - இலங்கை மின்சார சபை), விஜயவாணி (லண்டன்), விஜயகௌரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருபநாயகி (மாவட்ட செயலகம் - திருகோணமலை), விஜயநாதன் (லண்டன்), நிரகணதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவபிரஷா, சிவஜதுர்ஷனா, சிவகோபன், சிவயுகேன் (திருகோணமலை), விஜயதனுஷன், விஜயகஜாநிதி, விஜயசிதுர்ஷன் (லண்டன்), பிரவீன், ஹரிஸ், நரேஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.916, பாடசாலை வீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை இல்லத்தில் இடம்பெற்று 10.04.2018 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

(C-2523)

இல.916, பாடசாலை வீதி,
செல்வநாயகபுரம்,
திருகோணமலை.

தகவல்:-
மகன், விஜயதாசன் (கண்ணன்)
0716867204, 077 797 3123

# 800 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை

(கொழும்பு)

எதிர்வரும் 16ஆம் திகதி 800 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட உள்ளதாக குடிவரவு, குடியல்வு கட்டுப்பாட்டாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்துள்ளார். 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை சுமார் 30 ஆயிரம் பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. மாதாந்தம் இதற்காக சுமார் ஆயிரம் பேர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


மேலும் 3 ஆயிரம் பேருக்கு இரட்டை பிரஜாவுரிமை வழங்கப்பட இருப்பதாகவும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் எம். என். ரணசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து முதலமைச்சர் தலைமையில் கலந்துரையாடல்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் முதலமைச்சரின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் மாகாணசபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண அமைச்சர்களான க.சர்வேஸ்வரன், திருமதி அனந்தி சசிதரன், க.சிவநேசன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (இ-9)


## கண்ணீர் அஞ்சலி



**வி.கே.கணேசலிங்கம்**

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் முன்னாள் நீண்டகால தலைவரும், செயலாளரும் தலைமை செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் உப தலைவரும் பருத்தித்துறை பிரிவின் முன்னாள் தலைவரும்

ஆயுட்கால அங்கத்தவரும் ஆகிய பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அவர்கள் 06.05.2018 அன்று லண்டனில் அமரத்துவம் அடைந்ததையிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை நிர்வாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள்,அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். (சி-2525)

தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள்,
அங்கத்தவர்கள், ஊழியர்கள், தொண்டர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்-யாழ்.கிளை.


# அரசியலமைப்பு தொடர்பாக ஜனாதிபதி விளக்க வேண்டும்

## துரைராஜசிங்கம் வேண்டுகோள்



(ஏறாவூர்)

மேதின நிகழ்வில் அல்ல நாடாளுமன்ற அமர்வில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மே தினக் கூட்டம், மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அரசியலமைப்பின் மீதி உருவாக்கம் எவ்வாறு அமையப்போகின்றது என்ற செய்தியை தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி கூற வேண்டும். அதன் அடிப்படையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அடுத்தகட்ட நகர்வும் முன்னெடுக்கப்படும்.

உரிமை எங்களுடைய இனத்தின் விடுதலையிலே தான் தங்கியிருக்கின்றது. இந்நாட்டிலிருக்கின்ற சிங்கள தொழிலாளியையும் தமிழ் தொழிலாளியையும் ஒன்று சேரவைத்து கௌரவிக்கின்ற ஒரேயொரு இடமாக மேதின மேடைகள்தான் இருக்கின்றன.

அனைத்து தொழிற்றுறைகளிலும் தமிழர்கள் தங்களுக்கென தொழிற்சங்கங்களை வைத்திருந்த காலங்கள் உண்டு. தற்போது தேசிய தொழிற்சங்கங்களோடும் தேசிய கட்சிகளோடும் எங்களது தொழிற்சங்கங்கள் கரைந்துவிட்ட நிலையினை காண்கின்றோம்" எனத் தெரிவித்தார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி .**சிவனேசமணி சொர்ணலிங்கம்**

எமது பாடசாலையின்
ஆசிரியர்
திருமதி. **வாசுகி சிவனேசன்**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி.
சிவனேசமணி சொர்ணலிங்கம்
அவர்கள் 05.05.2018
அன்று இறைவனடி
சேர்ந்தார்.

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3883)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்
யாழ். கந்தரோடைத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.



## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

**திருமதி.கஜேந்திரன் தேவிகா**



*பிறப்பு: 1986.12.14 இறப்பு: 2018.04.06*

கடந்த 06.04.2018 வெள்ளிக்கிழமையன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி **கஜேந்திரன் தேவிகா** அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 08.05.2018 இன்று செவ்வாய்க்கிழமை 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். பின் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்னாரின் மரணச் செய்தி கேட்டு பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

(3882)

**30/1, 3ம் ஒழுங்கை, கண்டி வீதி, அரியாலை. குடும்பத்தினர்.**


## இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், செல்வாக்கு மேலோங்கும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தொழில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு.

**மிதுனம்:** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், குறைவாகப் பேசினாலும் குறை கூறி பேசாமல் இருப்பது நல்லது, பிரயாண பயமுண்டு.

**கும்பம்:** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

**மகரம்:** மன அமைதி வேண்டி மகத்தான வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், வியாபார நலன் கருதி பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

**இராசி பலன் — கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சூரி புத | சுக் | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது செவ் சந் | | | |
| சனி | | குரு | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பூசம்
இரவு 7.21 மணிக்கு
கும்-சந்

**08.05.2018**
சித்திரை 25, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
அட்டமி மாலை 6.34 மணிவரை
திருவோணம் காலை 5.57 மணிவரை
சுபநேரம் 10.25-11.55 மணிவரை
இராகுகாலம் 2.55-4.25 மணிவரை
அட்டமி-நவமி

**வளவன்**

**கடகம்:** எண்ணியது நிறைவேறும் நாள், குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வதால் நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், போசன சுகமுண்டு.

**தனுசு:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கிடைக்கும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வேலைச்சுமை கூடும்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோகமான நாள், தாய்வழியில் அனுகூலமுண்டு.

**கன்னி:** தொட்ட காரியத்தில் முன்னேற்றமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, எதிர்பாராத தனவரவு கிடைக்கலாம்.



வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபையினால் சுன்னாகம் பொது நூலகத்தில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி இ.சுபாஸ்கரன் தலைமையில் அண்மையில் உலக புத்தக தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன் கலந்து கொண்டார். இலக்கியப் படைப்பாளிகள் கௌரவிக்கப்பட்டு விருதுகளும் வழங்கப்பட்டன.

## வடபகுதி மக்கள் மட்டுமன்றி தென்பகுதி மக்களும் யுத்தத்தால் துன்பப்பட்டனர்

### யாழ். கட்டளைத் தளபதி தர்ஷன தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



நாட்டில் தொடர்ந்தேச்சையாக 30 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற யுத்தத்தில் வட பகுதி மக்கள் மாத்திரம் அன்றி தென்பகுதி மக்களும் பெரிதும் துன்பப்பட்டனர் என்று இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில்போரால் பாதிக்கப்பட்ட, வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை யாழ்.மாவட்ட கட்டளைத் தலைமையகத்தில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார். அத்தோடு வறிய குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை சிறுமி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கல்வி சகாய நிதியை வழங்கியதுடன் சுயதொழில் முயற்சியாளரான குடும்பத் தலைவி ஒருவருக்கு வாழ்வாதார மற்றும் சுயதொழில் மேம்பாட்டு நிதியையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவர்,

வட பகுதி மக்களுக்கும், தென்பகுதி மக்களுக்கும் இடையிலான நல்லுறவை பிரிவினைவாதம் சிதைத்ததுடன் நாட்டின் அமைதிச் சூழலையும் கெடுத்தது. நாட்டில் தொடர்ந்தேச்சையாக 30 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற யுத்தத்தில் வட பகுதி மக்கள் மாத்திரம் அன்றி தென்பகுதி மக்களும் பெரிதும் துன்பப்பட்டனர். தென் பகுதியில் அரசாங்க அலுவலகங்கள் அடங்கலாக பொது இடங்களில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகள் மூலம் தென்பகுதி மக்கள் பெரிதும் துன்பப்பட்டனர்.

தென்பகுதி மக்கள்தான் யுத்தத்தை முன்னெடுத்தனர் என்கிற சிந்தனை வட பகுதி மக்களுக்கு உள்ளது. ஆனால் இந்த யுத்தத்தில் வட பகுதி மக்களும், தென்பகுதி மக்களும் பாதிக்கப்பட்டனர் என்பதே உண்மை ஆகும். நாட்டையும், மக்களையும் பாதுகாத்து அமைதியை நிலைநாட்ட பிரிவினை வாதத்துக்கு எதிராக இராணுவம் போராட நேர்ந்தது. அதற்காக தமிழ் மக்களை எதிரிகளாக ஒருபோதும் தென் பகுதி மக்களும் சரி, இராணுவமும் சரி எண்ணவே இல்லை.

நாம் பழைய கசப்பான சம்பவங்களை மறப்பது உசிதமான விடயம் ஆகும். நடந்த கெட்டவைகளை எல்லாம் ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்து விட வேண்டும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில்தான் இரு பகுதி மக்களுக்கும் இடையில் நல்லிணக்கம் மலரும். அதற்கான வேலைத் திட்டங்களையே இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளை தலைமையகம் முன்னெடுத்து வருகின்றது. இவ்வேலை திட்டங்களின் ஒரு அம்சமாகவே வறிய குடும்பங்களின் கல்வி வளர்ச்சி மற்றும் வாழ்வாதார எழுச்சி ஆகியவற்றுக்கு நாம் உதவுகின்றோம்.

மாறாக தேர்தல் நோக்கத்துக்காகவோ, அரசியலுக்காகவோ நாம் இவற்றை செய்யவில்லை. கல்விக்கு வறுமை ஒருபோதும் தடையாக அமைதல் கூடாது. ஆகவேதான் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த உதவுகின்றோம். இவர்கள் கல்வியில் மேன்மை அடைந்து வீட்டுக்கும் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் பயன்படுகின்ற நற்பிரஜைகளாக மிளிர்தல் வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் கல்வியில் மேன்மை அடைகின்றபோது எதிர்காலத்தில் எல்லாவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் போய் எமது நாடு அமைதிப் பூங்காவாக மாறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)


ஏழாலை வடக்கு - புதுக்கிணற்றடி திருவாலங்காடு சித்தி விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு விசேட சொற்பொழிவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை 9 ஆம் திகதி முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தினமும் இரவு 7.00 - 8.00 மணிவரை ஆலய பிரதான மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சமயஜோதி க.நிஜலிங்கம் தெரிவித்தார்.

இதில் 9 ஆம் திகதி முதல் நாள் முதல் 3 ஆம் நாள் வரை சைவப்புலவர் பிரசங்கவாரிதி கந்த சத்தியதாசன் சொற்பொழிவு வழங்குவார். முதல்நாள் "விநாயகர் வழிபாடு" இரண்டாம் நாள் "விநாயகர் திருவுருவம்" மூன்றாம் நாள் "அறிவின் மகத்துவம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவர்.

4 ஆம் நாள் சைவப் புலவர் திருவாவடு துறை ஆதினப்புலவர் ஏ.அனுசாந்தன் "திருவாக்கும் செய்கருமம் கைகூப்பும்..." என்னும் தலைப்பிலும் 5 ஆம் நாள் "அறுகம்புல்லின் மகத்துவம்" ஆறாம் நாள் "தன்னை நினையத் தருகின்றாய்" என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றுவார்.

7 ஆம் நாள் சைவப் புலவர் சைவசின்மயர் பொ.சந்திரவேல் "விநாயகர் வழிபாடு உணர்த்தும் தத்துவங்கள்" என்னும் தலைப்பிலும் 8 ஆம் நாள் சைவப்புலவர் சைவ சின்மயர் ச.முகுந்தன் "இலக்கியம் போற்றும் விநாயகர்" 9 ஆம் நாள் "விநாயகரும் அறிவியல் சிந்தனைகளும்" 10 ஆம் நாள் "விநாயகர் வழிபாடும் சமூக மேம்பாடும்" என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றுவார். (இ-7)




## வன்முறை வேண்டாம்

### தமிழ் இளைஞர்களிடம் சுமந்திரன் கோரிக்கை

தமிழ் இளைஞர்களிடமிருந்தே தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு துரதிர்ஷ்டவசமான நிலையில் நாம் இன்று இருக்கின்றோம் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

"வன்முறையைத் தவிர்ப்போம்; போதையை ஒழிப்போம்" எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வன்முறையைத் தவிர்ப்போம்; போதையை ஒழிப்போம்" என்ற இரண்டு விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. போதைப்பொருட்களை முற்றாக ஒழிக்க வேண்டும் என நாங்கள் இன்று உறுதி பூண வேண்டும். போதையை ஏற்படுத்துகின்றது என நாங்கள் சொல்வது மதுபானம், புகையிலை மற்றும் போதை ஏற்படுத்தும் திரவியங்கள். இவை அனைத்தும் ஒழிக்கப்பட வேண்டியது எங்களது கொள்கையாக இருக்க வேண்டும்.

இவற்றில் அரைகுறையாக சிலவற்றை நடத்துவோம். சிலவற்றை ஒழிப் போம் என இருந்தால் போதை ஒழியாது குடும்ப வன்முறைக்கு மதுபானம் காரணமாக இருக்கிறது. எமது இனத்திற்கெதிரான வன்முறையினைத் தடுப்பதற்கும் எதிர்த்துப் போராடுவதற்கும் பலர் முன்வந்தார்கள். அதில் சிலர் தமது வாழ்க்கையினையும் மாய்த்துக் கொண்டார்கள்.

வெளியே இருந்து ஆபத்து வருகின்ற வேளையிலே எமது இளைஞர்கள் அதனைத் துணிந்து செய்தார்கள். போருக்குப் பின்னரான காலத்திலே கிறிஸ்பூதம் வந்த போது அது யாராலே ஏற்படுத்தப்பட்டது என தெரிந்தும் அவர்களைத் துரத்திப் பிடிக்கவும் முரண்படவும் எதிர்த்துப் போராடவும் எங்களது இளைஞர்கள் பயப்படவில்லை.

நாவாந்துறையிலே அவர்கள் அப்படிச் செய்த காரணத்தாலே நூற்றுக்கு மேற்பட்டோர் அடித்து வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இதில் 52 பேருக்கான வழக்குகளில் இன்றும் உயர்நீதிமன்றில் நான் ஆஜராகிக்கொண்டுள்ளேன்.

வெளியிலே இருந்து ஆபத்துக்கள், சவால்கள் வருகின்ற போது கொதித்து எழுகிறோம். ஆனால் இன்று நடக்கிற வன்முறைகளைச் செய்கிறவர்கள் யார்? தமிழ் இளைஞர்கள் வாள்களுடன் வீதி வீதியாகச் சென்று வீடுகளுக்குள் புகுந்து பெண்களை வாள்களால் வெட்டுகிறார்கள். அவர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் அல்ல. யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழ் மகன்தான் அந்த வன்முறையைச் செய்து கொண்டிருக்கிறான். உள்ளே இருக்கிற சவாலை, ஆபத்தை நாங்கள் கண்டு கொள்ளாவிட்டால் நாங்கள் உள்ளே இருந்தே சீரிழிந்து விடுவோம். ஆகையினாலே இவ்விழிப்புணர்வு இன்று தொடக்கி வைக்கப்பட்டமை நல்ல விடயம்.

அரசியல் வாதிகளாக இருக்கிற நாங்கள் எங்களால் இயன்றதைச் செய்வோம். அதாவது போதைப் பொருள் எங்கே விற்பனை செய்யப்படுகிறது எனத் தெரியுமா? பொலிஸாரிடத்தில் போய் சொல்ல அச்சமா? ஏனெனில் இதற்கு பொலிஸார் உடந்தையாக இருப்பது எமக்குத் தெரிந்த விடயம். இந்த அமைப்பிலே உள்ள ஒருவரிடம் தெரிவித்தால் அவர் எமக்கு அறிவிப்பார். அதனை முறியடிப்பதற்கு நாங்கள் முயற்சி எடுக்கிறோம்.

மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் யாராவது வந்தால் அவர்களை துரத்திப் பிடியுங்கள். ஏனெனில் இது வீரம் செறிந்த மண். வன்முறை பாவிக்க வேண்டாம். நீங்களும் கத்தி கொண்டு வெட்டப் போக வேண்டாம். ஆயுதங்களை முற்றாக தவிருங்கள். ஆனால் துரத்திப் பிடியுங்கள். பத்துப் பேர் சேர்ந்தால் இருவர் கத்தியுடன் ஒன்றும் செய்ய முடியாது. எங்களுடைய வீரம் அப்படியான வீரமாக எழ வேண்டும். மக்களைப் பாதுகாக்க வேண்டிய எங்கள் தமிழ் இளைஞர்களிடமிருந்தே எங்களுடைய தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய நிலை இப்போது வந்துள்ளது. இது ஒரு துரதிர்ஷ்டவசமானது.

கிராமப் புறத்திலே விழிப்புணர்வோடு சில இளைஞர்களை தயார்படுத்தி வைத்திருங்கள் அவர்களிடத்தில் உங்கள் தொலைபேசி இலக்கங்களை கொடுத்து வைத்திருங்கள்.


பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் இங்கு வந்துள்ளார்கள். எனவே உங்களது பிரதேசத்தில் ஓர் பொறிமுறையை ஏற்படுத்துங்கள். யாராவது வாள்களுடன் வந்தால் 10 பேரை உடனடியாக திரட்டுவதற்கான பொறிமுறையை ஏற்படுத்துங்கள். இதற்கு தேவையான எந்த உதவியினையும் நாங்கள் செய்து தருகின்றோம். இன்றிலிருந்து யாழ்ப்பாணத்தில் ஒரு வாள்வெட்டு சம்பவம் நடந்ததாக இருக்கக் கூடாது. இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

ஒரு வீட்டிலே கணவன், மனைவியைத் தாக்கியதாக செய்தி வரக் கூடாது. அயலவர்கள் போய் அந்தக் கணவனை வீதியிலே இழுத்து நிறுத்துங்கள் அவனை வெட்கமடையச் செய்யுங்கள். உள்வீட்டுப் பிரச்சினை என்று பேசாமல் இருக்க வேண்டாம். தாக்கப்படுவது எமது சகோதரி. வன்முறையை நிறுத்துங்கள். வன்முறைக்கு போதை ஒரு உடந்தை. வன்முறையை ஒழிப்பதற்கு நாங்கள் வீரத்தோடு இறங்குவோம் என சபதம் எடுப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)




வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது நிதி ஒதுக்கீட்டின் மூலம் நெடுந்தீவிலுள்ள ஏழு முன்பள்ளிகளிலும் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பதினாறு பேருக்கும் சுயதொழில் மேற்கொள்ளும் நான்கு பேருக்குமாக இருபது துவிச்சக்கர வண்டிகளை அண்மையில் நெடுந்தீவில் வைத்து வழங்கினார். இந் நிகழ்வில் நெடுந்தீவு பிரதேசசபைத் தவிசாளர் பிலிப் பற்றிக் றொசான், பிரதேசசபை உறுப்பினர் சிந்தைகுலநாயகி மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் அருள்ஜீவன், யேசுதாசன், புளோரன்ஸ்மேரி, பரமேஸ்வரி ஆகியோரும் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கினர்.





அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறப்பு பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வாகீசர் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. அல்லை இளைஞர் முன்னேற்றக்குழுவின் ஏற்பாட்டில், சமூக நீதிக்கும் உரிமைக்குமான மாற்றுத் தலைமுறை நிறுவனத்தின் அனுசரணையுடனும் அல்லையூர் மக்களின் பங்களிப்புடனும் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டதோடு கல்விக்கான உபகரணங்கள், பணப்பரிசில்கள் என்பனவும் கிராம நலன்விரும்பிகளால் வழங்கப்பட்டன. அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வின் இறுதியில் மாணவர்களினால் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் விருந்தினர்களாக அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் கே.பத்மநாதன் , சமூக நீதிக்கும் உரிமைக்குமான மாற்றுத் தலைமுறை நிறுவனத்தின் இயக்குநர் பி.எஸ்.செந்தூரன் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் தலைவர்கள் , பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# வாழைச்சேனை, ஓட்டமாவடியில் மேதினத்தை முன்னிட்டு கடையடைப்பு



(கொழும்பு)

மே தினத்தினை முன்னிட்டு வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டுள்ளன.

வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேச வர்த்தக சங்கத்தினரின் வேண்டுகோளின் பிரகாரம் வர்த்தக நிலையங்கள் மே தினத்திற்காக மூடப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை எனவும், தனியார் போக்குவரத்து பேருந்து சேவை மாத்திரம் இயங்கி வருவதாகவும் இதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக்கூட்டம் சித்தாண்டி மாவடிவேம்பில் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாதாளக் குழுத் தலைவர் அசிதவின் திருமணத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு

(வத்தளை)

வத்தளை பிரதேசத்தில் இடம்பெற்ற அலிவத்த அசித என்ற பாதாளக் குழு தலைவர் ஒருவரின் திருமண வைபவத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டமை தொடர்பில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இருவரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகத்துவாரம் மற்றும் வத்தளை ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிடமே இவ்வாறு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

புலனாய்வு பிரிவின் அறிக்கையை மையப்படுத்தியே இந்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும், மற்றுமொரு பாதாளக் குழு தலைவரான வெல்லே சுரங்கவால் அலிவத்த அசிதவுக்கு விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தலே இதற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருமணத்துக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பைப் போலவே. குறித்த பாதாளக் குழு தலைவர் அசித தங்கியிருந்த ஹோட்டலுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாக் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# மைத்திரியே வேட்பாளர் மகிந்த நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின், வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே என, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், சுதந்திரக் கட்சியில் ஜனாதிபதியைத் தவிர வேறுயாரும் வேட்பாளர் இல்லையெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த. (சா/த) பரீட்சை 2017 இல் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பின்வரும் மாணவர்களையும் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோகுலராஜா சியானி- 6A,2B,S
ஜெயசுதன் ஜெயதீபா- 5A,2B,C,S
தர்மதாஸ் மிதுனதாஸ்- 3A,5B
சத்தியாகரன் விதுஷன்- 3A,3B,2C
காண்டீபன் சுபாரகா-3A,2B,2C,S
ஜெயகாந்தன் அபிஷா-3A,B,4C,S
குகநாதன் பவில்ராஜ்-2A,3B,3C
செல்வராசா அர்ச்சனா-2A,3B,2C,S
இரவீந்திரன் கேசவன்-2A,B,3C,S
விஜயகரன் சஞ்சிகா-A,7B
இராசகுமார் லக்சிகா-A,2B,4C
முருகானந்தம் யுனித்தா-A,B,2C,4S
மகேந்திரராசா கஜீபன்-2B,4C,3S
சண்முகம் நேசராஜ்-B,4C,2S
பாஸ்கரலிங்கம் விஜிதா-B,3C,4S

(C-2024)

இ.அருணகிரிவாசன்
ஓய்வுபெற்ற உப அதிபர்,
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி.

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L தனியார் தொழில் சாரதி<br>தொ.இ: B/8535 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4ம் பாதம்<br>கி.பா: 27 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி (உளவியல்)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/8553 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2ம் பாதம்<br>கி.பா: 78 செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC Land surveyor ஓமான்<br>தொ.இ: B/8536 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3ம் பாதம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBM<br>தொ.இ: G/8554 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 35 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: O/L மெக்கானிக்<br>தொ.இ: B/8538 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2 ம் பாதம்<br>கி.பா: 41 செவ் 1 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்: A/L சுயதொழில் (தையல்)<br>தொ.இ: G/8556 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2ம் பாதம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி தனியரார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் விவாகரத்துப் பெற்றவரும் தாரம் இழந்தவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/8539 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3ம் பாதம்<br>கி.பா: 24 உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BSCMSC விஞ்ஞான ஆராய்ச்சியாளர்<br>எதிர்பார்ப்பு: திருமணப்பதிவன்றே பிரிந்து விவாகரத்தானது<br>தொ.இ: G/8561 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவில் கொள்ள வேண்டும்

## கேப்பாபிலவு போராட்ட மக்கள் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

அரசியல் தலையீடு இன்றி பல்கலைக்கழக மாணவர்களுடன் முள்ளிவாய்க்கால் நிகழ்வினை நினைவில் கொள்ளவேண்டும் என்று கேப்பாபிலவு போராட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

கேப்பாபிலவில் 433 ஆவது நாளாக போராட்டம் மேற்கொண்டு வரும் ஆறுமுகம் வேலாயுத பிள்ளை நேற்று ஊடக சந்திப்பொன்றினை நடத்தியுள்ளார்.

இவ்வளவு காலமும் போராட்டம் நடத்திய நாங்கள் நியாயம் நீதியுடன் தர்மத்தின் வழியில் முன்னர் எவ்வாறு நடந்தமோ அதே வழிக்கு நாங்கள் நடக்க வேண்டும். கட்சி பேதம் இன்றி மக்களுடன் யாழ்.பல்கலை. மாணவர்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை உறுதியாக செய்ய வேண்டும். எங்களுக்குள் பிரிவினைகள் இருக்கக் கூடாது. ஒற்றுமையான தமிழர் என்பதை உலக நாடுகள் அறிய வேண்டும்.

நாங்கள் போராட்டத்தில் இருந்து கூட அரசியல் வாதிகளின் ஒற்றுமையை நான் காணவில்லை.

இதன் காரணமாக மாணவர்கள் மக்களுடன் இணைந்து அரசியல் பிரதிநிதிகள் குரல் கொடுத்து அரசியல் தலையீடு இல்லாமல் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாளை புனித நாளாகக்கொண்டாட வேண்டும். எங்கள் உறவுகளான உயிரிழந்த அனைத்து ஆத்மாக்களும் முள்ளிவாய்க்கால் மண்ணில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த ஆத்மாக்கள் நிம்மதி அடைய வேண்டும். எதிர்வரும் காலத்தில் தமிழர்களின் ஒற்றுமை ஆண்டவனால் விதிக்கப்பட வேண்டும். இந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் பிரிவைக் காட்டாமல் அனைவரும் ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டும். இதனை யாழ்.பல்கலைக்கழக மாணவர் அமைப்புடன் இணைந்து செய்தால் சிறப்பாக அமையும்.

நாம் பல்கலை. மாணவர்களுடன் இணைந்து அரசியல் பேதம் இன்றி முள்ளிவாய்க்கால் நிகழ்வை நினைவில் கொள்ள வேண்டும். யாழ்.பல்கலைக்கழக சமூகம் என்னிடம் வந்து கேட்டுள்ளார்கள் முள்ளிவாய்க்காலில் நினைவு செய்ய வேண்டும் என்று. நான் அதற்கும் இணக்கம் தெரிவித்து அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு நினைவில் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும்



(மட்டக்களப்பு)

சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வுகள் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நேற்றுக் காலை முதல் நடைபெற்றது.

இதற்கமைவாக, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மே தின நிகழ்வுகள் நேற்று "தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்று" என்னும் தலைப்பில் மே தின நிகழ்வு மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின், பிரதித் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான இரா.துரை ரெட்னம் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திர குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது விவசாயிகள், மீனவர்கள், கால்நடை பண்ணையாளர்கள், ஆசிரியர்கள், உள்ளூராட்சி சபை தொழிலாளர்கள், வேலையற்ற பட்டதாரிகள், தொண்டராசிரியர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (2-7)



பாசையூர் மக்களின் ஏற்பாட்டில் யாழ்.மாநகர சபை முதல்வர் கௌரவ இம்மானுவல் ஆர்னோல்ட்டை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பி.ப. 3.30 மணியளவில் நடைபெற்ற போது...

# மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் என்பன இணைந்து நுழைவாயில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் பார்வை குறைந்தவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது. இக்கண்ணாடி தேவைப்படுவோர் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை ஒருகடிதத் தலைப்பில் எழுதி சீனிவாசகம் வீதியிலுள்ள நிலையத் தலைவரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி விண்ணப்பங்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆகவே நூறு பேருக்கான கண்ணாடிகளே கைவசம் உள்ளபடியினால் விரைவாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (2-7)

# பேராசிரியர் கணேசலிங்கம் லண்டனில் காலமானார்

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் 06.05.2018 லண்டனில் காலமானார். இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக்கிளையின் நீண்டகாலம் தலைவராகவும் செயலாளராகவும் கடமையாற்றினார். இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறை பிரிவின் முன்னாள் தலைவருமாவார். இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தேசிய தலைமையகத்தின் உபதலைவராகவும் சேவை செய்தவர்.

தனது பல்கலைக்கழக கல்வியை பேராதனையில் பூர்த்தி செய்து பட்டம் பெற்றவர். உலகப் புகழ்பெற்ற கவாய் பல்கலைக்கழகத்தில் (MSC) பட்டத்தையும் PHD யினை லண்டன் பல்கலைக் கழகத்திலும்பெற்றவர். இலங்கையில் பேராதனை, யாழ்ப்பாணம் தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

அத்துடன் இவர் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளையும் புத்தகங்களையும் பதிப்பித்தவர். (2-134)

# பாரிய சிக்கலுக்குள் நாடு வீழ்ந்துள்ளது

## விக்டர் ஐவன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தற்பொழுது பாரிய நெருக்கடிக்கு உட்பட்டுள்ளதாகவும் இதனால் அரசாங்கமும் நாட்டிலுள்ள சகல அரச நிறுவன முறைமையும் பாரிய வீழ்ச்சிக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளயில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயலமர்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் அனைத்துப் பகுதிகளும் குப்பையாக மாறியுள்ளது. அரசியல்வாதிகளுக்கு மக்களிடத்திலுள்ள வரவேற்பும் காற்றாக மாறியுள்ளது.

எந்தவித சட்ட முறைமையும் செயற்படுத்த முடியாத அளவுக்கு நாட்டு நிலைமை மோசமடைந்துள்ளது. குறைந்தபட்சம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றைக் கூட சரியான முறையில் வெளியிட்டுக் கொள்ள முடியாத நிலைக்கு நாட்டு நிலைமை தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் தலைவர்களிடம் ஞானம் இல்லாத ஒரு நிலைமை காணப்படுவதாகவும், இதனால், பாரிய சிக்கலுக்குள் நாடு வீழ்ந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-7)

# அரச அதிகாரிகள்-வவு. நகரபிதா சந்திப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா நகரபிதா இ.கௌதமன் அரச திணைக்களங்களின் அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

வவுனியா நகரபிதாவாக பொறுப்பேற்ற அவர் நகரின் துரித அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் நோக்குடன் அரச திணைக்களங்களின் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

வவுனியா பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த 4 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நகரபிதா தலைமையில் இடம் பெற்றது. நகரசபை செயலாளர் தயாபரன், நகரபிதாவின் ஆலோசகர் சஜீந்திரா ஆகியோருடன் மாவட்ட அரச திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது நகரின் துரித அபிவிருத்திக்குரிய சில திட்டங்கள் நகரபிதாவினால் முன்மொழியப்பட்டு அதற்கான ஆதரவுகளை அதிகாரிகள் வழங்குவதாகவும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-250)



தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் சிறி சபாரட்னத்தின் 32 ஆவது நினைவேந்தலை முன்னிட்டு சிறிரெலோ இளைஞரணியினர் இரத்த தானத்தை நேற்று முன்தினம் வவுனியா பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் வழங்கியிருந்தனர். இந்நிகழ்வில் சிறிரெலோ இளைஞரணியின் தலைவர், செயலாளர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கி வைத்தனர். (2-281)



யாழ்.மாநகர சபை உறுப்பினர் கே.எம்.நிலாமின் தலைமையில் நேற்று நயினாதீவு ஜும்மா மஸ்ஜித் பள்ளியின் பொதுக்கிணறு திறந்து வைக்கப்பட்டது. இதில் யாழ்.,கிளிநொச்சி முஸ்லிம் செயலாளர் ஆர்.கே. சுவர்கஹான், தேசாபிமானி பரீத் இக்பால், முன்னாள் ஐக்கிய தேசிய கட்சி யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஜத்ரூஸ் சாகுல் ஹமீது, சமூக சேவையாளரும் Tearz அமைப்பின் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளருமான முஜாஹித் நிசார் மற்றும் ஆசிரியர் சுல்பிகார் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைவர் அமரர் சிறி சபாரத்தினம் போராளிகள் , பொது மக்கள் ஆகியோரின் 32 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) மன்னார் மாவட்ட தலைமை அலுவலகத்தின் ஏற்பாட்டில்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் தலைமையில் குறித்த அஞ்சலி பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

# மன்னாரில் நேற்று அதிகாலையில் மூன்று வீடுகள் மீது மின்னல் தாக்கம்

## உடைமைகள் சேதம்



(மன்னார்)

மன்னாரில் நேற்று அதிகாலை வேளையில் கடும் மழையுடன் கூடிய இடி, மின்னல் தாக்கத்தினால் மூன்று வீடுகள் மீது மின்னல் தாக்கியதில் குறித்த வீடுகளின் உடைமைகள் சேதமாகியுள்ளன.

நேற்று அதிகாலை 4.45 மணி முதல் மழையுடன் கூடிய இடி,மின்னல் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

இதன் போது மூர்வீதி, சாவக்கட்டு ஆகிய பகுதியிலுள்ள மூன்று வீடுகள் மீது மின்னல் தாக்கியுள்ளது.

இதன் போது குறித்த வீடுகளில் உள்ள பெறுமதி மிக்க மின் சாதனப்பொருட்கள் சேதமடைந்துள்ளதோடு, வீட்டு மின் இணைப்புக்களும், வீட்டு உடைமைகளும் சேதமடைந்துள்ளன.

வீடுகளில்உள்ளதென்னை மரங்கள் மீதும் மின்னல் தாக்கியுள்ளது. வீடுகளில் அனைவரும் உறக்கத்தில் இருந்த நிலையில் மின்னல் தாக்கியுள்ளது.

எனினும் உடைமைகளுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளபோதும், உயிர் ஆபத்துக்கள் எவையும் ஏற்படவில்லை.

குறித்த சம்பவத்தை தொடர்ந்து இன்று திங்கட்கிழமை காலை மன்னார் பொலிஸார், இராணுவத்தினர், பிரதேசச்செயலக அதிகாரிகள், மாவட்டச்செயலக அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு சேத விபரங்களை பெற்றுக்கொண்டனர். (2)



கிளிநொச்சி குமாரசுவாமிபுரம் அ.த.க பாடசாலையில் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வும் சிறைச்சாலைகள் அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் 4.5மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடம் பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் இணைந்து அண்மையில் திறந்து வைத்தனர். இதில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சொந்த மண்ணில் வாழ்வதற்கு நாங்கள் யாரிடம் கேட்க வேண்டும்

## சிந்தனையை செயல்வடிமாக்கியவர்கள் இரணைதீவு மக்கள் - சாள்ஸ் எம்.பி.

(கண்டாவளை)


சொந்த மண்ணில் நாங்கள் சென்று வாழ்வதற்கு நாங்கள் யாரிடம் கேட்க வேண்டும் என்ற அந்த சிந்தனையை செயல்வடிவமாக்கி இரணைதீவு மக்கள் சென்று காட்டியுள்ளனர் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைதீவில் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்ககோரிவரும் மக்களை அண்மையில் இரணைதீவில் சந்தித்து கலந்துரையாடிய போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இரணைதீவு மக்கள் தமீழ விடுதலைப்போராட்டத்தில் முழுமையான பங்களிப்பை செலுத்தியவர்கள்.அதனால் தான் அந்த தைரியமும் மனஉறுதியும் இருந்துள்ளது. அது தான் இந்த மக்களின் தாமாக வந்து குடியேறியதற்கு காரணம்.

இந்த மக்கள் தமது சொந்த நிலத்தில் சகல வசதிகளும் பெற்று யுத்தத்திற்கு முன்பு இந்தமக்கள் மீன்பிடியை எவ்வாறு மேற்கொண்டு வாழ்ந்தார்களோ அதே போல் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து தங்கள் பூர்வீக நிலத்தில் ஒரு மன நிறைவுடன் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவதற்கு நாங்கள் எல்லோரும் இணைந்து இந்த கிராமத்தை உத்தியோக பூர்வமாக அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக பல உதவிகளைப் பெறக்கூடிய வகையில் மாற்றியமைக்க முயற்சி செய்வோம் எனத் தெரிவித்துள்ளார். (2-315)




# வவுனியாவில் 'பனை வளத்தை காப்போம்' இளைஞர் அமைப்பு நேற்று விழிப்புணர்வு



(குருமன்காடு)

பனைவளத்தை காப்போம் என்னும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றை வவுனியா சுயாதீன இளைஞர் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

நேற்றுக் காலை வவுனியா, நெளுக்குளம் பிள்ளையார் ஆலயம் அருகில் உள்ள பனந்தோப்பு பகுதியில் இவ் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அடையாளமாக விளங்குகின்ற பனை வளம் அழிக்கப்பட்டு வருவதால் நீர்பற்றாக்குறை ஏற்பட்டு வரட்சி நிலை ஏற பட்டு வருகின்றது. அதை நம்பிய குடும்பங் களின் சுய சார்ப்பு பொருளா தார கட்டமைப்பும் சீர்குலைந்துள்ளது.

இதனால் பனைவ ளத்தை காத்து எமது இருப்பை பாதுகாப்போம் எனத்தெரிவித்தே இளைஞர்கள் இந்த விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன்தொடர்ச்சியாக வடக்கு இளைஞர்கள் பலர் ஒன்று கூடி மாலை மன்னார், மாவட்டத்திலுள்ள நானாட்டான் பகுதியில் நுங்குத்திருவிழா என்னும் பெயரில் பனைசார் உற்பத்திப் பொருட்கள், பனம் பொருட்களுடன் விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர். (2-250)

# தற்காலிகமாக உட்புற வீதி புனரமைப்பு



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி பொதுப்பிரதேசத்தில் நிலையத்தில் இருந்து பொதுச் சந்தை வரை செல்கின்ற நகரின் உட்புற வீதி கரைச்சி பிரதேச சபையினால் தற்காலிகமாக நேற்று புனரமைக்கப்பட்டது.

கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தக சங்கத்தினர், கிளிநொச்சி நகரின் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனின் விசேட பணிப்பில் நடைபெற்றது. (2-281)

# மகிந்த பிரதமராகத் தடையில்லை

## முன்னாள் அமைச்சர் செனவிரட்ன தெரிவிப்பு



(இரத்தினபுரி)

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட முடியாத போதிலும் அவர் பிரதமராக பதவி வகிப்பதில் எந்தத் தடையும் கிடையாது என முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.**

இரத்தினபுரியில் நேற்று இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தின் புதிய கூட்ட தொடர் இன்று ஆரம்பமாக உள்ளதுடன் அரசாங்கத்தில் இருந்து விலகிய தாம் உட்பட 16 பேர் கொண்ட அணி எதிர்க்கட்சி வரிசையில் அமரும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்சியுடன் கூட்டணி அமைத்து செயற்படுவது என்று தமது அணியினர் நிலையான முடிவில் இருப்பதாகவும் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட முடியாத போதிலும் அவர் பிரதமராக பதவி வகிப்பதில் எந்தத் தடையும் கிடையாது. நான் உட்பட எமது அணியினர் அவரது தலைமையின் கீழ் செயற்படுவதில் எந்தச் சிக்கலும் இருக்காது.

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாது போனால், நடுநிலையான ஒரு இடம் இருக்க வேண்டும்.

அந்த நடுநிலையான இடத்துடன் இணைந்து ராஜபக்ஷ ஆட்சியை கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தயாராக உள்ளது எனவும் ஜோன் செனவிரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

## இனவாதப் பேயை இல்லாது ஒழிப்போம் விழிப்புணர்வை ஏற்படுத்திய மே தின ஊர்வலம்

(கொழும்பு)

அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் மே தின ஊர்வலமானது, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட இந்த மே தின ஊர்வலத்தில் பாரம்பரிய இசை வாத்தியக் கருவிகள் இசைக்கப்பட்டு, மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, கரகாட்டம் என்பன இடம்பெற்றன.



குறிப்பாக இனவாதம் என்பதை பேயைப் போன்று சித்திரித்து, விழிப்புணர்வு பதாதைகள் தாங்கிச் செல்லப்பட்டன. அத்தோடு, நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் போதைப்பொருளை அழிப்பது தொடர்பான விழிப்புணர்வு பதாதையும் தாங்கிச் செல்லப்பட்டன.

அத்தோடு, உழைக்கும் மக்களின் உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அவர்கள் உழைப்பிற்காக பயன்படுத்தும் தள்ளுவண்டிகள் போன்றனவும் ஊர்வலத்தில் இடம் பெற்றன.

இந்த மே தின ஊர்வலத்தில் அமைச்சர் மனோ கணேசனும், நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், அரவிந்தகுமார், ஜனநாயக மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (இ-7)

## கூட்டு எதிரணியுடன் இணைந்தார் பண்டு பண்டாரநாயக்க எம்.பி.



(கொழும்பு)


தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்த பாராளுமன்ற உறுப்பினரான பண்டு பண்டாரநாயக்க நேற்று கூட்டு எதிரணியுடன் இணைந்து கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான பண்டு பண்டாரநாயக்க நேற்று திங்கட்கிழமை காலியில் இடம்பெற்ற கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் கூட்டு எதிரணியுடனும் இணைந்து கொண்டார்.

அத்துடன் அவரது ஆதரவாளர்கள் 500 பேரும் கூட்டு எதிரணியுடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தீ விபத்தால் பாரிய சேதம்








(கொழும்பு)

இரத்தினபுரி - கோலொன்ன-சூரியகந்த வீதியில் புலுதொட்ட சந்தியில் ஆடை வர்த்தக நிலையம் ஒன்றில் தீ பரவியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட இந்த தீப்பரவலுடன் வெடிப்பும் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் வர்த்தக நிலையம் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து மற்றும் ஆட்டோ ஒன்றுக்கும் தீயினால் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



சில்லாலை முத்துமாரியம்பாள் ஆலய புதுவருட விளையாட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வே.தர்மபாலன் மற்றும் கிராம உத்தியோகத்தர்களான க.சுதர்சன், க.அருள்ஞானானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விளையாட்டுக்களில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டதுடன், நிகழ்வில் விருந்தினர்களுடன், இளைஞர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## இலவச கண்வில்லையை வழங்கும் வேலைத்திட்டத்தால் அதிகளவு பயன்

### சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

இலவச கண்வில்லையை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் நாட்டில் வருடந்தோறும் கண் பார்வையற்றோரின் எண்ணிக்கை 12 இலட்சமாக இருந்ததாக சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சுகாதார பணியாளர் சபையின் ஆகக்கூடிய சேவையின் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்வில்லை சத்திர சிகிச்சை நோயாளர்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனால், அலுவலக நேரத்திற்குப் பின்னர், விசேட சேவையை பெற்றுக் கொள்வதற்கு வைத்தியர்களுடன் கலந்துரையாடப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டில் மாத்திரம் 10 ஆயிரத்து 661 கண்வில்லைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதற்காக 86 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லயனல் முஹந்திரம் இது குறித்து கருத்து வெளியிடுகையில், கண் வைத்தியசாலைக்காக 12 மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இதற்காக, 3300 மில்லியன் ரூபா நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

நாளாந்தம் சுமார் 2 ஆயிரம் நோயாளர்கள் கண் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தருகின்றனர்.

தேசிய வைத்தியசாலைக்கு மேலதிகமாக ஏனைய வைத்தியசாலைகளில் கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லயனல் முஹந்திரம் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளரை மக்களே தெரிவு செய்ய வேண்டும்

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

காலி முகத்திடலில் இலட்சக்கணக்கான மக்களை கூட்டி, அவர்களின் யோசனை மற்றும் நிலைப்பாட்டுக்கு அமைய ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பதை முடிவு செய்ய வேண்டும் என அந்த கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.





சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அப்படி மக்களை ஒன்று திரட்டிய மே தினக் கூட்டத்திலேயே ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய தேசியக்கட்சி கஷ்டங்களுக்கு உள்ளானது போதுமானது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியாளர் மட்டுமல்லாது ஐக்கிய தேசியக் கட்சியின் முழுமையான அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை வெல்வது பற்றி யோசிப்பதற்கு முன்னர், மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறும் சவாலை வெல்ல வேண்டும் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (இ-7)

## ஏமாற்றப்பட்ட இலங்கையர்கள் மொரீசியஸ் தீவில் கைது!

(கொழும்பு)


ஆட்கடத்தல்காரர்களால் ஏமாற்றப்பட்ட இலங்கையர்கள் குழு ஒன்று மொரீசிஸ் தீவில் கைது செய்யப்பட்டுள்ளது.

இதனை இலங்கைக்கான சீசெல்ஸின் உயர்ஸ்தானிகர் டிக்கிரி ஹேரத் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

பெருந்தொகை பணத்தை பெற்றுக்கொண்டு மொரீசியஸ் தீவில் தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாக இவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்கள் அங்கு ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் உரிய சட்ட ஆவணங்களை கொண்டிருக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டியே இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு இலங்கையர்களும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர். (இ-7)

## கோல்டன் பீகொக் விருதைத் திருடிய ஐந்து பேர் கைது!



(கொழும்பு)

காலஞ்சென்ற பிரபல சிங்கள மொழி திரைப்பட இயக்குநர் கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் விருதை திருடியமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் ஐவர் பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலஞ்சென்ற லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றவேளை, கடந்த 2 ஆம் திகதி அவருடைய வீட்டிலிருந்து கோல்டன் பீகொக் வாழ்நாள் சாதனையாளர் விருது திருடப்பட்டமை தெரிய வந்தது.

இந்நிலையில் குறித்த விருது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது கடந்த 5 ஆம் திகதி கடுவல - கொள்ளுப்பிட்டி வழித்தடத்தில் பயணிக்கும் 177 ஆம் இலக்க பேருந்திலிருந்து திருடப்பட்ட விருது மீட்கப்பட்டது.

இந்நிலையிலேயே விருது திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த கோல்டன் பீகொக் விருதானது (Golden Peacock Award) கடந்த 1965 ஆம் ஆண்டு டில்லியில் இடம்பெற்ற இந்திய திரைப்பட விருது வழங்கும் நிகழ்வில் கம்பெரலிய என்ற திரைப்படத்திற்காக லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸிற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மலேசியாவில் கைதான இலங்கையர்கள் இரண்டு சட்டங்களின் கீழ் தடுத்து வைப்பு

(கோலாலம்பூர்)

அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு செல்ல முயன்ற போது எண்ணெய்த் தாங்கி கப்பல் ஒன்றில் வைத்து மலேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட 131 இலங்கையர்கள் தொடர்பாகவும் கோலாலம்பூரிலுள்ள இலங்கைத் தூதரகம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தூதரகம், மலேசிய அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், இணைந்து பணியாற்றி வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



அதேவேளை, கைது செய்யப்பட்ட 131 இலங்கையர்களும், ஜோஹோர் பாரு மாகாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மலேசிய பொலிஸ் சிறப்புப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்ட 131 இலங்கையர்களில், 127 பேர், 1959/63 குடிவரவுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, ஜோஹோர் பாரு மாகாணத்தில் உள்ள பீகன் நேனாஸ் குடிவரவு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய நான்கு இலங்கையர்கள், 2007ஆம் ஆண்டின் ஆட்களைக் கடத்துவதற்கு எதிரான மற்றும் குடியேற்றவாசிகள் கடத்தலுக்கு எதிரான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட இலங்கையர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கைது செய்யப்பட்ட 131 பேரில், 43 பேரிடம், அகதிகளுக்கான ஐ.நா. முகவர் அமைப்பினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் இருப்பதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)


## பௌத்த விகாரை விவகாரம்;

## ஜனாதிபதி மற்றும் பிரதமர் நிலைப்பாட்டை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்

### ஓமல்பே தேரர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் விகாரை அமைப்பதை தடை செய்ய வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் நிலைப்பாட்டை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என தென்னிலங்கையின் பிரதான பௌத்த சங்க தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரின் இந்த அறிவிப்பு, அரசியல் யாப்புக்கு புறம்பானது மட்டுமல்லாது முறைகேடான ஒன்றாகவும் உள்ளது. இதனூடாக மத பேதம் ஏற்படுவதற்கு வழிவகுப்பதாகவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிவிப்பைச் செய்த சுமந்திரனின் பாராளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட வேண்டும் என்பதோடு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தேரர் தெரிவித்தார்.

சுமந்திரனுக்கு பௌத்த விகாரைகள் அமைப்பது மாத்திரமா பிரச்சினைக்குரியது. வேறு மதஸ்தலங்களை அமைப்பது அவருக்கு பிரச்சினையில்லையா? எனவும் தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகள் எங்கும் பௌத்த தளங்கள் சிதறிக் கிடக்கின்ற நிலையில், சுமந்திரன் இதுபோன்ற அறிவிப்புக்களை விடுப்பது யாருடைய அதிகாரத்தை பெற்றுக் கொண்டு என்று கேட்க வேண்டியுள்ளது. இவரின் அறிவிப்பு உண்மையிலேயே கொடூரமான ஒன்று எனவும் தேரர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஐ.தே.கவிற்கு மேலும் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மேலும் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த வகையில் 6 அல்லது 8 பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களுக்கு இவ்வாறு பதவி வழங்குவதற்கு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நாடாளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் 4 ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கும், இரண்டு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதவி வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

புத்திக்க பத்திரண, எட்வட் குணசேகர, லகி ஜயவர்தன, ஆனந்த குமாரசிறி, ரஞ்சித் அலுவிஹாரே உள்ளிட்டவர்களுக்கு இந்த பதவிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# பாரதம்

## அனிதா, மாணவன் தந்தை மரணம்
## நரபலி கேட்கும் நீட்தேர்வில் இருந்து நிரந்தர விலக்கு வேண்டும்
### மு.க.ஸ்டாலின் வலியுறுத்து



(சென்னை)

பரீட்சை எழுத சென்ற மாணவன் கஸ்தூரி மகாலிங்கத்தின் தந்தை மறைவுக்கு தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி ஆண்டுதோறும் நரபலி கேட்கும் நீட் தேர்வில் இருந்து நிரந்தர விலக்கு வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

மருத்துவக் கல்வியை பெறும் அளவுக்கு 12 தர தேர்வில் மதிப்பெண் பெற்றும், நீட் கொடுமையால் மருத்துவம் படிக்க முடியாமல் போன மாணவி அனிதாவின் உயிரை சென்ற ஆண்டு பறிகொடுத்தோம்.

நீட் தேர்வு மையங்களை வெளி மாநிலங்களில் ஒதுக்கி, தமிழக மாணவர்களையும் அவர்களுக்குத் துணையாக சென்ற பெற்றோரையும் அலைக்கழிக்கச் செய்து, மன உளைச்சலுக்குள்ளான கொடூரத்தால் கஸ்தூரி மகாலிங்கம் என்ற மாணவரின் தந்தை கிருஷ்ணசாமியை இந்த ஆண்டு பறிகொடுத்துள்ளோம்.

தந்தை கிருஷ்ணசாமி மாரடைப்பால் உயிரிழந்த விபரம் கூட தெரியாமல் மாணவர் கஸ்தூரி மகாலிங்கம் தேர்வு எழுதிக் கொண்டிருந்ததை நினைக்கும் போது நெஞ்சம் பதறுகின்றது.

மருத்துவப் பட்டம் பெற்று மருத்துவராகி எத்தனையோ நோயாளிகளின் உயிரைக் காக்கலாம் என்ற கனவில் இருந்த மாணவருக்கு, தன் தந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஏக்கமும் வேதனையும் காலம் முழுவதும் நீடிக்கும் எனத் தெரிவித்தார்.

மேலும், மாணவரின் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் இரங்கல்களை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ள ஸ்டாலின், ஆண்டுதோறும் நரபலி கேட்கும் நீட் தேர்விலிருந்து நிரந்தர விடுதலை கிடைக்க சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் லெபனான் நாடாளுமன்றத் தேர்தல்

(பெய்ரூட்)

லெபனான் நாட்டில் தற்போது சாத் அல் ஹரிரி பிரதமராக உள்ளார். அங்கு கடைசியாக 2009 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடந்தது.

லெபனானில் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படுகிறது.

ஆனால் அண்டை நாடான சிரியாவில் உள்நாட்டுப்போர் காரணமாக அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத நிலையில், லெபனானில் தேர்தல் நடத்தப்படாமல் 2 முறை நாடாளுமன்றம் நீடிக்கப்பட்டது.

இந்த நிலையில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு பின்னர் அங்கு நேற்று நாடாளுமன்ற தேர்தல் நடந்தது.

128 இடங்களுக்கு நடந்த தேர்தலில் மக்கள் ஆர்வமுடன் பங்கேற்று வாக்களித்தனர்.

பிரதமர் சாத் அல் ஹரிரி, தலைநகர் பெய்ரூட்டில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் வாக்களித்தார்.

அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்கும் ஐரோப்பிய யூனியன், பார்வையாளர்களை அனுப்பியுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்கிற ஆயிரக்கணக்கான லெபனான் மக்கள் முன்கூட்டியே வாக்களித்து விட்டனர். முதல்முறையாக அவர்களுக்கு இப்போதுதான் வாக்குரிமை அளிக்கப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

லெபனானைப் பொறுத்தமட்டில் நாடாளுமன்றத்தின் 128 இடங்களும் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் விகிதாசார அடிப்படையில் பிரித்துக்கொள்ளப்படுகின்றன.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் பதவிகள் மதத்தின் அடிப்படையில்தான் பிரித்துக் கொள்ளப்படுகின்றன. (7)

# நீட்தேர்வில் கட்டுப்பாடு; மாண

# தொல்.திருமாவளவன்,

(சென்னை)

நீட் தேர்வுக்காக மகனுடன் கேரள மாநிலம் எர்ணாகுளம் சென்ற திருவாரூரை சேர்ந்த கிருஷ்ணசாமி மரணம் அடைந்த சம்பவத்துக்கு தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

மருத்துவக் கல்லூரி படிப்புக்கும், பல் மருத்துவக் கல்வி படிப்புக்கும் நீட் தேர்வு எனும் சமூக நீதிக்கு குழி பறிக்கும் அநீதியான திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. கிராமப்புற குடும்பத்துப் பிள்ளைகள், பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகள் தமிழக அரசு கல்வித் திட்டத்தில் பாடசாலை இறுதித் தேர்வை எழுதி, மருத்துவக் கல்லூரிகளில் இடம்பெற்று உலகப் புகழ் பெற்ற மருத்துவர்களாகி சேவை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையை நிர்மூலமாக்கும் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட நீட் தேர்வை எதிர்த்து தமிழக சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வந்தும், அந்த மசோதாவுக்கு அனுமதி கொடுக்க மத்தியில் ஆளும் மோடி அரசு ஏற்பாடு செய்யவே இல்லை.

இந்த நிலையில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வகையில், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ராயநல்லூர்- விலக்குடியைச் சேர்ந்த கஸ்தூரி மகாலிங்கம் என்ற மாணவன் தன் தந்தை கிருஷ்ணசாமியோடு கடந்த 5ஆம் திகதி எர்ணா குளத்திற்குச் சென்று ஏர்லைன்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்து நேற்று முன்தினம் தேர்வு எழுதச் சென்றுள்ளார்.

இதனால் ஏற்பட்ட மன உளைச்சலால் அவரது தந்தை கிருஷ்ணசாமி தங்கியிருந்த விடுதியிலேயே மாரடைப்பால் உயிர் நீத்தார். அநாதைகளாக மத்திய அரசால் ஆக்கப்படுகிறார்களா? என்ற கேள்விதான் முன் நிற்கிறது.

தமிழக மாணவிகள் நீட் தேர்வு மையங்களுக்குச் சென்றபோது, சோதனை என்ற பெயரால் அவர்களது மேலாடைகளையும் சோதனையிடுகிறோம் என்று அலங்கோலப்படுத்திய அக்கிரமம் சகிக்க முடியாதது, மன்னிக்க முடியாதது. இத்தகைய மன வேதனையுடன் மாணவர்கள் எப்படி தேர்வு எழுத முடியும்?

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் கூறியதாவது,

இந்திய அளவில் நீட் தேர்வு கூடாது என்பது விடுதலை சிறுத்தையின் நிலைப்பாடாகும். எனினும் தற்போது நீட் தேர்வு நடைபெறுகின்ற சூழலில் அதனை முறையாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

குறிப்பாக தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள், கேரளாவிற்கும், ராஜஸ்தானுக்கும் சென்று தேர்வு எழுதக்கூடிய நிலை வேதனைக்குரியதாகும். மாநில அரசு இதனை கண்டும் காணாமல் இருப்பது வன்மையாக கண்டனத்திற்குரியதாகும்.



இந்த நிலையில் கேர்ளாவில் மாணவனின் தந்தை அலைக்கழிப்பால் மரணம் அடைந்திருப்பது வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேர்வு எழுதக்கூடிய மாணவ-மாணவிகளை சோதனை என்ற பெயரால் இந்த ஆண்டும் மிக மோசமான முறையில் நடத்தி உள்ளனர். உலகில் எந்த நாட்டிலும் இந்த கேவலம் இல்லை.

மாணவ-மாணவிகளை அவமதிப்பது, இழிவு செய்வது சகித்துக் கொள்ள முடியாத வன்கொடுமையாகும். இதனை விடுதலை சிறுத்தை மிக வன்மையாக கண்டிக்கிறது. இந்த

## காவிரி மேலாண்மை வாரியம் உடனே அமைக்க வேண்டும்
### தமிழக அரசு உச்ச நீதிமன்றில் இடைக்கால மனு



(டில்லி)

தமிழக அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றில் இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளது.

காவிரி பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த இறுதி தீர்ப்பின்படி வரைவுத் திட்டத்தை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் முடிவடையும் நிலையில், இந்த வழக்கு உயர்நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழகத்திற்கு 4 டிஎம்சி நீர் திறந்து விட கர்நாடகாவிற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து உள்ளது.

மேலும் கர்நாடகா உத்தரவை மீறினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என உச்ச நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்து இருந்தது. அப்போதே கர்நாடகா சார்பில் 4 டிஎம்சி நீர் தர மறுப்பு தெரிவிக்கப்பட்டது. காவிரி நீர் தரமுடியுமா? முடியாதா? என நீதிபதிகள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்த நிலையில் உச்ச நீதிமன்றில் கர்நாடக மாநிலம் சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் போதிய மழை இல்லாததால் தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறக்க இயலாத நிலையில் உள்ளோம் என கூறப்பட்டுள்ளது. மேலும் அதில் இந்த ஆண்டு ஏப்ரல் இறுதி வரை தமிழகத்திற்கு 116.7 டிஎம்சி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

காவிரியில் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டதைவிட கூடுதலாக 16.66 டி.எம்.சி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. தற்போது கர்நாடக மாநிலத்தின் தேவைக்கு மட்டுமே தண்ணீர் இருக்கிறது என அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு நீர் திறக்க இயலாது என கர்நாடக அரசு மறுப்பு தெரிவித்துள்ள நிலையில் தமிழகம் இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழக அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றில் இடைக்கால மனுத்தாக்கல் செய்துள்ளது.

மே இறுதி வரை செல்லாமல் உடனடியாக கர்நாடக அரசை 4 டிஎம்சி தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனவும் அதில் கூறி உள்ளது. (7)

## ஈரானுடனான
## டொனால்ட்
### பிரித்தானிய வெ



(தெஹ்ரான்)

ஈரானுடனான அணுசக்தி உடன்படிக்கையை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கைவிடக்கூடாது என வோஷிங்டனில் இருக்கும் பிரித்தானியாவின் வெளியுறவுத்துறைச் செயலாளர் பொரிஸ் ஜோன்ஸன் வலியுறுத்தியுள்ளார்.

வோஷிங்டனில் இருக்கும் வெளியுறவுத்துறை செயலாளர், ஈரானுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அணுசக்தி உடன்படிக்கையினை டொனால்ட் ட்ரம்ப்

# வெளிநாடு



# ...ணவன் தந்தை மரணம் வைகோ கண்டனம்



தேர்வை நடத்தும் பொறுப்பை பாட சாலை கல்வி வாரியங்களிடம் ஒப்ப டைக்க வேண்டும்.

தமிழகத்த்தை பொறுத்த வரையில் இனி புதிதாக சி.பி.எஸ்.இ. பாடத்திட் டத்திற்கான பாடசாலைகளுக்கு அனு மதி வழங்கக்கூடாது.

தமிழக மாணவர்கள் வெளி மாநி லங்களில் தேர்வு எழுதும் வகையில் அலைக்கழிக்கப்படுவதற்கு தமிழக அரசின் மெத்தனப்போக்கே காரண மாகும்.

வெளி மாநிலங்களில் தேர் வு எழுதும் தமிழக மாணவர்கள் தேர்ச்சி பெற முடியாமல் போனாலும் உயர்ந்த தகுதி மதிப்பெண்களை பெற முடியா மல் போனாலும் அதற்கு தமிழக அரசே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் சேலத்தில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

நீட் தேர்வில் மாணவி களுக்கு ஆடை கட்டுப்பாடு விதிக்கப்பட்டது கண்டிக்கத் தக்கது. வெளி மாநிலத்தில் தேர்வு எழுத வைத்து தமி ழக மாணவர்களை அலைக் கழித்துள்ளனர். தமிழக மாண வர்கள் டாக்டர் ஆவதை தடுக்க இதுபோன்ற செயல்களில் மத்திய அரசு ஈடுபட்டுவருகிறது.

தமிழ்நாட்டில் படித்து தமிழகத்தில் மருத்துவர் ஆகும் ஏழை - எளிய மாண வர்களுக்கு தடையாக இருக் கும் இந்த நீட் தேர்வை நிரந் தரமாக தடை செய்ய வேண்டும்.

நீட் தேர்வில் முறைகேடு கள் நடந்துள்ளன. இந்த முறைகேட்டில் தேர்வு மையத் துக்கும் சி.பி.எஸ். இற்கும் தொடர்புள்ளது. இந்த முறை கேடு குறித்து சி.பி.ஐ. விசா ரணை நடத்த வேண்டும்.

புதிய நீதிக்கட்சி நிறு வனத் தலைவர் ஏ.சி.சண் முகம் கூறியிருப்பதாவது,

நீட் தேர்வு மையங் க ளில், சோதனை என்கிற பெய ரில், பயங்கரவாதிகளை போல் பரிசோதனைகளை அதிகாரிகள் மேற்கொள்வது கடுமையான மனிதவுரிமை மீறலாகும்.

இராணுவம், பொலிஸ் ஆகிய பணிகளுக்கு ஆட் களை தேர்ந்தெடுக்கும் போது கூட இத்தகைய கொடூரமான அத்துமீறல்கள் நடப்பதி ல்லை. தமிழக மாணவர் களை இவ்வாறு சித்திர வதை செய்வதன் மூலம், அவர்களுக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தி, சரியாக தேர்வு எழுத முடியாத சூழ்நிலையை உரு வாக் குகின்றனர்.

இவர்களின் இத்தகைய செயற்பாடுகள் மத்திய அரசில் உள்ள ஆட்சியாளர்களுக்கு அவப் பெயரை உருவாக்கும் என்பதை அறிந்தும், இவ் வாறு செய்வது கடும் கண்ட னத்திற்குரியதாகும். (7)

# ...ான அணுசக்தி உடன்படிக்கையை ...ட் ட்ரம்ப் கைவிடக்கூடாது

## வெளியுறவுத்துறை செயலாளர் வலியுறுத்து



கைவிடக்கூடாது எனவும் அவ்வாறு கைவிடுதல் இந்தச் சூழ்நிலையில் தவறான முடிவு எனவும் வலியுறுத்தி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கி ழமை ஊடகவியலாளர்களிடம் தெரி வித்திருந்தார்.

ஈரான் தன்மீது விதிக்கப்படும் பொருளாதாரத் தடைகளையும் அழுத் தங்களையும் அமெரிக்கா திரும் பப்பெற வேண்டுமென்பதற்காகத் தனது அணுசக்தி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வருகின்ற மே 12 ஆம் திகதிக்கு முன் னர் உடன்படிக்கை நீடிப்பில் கையெழுத்திடவேண்டு மென இங்கிலாந்து மற் றும் ஐரோப்பிய நட்பு நாடுகள் டொனால்ட் ட்ரம்பினை வலியுறுத்தி வருகின் றன.

இந்நிலையில் இங் கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஒபாமாவின் ஆட்சியில் ஏற் படுத்தப்பட்ட இந்த உடன் படிக்கையினைப் பாதுகாக் கும் முயற்சியில் மறை முக மாகச் செயற்படுகின்றன எனவும் இந்த உடன்படி க்கை "முட்டாள்தனமானது" எனவும் அமெரிக்க ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் விமர் சித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (7)

# நான்காவது தடவையாக புடின் ஜனாதிபதியாக பதவியேற்பு



(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதியாக, விளாடிமிர் புடின் நான்கா வது தடவையாக பதவியேற் றுள்ளார். கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற புடின் நேற்றைய தினம் பதவியேற்றுள்ளார்.

கடந்த 18 வருடங்களாக ஜனாதிபதி அல்லது பிரத மராக அதிகாரத்தில் உள்ள புடினை, எதேச்சதிகாரமிக்க வர் என அந்நாட்டின் எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டின.

கடந்த சனிக்கிழமை, ரஷ்யாவில் புடினுக்கு எதி ராக 19 நகரங்களில் போராட் டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக் கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது.

கடந்த மார்ச் மாதம் நடை பெற்ற தேர்தலில், 76 சதவீத வாக்குகளைப் பெற்று, ரஷ்ய ஜனாதிபதியாக விளாடி மிர் புடின், மீண்டும் தெரிவானார், எனினும் இத்தேர்தலில் முறை கேடுகள் நடைபெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர் கள் தெரிவிக்கின்றனர்.

புடினுக்கு சவாலாக இருக்க க்கூடிய ஒரே வேட்பாளராகப் கருதப்பட்ட அலெக்ஸிநவால்னி தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டது. ஊழல் வழக்கில் அவர் குற்றவாளி யாக காணப்பட்டதால் தேர் தலில் போட்டியிடும் தகுதியை நவால்னி இழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும் இந்தக் குற்றச்சாட்டுகளை நவால்னி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# பெண்கள், குழந்தைகள் உட்பட 45 பேர் படுகொலை

## கால்நடை திருடும் கும்பல் அட்டகாசம்



(நைஜர்)

ஆபிரிக்க நாடான நைஜீ ரியாவில் உள்ள கிராமம் ஒன்றில் கால்நடை திருடும் கும்பல் பெண்கள், குழந்தை கள் உட்பட 45 பேரை ஈவு இரக்கமின்றி கொலை செய் துள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியா வில் உள்ள காதுனா மாநி லம் ட்ரின் க்வாரி என்ற கிரா மம் ஒன்றில் கடந்த சனிக் கிழமை இந்த கொடூர சம்ப வம் நடந்துள்ளது. ஆயுதம் தாங்கிய கால்நடை திருடும் கும்பல் அந்த கிராமத்தில் உள்ள 45 பேரை கொன் றுள்ளனர். இதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் அதிக மானோர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிராந்திய அரசு, கொள்ளை யர்கள் விரைவில் கூண் டோடு அழிக்கப்படுவார்கள் என உறுதிபட கூறியுள்ளது. கடந்த மாதம் இதேபோல, 14 சிறார்கள் கொல்லப்பட்ட னர் என்பது குறிப்பிடத்தக் கது.

இந்நாட்டின் பல கிராமப் பகுதிகளில் கால்நடைகளை திருடுவதற்கென பல குழுக் கள் உள்ளன.

கால்நடைகளை திருடி இறைச்சி நிறுவனங்களிடம் விற்று இலாபம் பார்ப்பது இவர்களின் வழக்கமான ஒன்றாக உள்ளது.

திருடும் போது கிராமத்தி னர் இடையூறு செய்தால் மொத்தமாக அவர்களை கொல்லவும் இந்த குழுக்கள் தயங்குவது இல்லை. (7)

# 2ஆம் உலகப் போரில் பங்கேற்ற இராணுவ வீரர் பட்டம் பெற்றார்

## 96 ஆவது வயதில் சாதனை

(மாட்ரிட்)

இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற ஸ்பெயின் நாட்டை சேர்ந்த இராணுவ வீரர் 96 வயதில் பட்டம் பெற்று தனது ஆசையை நிறைவேற்றி உள்ளார்.

ஸ்பெயின் நாட்டை சேர்ந் தவர் பாப்பார்கர். 96 வய தான இவர் இரண்டாம் உல கப்போரில் பங்கேற்ற இரா ணுவ வீரர். கல்லூரியில் இறுதி ஆண்டு படித்த போது இரண்டாம் உலகப் போர்



தீவிரமாக இருந்தது. எனவே, இவர் போருக்கு அனுப்பப் பட்டார்.

போர் முடிந்த பிறகு அவ ரால் கல்லூரி படிப்பை தொடர முடியவில்லை. டொலீடோ நகருக்கு திரும்பிய அவர் பணியில் தீவிரமாக இருந் தார். அதனால் அவரால் பட்டப் படிப்பை முடிக்க முடியவில்லை.

இதற்கிடையே வயது முதிர்ந்த நிலையில் இருந்த அவர் பட்டப்படிப்பை முடிக்க வேண்டும் என விரும்பினார். டொலீடோ பல்கலைக்கழகத் தில் சேர்ந்து படித்து பட்டப் படிப்பை முடித்தார்.

அதைத்தொடர்ந்து 68 ஆண்டுகளுக்கு பிறகு தனது 96 வயதில் அவர் பட்டம் பெற்றார். அவரை குடும்பத்தி னரும், நண்பர்களும் வாழ்த் தினர். (7)

## பொலிஸ் அதிகாரிகள் உட்பட

# இலஞ்சம் பெற்ற 11 முக்கிய புள்ளிகள் கைது

(கொழும்பு)

**இவ்வருடத்தின் கடந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் இலஞ்சம் பெற்ற அரச அதிகாரிகள் 11 பேரை கைது செய்ய முடிந்ததாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர் நெவில் குருகே தெரிவித்துள்ளார்.**

இந்த 11 பேரில் ஜனாதிபதி செயலக பிரதானியும் அரச மரக் கூட்டுத்தாபன தலைவரும் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் தவிர, கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸ் அதிகாரிகள் ஐவர் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது சுற்றிவளைப்பு பிரிவு அதிகாரிகளுக்கு தொடர்ந்தும் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்கு ஏற்ப சுற்றிவளைப்புக்களை மேற்கொள்கின்றோம். இலஞ்சம் தொடர்பிலான முறைப்பாடுகள் ஒவ்வொரு நாளும் குவிந்த வண்ணமுள்ளன. கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்தே நாம் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்கின்றோம்.

இலஞ்சம் ஊழல் தொடர்பிலான முறைப்பாடுகள் இருப்பின் 1954 எனும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் ஆணையாளர் நெவில் குருகே அறிவித்துள்ளார். (இ-7)

## 200 பில்லியனின் கதி அதோ கதி

# சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவர விடமாட்டேன்- எஸ்.பி.சபதம்



(கொழும்பு)

சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம் காரணமாக சமுர்த்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுப் பதவியில் இருந்து கடந்த மாதம் எஸ்.பி.திஸாநாயக்க பதவி விலகியிருந்தார்.


கடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது சமூக வலுவூட்டல் அமைச்சு ஐக்கிய தேசியக் கட்சியின் தயா கமகேவிடம் வழங்கப்பட்டுள்ளதுடன், சமுர்த்தியும் அதன் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிலையில் சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கீழ் இயங்கும் தனியானதொரு வங்கியாக அதனை செயற்படுத்தவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேதின உரையில் தெரிவித்திருந்தார்.

எனினும் எக்காரணம் கொண்டும் அதனை செயற்படுத்த விடப் போவதில்லை என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சூளுரைத்துள்ளார். சமுர்த்தி வங்கியில் 200 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வைப்புப் பணம் உள்ளது.

இந்நிலையில், மத்திய வங்கியை பட்டப் பகலில் கொள்ளையடித்தவர்களின் கையில் சிக்கினால் சமுர்த்தி வங்கியின் கதி அதோ கதி தான் என்றும் எஸ். பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆபத்தாக மாறியுள்ள ராவணா பொலிஸார் அவசர எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் ராவணா எல்ல நீர் வீழ்ச்சியில் ஆபத்து நிலைமை ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளையில் தற்போது நிலவும் அடை மழை காரணமாக ராவணா எல்ல நீர்வீழ்ச்சியில் பாரிய அளவு நீர் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது.

இதன் காரணமாக ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ராவணா எல்ல நீர் வீழ்ச்சியில் பாரிய அளவு நீர் அதிகரித்துள்ளதுடன் ஏனைய நாட்களை விடவும் அதிக நீர் வெளியேறிச் செல்கிறது.

நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர்.

இந் நிலையில் அவ்வாறு யாரும் செல்ல வேண்டாம் என பொலிஸார் எச்சரித்துள்ளனர். குளிக்கச் சென்றால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால் அந்த பகுதிக்கு செல்வதனை தற்போது தவிர்க்குமாறு சுற்றுலா பயணிகளிடம் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)

# மே தினக் கூட்டத்தைப் புறக்கணித்த ஐ.தே.கவின் அதிருப்திக் குழுவினர்



(கொழும்பு)

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன் தினம் நடத்திய மேதினக் கூட்டத்தில் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலர் கலந்து கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச உள்ளரங்கில் மே தினக்கூட்டத்தை நடத்தியது.

கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், ஐ.தே.கவின் உபதலைவர் ரவி கருணாநாயக்க, அமைச்சர் சாகல ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர்கள், வசந்த சேனநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க, பாலித ரங்கே பண்டார, பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமிந்த விஜேசிறி, பந்துல பண்டாரிகொட உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவில்லை.

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் மீது அதிருப்தி கொண்டுள்ளதால் ஐ.தே.கவின் மே தினக் கூட்டத்தை கட்சியினர் பலரும் புறக்கணிக்கவுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

ஐ.தே.கவின் தவிசாளர் கபீர் ஹாசிம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதால் மே தினக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

சமிந்த விஜேசிறி உறவினரின் மரணச் சடங்கில் பங்கேற்றதாலும், ரவி கருணாநாயக்க காலியில் சமய நிகழ்வுகளில் பங்கேற்றதாலும் மே தினக் கூட்டத்திற்கு வரவில்லை என்றும் கூறப்படுகிறது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### எதிர்த்துப் பேசாமல் மறுப்பது எப்படி?

கருத்து வேறுபாடுகள் இருந்தால் உடனே அடித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு சாராரும் கருத்து வேறுபாடு கள் இருந்தால் வாயைக் கூடத் திறக்கக் கூடாது என்று ஒரு சாராரும் எதிர் பார்க்கின்றார்கள்.

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் இரு வேறுமுனைகளுக்குப் போய்விட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். இந்த இரு வழிகளுக்கும் இடைப்பட்ட வழி ஒன்று உண்டு. அது தான் நாம் காணப் போவது.

நம்முடைய மரியாதைக்குரியவர்கள் நமக்குப் பிடிக்காத ஒரு கருத்தை நம்மீது திணிக்கும் போது நாம் அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள். நமக்கோ இருப்புக் கொள்வதில்லை. மறுத்து ஏதாவது சென்னால் உடனே எதிர்த்துப் பேசுகிறான்/ள் என்று கோபப் படுகிறார்கள். விரோதப் போக்குக் காண்பிக்கிறார்கள். குதிரை கீழே தள்ளியது பேதாது என்று குழியும் பறித்த கதையாய் நாம் விரும்பாத செயலைச் செய்ய நேரிடுவதற்குத் தண்டனை வேறு தனியாகக் காத்திரு க்கிறது.

இந்தச் சூழ் நிலையை நம்மால் ஏற்க முடியாத ஒரு கருத்தை அதுவும் நம் மரியாதைக்குரியவர்கள் சொல்லும் போது நாம் அதைப் பற்றி என்ன எண்ணுகிறோம் என்பதை முகபாவத்தை வைத்து வெளிப்படுத்தக் கூடாது என்பது முதல் வழி. அவர்கள் பேசப் பேச நாம் கடுகடுப்பாகவோ அதிருப்தியாகவோ முகத்தை மாற்றிக் கொண்டால் ஓகோ அப்படியா சேதி? உன்னை இந்தக் காரியத்தைச் செய்ய வைத்தே தீருகிறேன் பார்! என்றோ உன்னை இதற்குச் சம்மதிக்க வைக்காவிட்டால் என் கௌரவம் என்னவாவது? என்றோ அவர்கள் முடிவுக்கு வந்து விடுகிறார்கள். எனவே முகபாவத்தை மறைத்துவிட வேண்டும்.

இரண்டாவது அவர்கள் அதைச் சொல்லும் போது ஆர்வமின்றிக் கேட்டுக் கொள்வது அல்லது அலட்சியப்படுத்து வது ஆகிய இரு செயல்களையும் செய்யக் கூடாது. கேட்டுக் கொள்வதற்கே சலிப்பா இருக்கிறதா உனக்கு? என்று இவர்கள் கோபம் கொள்வார்கள். ஆதிக்கம் செய்பவர்களின் இரண்டாவது இயல்பு இது. அதையும் வெல்ல வேண்டும்.

மூன்றாவது; அவர்கள் சொல்வதை வைத்து அவர்களை மடக்க நமக்கு வசமாகச் சில வாதங்கள் கிடைத்தாலும் அவற்றை அப்போதே உடனே சொல்லிவிடக் கூடாது.

சரி சரி என்று கேட்டுக் கொண்டு நகர்ந்து விட வேண்டும். எப்போது அவர்களுக்கு நாம் என்ன நினைக்கிறோம் என்பதைப் பற்றிய அக்கறை இல்லையோ அப்போதே அவர்களுக்கு நாம் செல்லுவதை வாங் கிக் கொள்ளும் மனநிலையும் இல்லை என்பது தெளிவு.

கெஞ்சம் உரிமையுடன் பேச முடிந்தால் ( உதாரணம்: மனைவி கணவன்) நீங்கள் இப்போது கோபமாக இருக்கிறீர்கள். இதைப் பற்றி நாம் அப்புறம் முடி வெடுப்போம் என்று மெல்லச் சொல்ல வேண்டும்.

மேலதிகாரி அல்லது முதலாளி என்றால் காலையில் தலையாட்டிவிட்டு மாலையில் நீங்கள் சொல்கிறபடி செய்தால் இன்னென்ன பிரச்சினை வரும் போல் தெரிகிறது என்று சொல்ல வேண்டும்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் எதிர்த்துப் பேசாமலேயே நம் உணர்வுகளைச் சொல்லிச் சமாளித்துவிட முடியும்.

அதே நேரத்தில் அவர்கள் வழியில் சிந்தித்து அதன்படி செயற்படும் போது அதில் வெற்றி கிடைத்து நாம் நன்மையும் அடைந்துவிட வழியிருக்கிறது என்ப தையும் பார்க்க வேண்டும்.

காரணம் அதிகார பூர்வமாக திணிக்கப்படும் அனைத்தும் கெடுதல் என்கிற தவறான கண்ணோட்டம் நமக்கு வந்து விட்டால் அது நன்மையைச் செய்யாது.

**லேனா தமிழ்வாணன்**

# ‘கொழும்புத் தமிழர்களை பலவீனப்படுத்தக்கூடாது’

## ஊடகங்களிடம் அமைச்சர் மனோ கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு என்பது, அதிகாரங்கள் குவிந்த முக்கியமான பகுதியாக இருப்பதால், கொழும்பிலிருக்கும் தமிழ் மக்கள், பலமாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன், அதைப் பலவீனப்படுத்தும் வகையில் ஊடகங்கள் செயற்படக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் மேதினக் கூட்டம், கொழும்பு ஜம்பட்டா வீதியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

“இலங்கையில் கொழும்பு என்பது முடிவெடுக்கும் இடம். எல்லா செயலகங்களும் அதிகாரங்களும் கொழும்பில் தான் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தாலும், அதை முதலில் கொழும்பில் தான் பேசுகிறோம்”

இதேவேளை, அரசமைப்பு மாற்றம் என்பது, வெறுமனே நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைக்காகவும் தேர்தல் முறைக்காகவும் மாத்திரம் பயன்படுத்திவிட்டு, வடக்கு - கிழக்கு மக்களின் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையை மறக்கடிக்க செய்யும் “நரித் தந்திரத்தை”, பெரும்பான்மைக் கட்சிகள் கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்துள்ள அமைச்சர் மனோ கணேசன், இதனைத் தெரிந்து கொண்டே தெரியாததுபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது என, தனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், “தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சமஷ்டி ஆட்சிமுறை பெற்றுத்தருவதாகக் கூறியே, வடக்கு, கிழக்கு மக்களிடம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. ஆனால் தற்போதுவரையில் சமஷ்டி பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இதனை ஒத்திவைத்துவிட்டு, தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று பெற்றுத்தரப்பட வேண்டும் என்கிறார்கள்”. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மீது விமர்சனங்களை முன்வைத்த அமைச்சர் மனோ, அவர் “தெளிவாகப் பேச மறுக்கிறார்” என்று குறிப்பிட்டதோடு, சுமந்திரனின் கருத்தும் கொள்கையுமே, தற்போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கருத்தாக இருக்கின்றது என்றும் தெரிவித்தார். (இ-7)

# பிரதி சபாநாயகரை நியமிப்பதில் சிக்கல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் வெற்றிடமாகவுள்ள பிரதி சபாநாயகர் பதவிக்கு, ஒருவரை நியமித்துக்கு கொள்வது தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் சிக்கலான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையில், செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், பிரதி சபாநாயகராக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு வரையே நியமிக்க வேண்டும்.

அதனடிப்படையிலேயே, பிரதி சபாநாயகராக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டார். பிரதமருக்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில், பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த திலங்க சுமதிபால, அரசாங்கத்திலிருந்து விலகி, பிரதி சபாநாயகர் பதவியையும் இராஜினாமாச் செய்தார்.

இந்நிலையில், ஏற்பட்டுள்ள பிரதி சபாநாயகரின் வெற்றிடத்துக்கு, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவரையே நியமிக்க வேண்டும். ஆனால், சுதந்திரக் கட்சியிலிருந்து அப்பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடக்கு—கிழக்கில் விகாரைகள் அமைப்பதைத் தடுக்கமுடியாது

# பௌத்த கலாசாரம் நிலைபெற்றால் மட்டுமே இலங்கையில் நல்லிணக்கம் பாதுகாக்கப்படும்

## ஜயந்த சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை எங்கும் பௌத்த கலாசாரம் நிலைபெற் றால் மட்டுமே நல்லிணக்கம் பாதுகாக்கப்படும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் விகாரைகளை அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் செய்திகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


பௌத்த கலாசார அடையாளங்களை நிர்மாணிப்பதற்கு தடைபோடும் எதுவித உரிமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இல்லை.

இந்நாடு பௌத்த நாடு. அரசாங்கம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளிப்பது அரசியலமைப்பின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்நாட்டில் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களும் பின்பற்றப்படுகின்றன. அவற்றின் வணக்கத்தலங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு பௌத்த தரப்பில் இருந்து எதிர்ப்புக் காட்டப்படவில்லை.

பௌத்தம் என்பது நல்லிணக்கமாகும். இலங்கையில் பௌத்தம் நிலைநிறுத்தப்பட்டால் மாத்திரமே நல்லிணக்கம் நிலைபேறாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் இளைஞனின் புதிய கண்டுபிடிப்பு



(மாத்தளை)

மாத்தளை இளைஞன் ஒருவர் விவசாய நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளும் வகையிலான இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்த இயந்திரம் மூலம் மண்வெட்டி இன்றி களைகளை பிடுங்கவும், மண்ணை சமப்படுத்தவும் முடியும்.

அத்துடன் தேவையான அளவில் மண்ணைக் கிண்டி பயிர்களுக்கு பசளையிடவும் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை, இதனை கைகளினாலேயே இயக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## சகல மக்களும் சம அந்தஸ்துடன் வாழ

# இலங்கையில் பௌத்த சமூகம் வலுப்படுத்தப்படல் வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு துறைகளில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முயற்சிக்கும் வேளையில், பௌத்த சமூகத்தை வலுப்படுத்துவது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் பௌத்த சமூகத்தை போன்றே தமிழ், முஸ்லிம் மக்களும் சம அந்தஸ்துடன் வாழ்வதற்கான சிறந்த ஒரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கு பௌத்த சமூகம் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)



## பனங்காட்டில் புத்திக் கூர்மை

(யாழ்ப்பாணம்)

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் பனங்காட்டில் புத்திக் கூர்மை என்னும் நிகழ்வு நாளை மறுதினம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும். (இ)

# இலங்கையில் பெரும்பாலானோர் முறைசாரா தொழில் பிரிவுகளில்

(கொழும்பு)

புதிய ஆய்வறிக்கைக ளின் படி, இலங்கையில் தொழில் புரிவோரில் 63.5 சதவீதமா னவர்கள், முறை சாரா தொழில் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஒழுங்கமைப்பு மேற்கொண்டுள்ள முறைசாரா தொழில் குறித்து ஆய்வின் பிரகாரம் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி முறைசார்ந்த தொழில் பிரிவில் 37.3 சதவீதமானவர்களே உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் முறைசாரா தொழில் பிரிவில் உள்ளடக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில், 63.5 சதவீதமானவர்கள் ஆண்களாவர்.

இதேவேளை விவசாயம் சாராத ஏனைய முறைசாரா தொழில்பிரிவுகளில் 49.2 சதவீதமான இலங்கையர்கள் பணியாற்றுகின்றமையும் தெரியவந்துள்ளது. (இ-7)

# கொலை, ஊழல் வழக்குகளை தினமும் விசாரிக்க நீதிமன்றம்

## நாளை நாடாளுமன்றம் வருகிறது சட்டமூலம்; அமைச்சர் ராஜித சேனாரட்ன தகவல்

(கொழும்பு)

ஊழல்வாதிகள், கொலையாளிகளின் வழக்குகளை தினமும் விசாரிக்கும் வகையில் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்தும் சட்டமூலம் நாளை 9 ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்படும் எனவும் இதன் பின்னர் தினமும் வழக்குகள் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகளை சட்டத்திற்கு முன்கொண்டு வர முடியும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய ஊழல்வாதிகள், கொலையாளிகளுக்கு சட்டத்தின்படி தண்டனை வழங்கப்படும்.

இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதன் மூலம் 2020 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பெரும் வெற்றியை பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

2018 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியினரின் ஆண்டு. தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர பங்களிப்பை செய்த அனைத்து தரப்பினருக்கும், ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகி பதவி உயர்வுகள் கிடைக்காதவர்கள், ஊதிய உயர்வு கிடைக்காதவர்களுக்கு பிரதமரின் கையால் அவை மீண்டும் வழங்கப்படும்.

விவசாயிகளின் கடன்கள் இரத்துச் செய்யப்படும். சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்.

2015 ஆம் ஊழல் நிறைந்த அரசாங்கத்தைக் கவிழ்த்து நல்லாட்சியை ஏற்படுத்தி பின்னர் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் வழங்கிய வாக்குறுதிகளில் பலவற்றை நிறைவேற்றியுள்ளோம்.

ஊழல்வாதிகள், கொலையாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நல்லாட்சி அரசாங்கம் மீதுள்ள ஒரு குற்றச்சாட்டு மத்திய வங்கியின் பிணை முறி சம்பந்தமானது மட்டுமே. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தொன் கணக்கில் நிதி மோசடிகளும், கொள்ளையடிப்புகளும் நடந்தன. அவற்றுடன் ஒப்பிடும் ஒரே ஒரு தவறு மட்டுமே தற்போதைய ஆட்சியில் நடந்துள்ளது.

மத்திய வங்கியின் பிணை முறி கொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பில் எமது தரப்பினரும் தேர்தல்களில் பேச ஆரம்பித்தனர். இதன் காரணமாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வி ஏற்பட்டது. மேலும் 16 பேர் இந்த ஊழல் பற்றி பேசினர்.



அவர்கள் 16 பேரும் தற்போது அரசாங்கத்தில் இருந்து வெளியேறியுள்ளனர். அவர்கள் அரசாங்கத்தில் இருக்கவே எதிர்பார்த்தனர்.

எனினும் ஏற்பட்ட கடும் எதிர்ப்பு காரணமாக அவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற நேர்ந்தது.

தற்போதைய அரசாங்கம் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தது. சமுர்த்தி கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டன. இந்த கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்டவர்கள் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்தவர்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை. அந்த துறைக்கு பொறுப்பாக இருந்த எஸ்.பி. திஸாநாயக்கவே இதற்கு காரணம்.

தற்போது சமுர்த்திக்கு பொறுப்பான அமைச்சர் எங்களிடம் இருக்கின்றார். சமுர்த்தி கிடைக்காதவர்கள் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு இந்த ஆண்டுக்குள் சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்குமாறு நான் எமது அமைச்சரிடம் கூறினேன்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது பிரதமருக்கு எதிராக வாக்களித்தவர்கள் அரசாங்கத்தில் இருக்கவே முயற்சித்தனர். அவர்களின் வெட்க நரம்பு வெட்டப்பட்டுள்ளது.

இவர்கள் 16 பேரையும் கட்டாயம் வெளியேற்ற வேண்டும் என நான் கூறியிருந்தேன் எனவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். (இ-7)

## ஜேம்ஸ் பீரிஸின் வீட்டில் திருடப்பட்ட ஐபோன் நாவலப்பிட்டியில் மீட்பு



(கொழும்பு)

கடந்த 29 ஆம் திகதி காலமான சிங்கள திரைப் படத்துறையின் மூத்த இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் வீட்டிலிருந்து கடந்த 2ஆம் திகதி காணாமல் போயிருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐபோன் (தொலைபேசி) நாவலப்பிட்டி பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் வீட்டில் இருந்து திருடப்பட்டிருந்த தங்க மயில் பதக்கம் மற்றும் தொலைபேசி தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய கைதுசெய்யப்பட்ட 5 சந்தேக நபர்கள் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமையவே, குறித்த தொலைபேசி நாவலப்பிட்டி பெயலி வீதியில் உள்ள ஒரு தொலைபேசி விற்பனை வர்த்தக நிலையத்தில் 6000 ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்ததையடுத்து, வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 40 — பரமசாமி பஞ்சாட்சரம்

மேலே பனி இருக்கக் கீழே பனி உருகி நீராக ஓடிக்கொண்டிருக்கும். சில இடங்களில் பனியின் கீழ் ஓடும் நீரின் சத்தமும் கேட்டது. என்ன விந்தை என்றால் 5500 மீ. உயரத்தில் ஆறு பனிப்படலத்திற்குக் கீழே ஓடிக்கொண்டு இருக்கின்றது.

7.12 கௌரி குண்டு "பார்வதி குளம்"

கிரிவலத்தில் டோல்மா பாஸைத் தாண்டிய பின் கௌரி குண்டு என அழைக்கப்படும் பார்வதி குளத்தை அடைந்தோம். இது மிகவும் ஆழமான ஒரு பள்ளத்தாக்கில் இருக்கின்றது. இதன் நீர் மிக புனிதமான தீர்த்தமாகக் கருதப்படுகின்றது. இச் குளத்தை மேலிருந்து பார்க்கும் போது பச்சை நிறமாகத் தெரியும்.

பார்வதி அம்மனுக்குப் பிடித்த நிறம் பச்சை என்பது குறிப்பிடத்தக்கது. இத் தீர்த்தத்தைச் சேகரிப்பது சிரமமான காரியமாகும். ஒருவர் கீழே சென்று நீரை எடுத்து வர ஒரு மணித்தியாலம் வரை எடுக்கும். எங்களோடு வந்து கொண்டிருந்த உதவியாளர்கள் தீர்த்தத்தை மிகவும் விரைவில் எடுத்து வந்து தேவைப்படுவோருக்குக் கொடுத்தார்கள்.

பார்வதி தேவியின் காவற் கணங்களில் ஒருவரான "டாகினியின்" இருப்பிடம் இதுவாகும் என்று கூறப்படுகின்றது. வாழ்வின் சகல ஐஸ்வரியங்களையும் பாதுகாப்பினையும் தருகின்ற "டாகினி" இங்கு எழுந்தருளி இருப்பதால் இந்த இடத்தைத் தரிசித்து, வணங்கிப் பிரார்த்திப்பவர்களுக்கு வாழ்க்கையில் ஐஸ்வரியம் உண்டாகும் என்றும் வறுமையோ, அச்சமோ ஏற்படாது என்றும் நம்புகிறார்கள்.

ஆதிபராசக்தி பல அவதாரங்களைப் பூமியிலே எடுத்தருளிய போது தாட்சாயினி, உமா, கௌரி, பார்வதி எனப் பல திருநாமங்களால் அழைக்கப்பட்டார். ஆதிபராசக்தி மறுபிறவி எடுக்க மனம் கொண்டு இமயமலை அரசன் பர்வத இராசன் என்னும் இமயான்



கௌரி குண்டு(பார்வதி குளம்)

தனக்குப் பிள்ளை வேண்டும் என்று செய்த கடும் தவத்தினால் ஆதிபராசக்தி குழந்தையாக இக்குளக் கரையிற் பர்வத இராசன் முன் தோன்றினார். குழந்தையைக் கண்ட பர்வத இராசன் மகிழ்ச்சியடைந்து குழந்தையை எடுத்து இராணியிடம் ஒப்படைத்தான். இராணியும் மகிழ்ச்சியுடன் வளர்த்தார்.

இக்குழந்தைக்கு முதலில் கௌரி எனப் பெயரிட்டு வளர்த்தனர். கௌரி இங்கு வளர்ந்து இக் குளக்கரையிற் தவமிருந்து சர்வேஸ்வரனைத் திருக்கல்யாணம் செய்தார். அதன்பின் பார்வதி என அழைக்கப்பட்டார் என்று புராணங்கள் கூறுகின்றன.

சிறந்த மணாளனை மகளிர் அடைவதற்காகவும் அவ்வண்ணம் பெற்ற கணவன் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ வேண்டும் என்பதற்காகவும் கௌரி பூசை செய்து வருவது இன்றும் நடைமுறையில் இருக்கிறது என்பது குறிப் பிடத்தக்கது. இப்புனிதமான மங்கல இடத்தைத் தரிசித்துக் கௌரி தீர்த்தத்தையும் ஒரு குப்பியில் வாங்கினோம்.

இந்த இடத்திலே தான் விநாயகர் உருவாகியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

சூரபத்மனின் தொல்லைகளைத் தாங்க முடியாத திருமாலும் பிரம்மாவும் சிவனிடம் சென்று பணிந்து முறையிடச் சிவபெருமான் "திருமாலே! பிரம்மாவே! பயம் வேண்டாம். நான் முருகன் என்ற குமாரனை உண்டாக்கி அதி விரைவில் அவ்வசுரனை அழிக்கச் செய்கிறேன்" என்று கூறி மறைந்து விட்டார். அதன் பிரகாரம் சிவபெருமான் காத்திகேயனை அவதரிக்கச் சுருணை கூர்ந்தார். கௌரி குளத்தருகில் கார்த்திகேயன் வளர்ந்து முருகக் கடவுளாகிச் சூரபத்மனின் ஆணவத்தை அடக்கி ஆட்கொண்டார் என்று கந்த புராணம் கூறுகின்றது.

இக்குளத்தில் ஒருவரும் நீராடுவதில்லை. இந்த அற்புதமான மங்கல இடத்தைத் தரிசித்து மகிழ்ந்து மேற்கொண்டு நடக்க ஆரம்பித்தோம். பாதை கீழ் நோக்கிப் போவதை அவதானித்து நிதானமாக நடந்தோம்.

(தொடரும்)

# மனிதாபிமான தொண்டர் நிறுவனம் சர்வதேச செஞ்சிலுவை தினம் இன்று

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு (ICRC)**

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் (IFRC)**

**தேசிய சங்கங்கள்**



ஹென்றிடுனான்ட் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமானத் தொண்டர் நிறுவனம் செஞ்சிலுவைச் சங்கமாகும். ஹென்றிடுனான்ட் அவர்களின் பிறந்த தினமான மே 8 ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

மனிதாபிமானம், பாரபட்சமின்மை, சுயாதீனம், ஒருமைப்பாடு நடுநிலைமை, தொண்டர் சேவை, சர்வதேச மயம் என செஞ்சிலுவைச் சங்கத்தின் 7 கொள்கைகள் போற்றப்படுகின்றன.

ஜெனிவாவில் தலைமையகமாகச் செயற்படும் இவ் அமைப்பு 194 நாடுகளில் மனித நேயத்தையும் சுயகௌரவத்தையும் பாதுகாக்கின்ற ஓர் அமைப்பாக இன்று செயற்பட்டு வருகின்றது. சொல்பரினா என்ற இடத்தில் ஏற்பட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை கண்ணுற்ற ஹென்றிடுனான்ட் அவர்களுக்கான மருத்துவ சேவைகளையும், உயிர் பாதுகாப்பு சேவைகளையும் வழங்கியதுடன் 40,000 இற்கும் மேற்பட்ட மக்களின் உயிரைப் பாதுகாத்து உடல்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார். இந் நினைவில் இருந்து மீளாத ஹென்றிடுனான்ட் 1862 இல் சொல்பரினா நினைவுகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு சர்வதேச ரீதியாக இவ் அமைப்பின் அவசியத்தை இவ் உலகிற்கு உணர்த்தினார். 1863 இல் வேறு நால்வரை இணைத்து உலகளாவிய சர்வதேச சங்கத்தை ஆரம்பித்தார்.

இவர் முக்கியமாக தொண்டர்கள் சர்வதேச சங்கத்திற்கு இணைக்கப்பட வேண்டும் என்ற காரணத்துக்காக 1864 இல் பல்வேறு சங்கங்களையும் இராஜதந்திரிகளையும் இணைத்து முதலாவது ஜெனிவா சாசனத்தை உருவாக்கினார். இது தான் இன்று சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஓர் தொண்டர் அமைப்பாக உருவாகுவதற்கு காரணமாகியது.

செஞ்சிலுவைச் சங்கம் வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக உருவாக்கப்பட்டதாகும். இது ஹென்றிடுனான்ட் பிறந்த சுவிஸ் நாட்டின் தேசியக் கொடியாகிய வெள்ளைச் சிலுவையுடன் சிவப்புப் பின்னணியை மாற்றி அமைத்ததாகும். இதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கமானது உலகளாவிய ரீதியில் செயற்படும் ஓர் அமைப்பாகும். இது செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச் சங்கம் என்ற தேசிய அடிப்படையில் செயற்படுவதுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (IFRC) சர்வ செஞ்சிலுவைச் சங்க குழு (ICRC) என உலகில் பெரும்பாலான பகுதிகளில் செயற்பட்டு வருகின்றது.

உலகில் ஏற்படக் கூடிய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மனித சமுதாயத்திற்கு துன்பங்களை துடைத்து நலிவுற்றிருக்கும் மக்களுக்கு உடன் நிவாரணங்களும் மாற்று வழிமுறைகளைக் கொண்ட உதவிகளையும் வழங்கி வருகின்றது. இயற்கை அனர்த்தத்தினால் மட்டுமின்றி ஆயுதப் போராட்டம் நடைபெறும் காலங்களிலும் அனர்த்த வேளைகளிலும் மக்களுக்கான மனிதாபிமான செயற்பாட்டினை செய்து வருகின்ற ஓர் அமைப்பாகும்.

தேசிய சங்கங்கள் அந்நாட்டு நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்து அப்பிரதேசத்தினருக்கு மனிதாபிமான செயற்பாட்டை நல்கி வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்கக் குழுவும் மற்றும் செஞ்சிலுவைச் செம்பிறைச் சம்மேளனமும் உலகளாவிய ரீதியில் தனது மனிதாபிமான சேவைகளை நேரடியாகவும் தேசிய சங்கம் ஊடாகவும் செய்து வருகின்றன. செஞ்சிலுவைச் சங்க யாப்பானது உன்னதமான குறிக்கோளையும் கோட்பாட்டையும் கொண்டதாகும். இதனால் தான் சர்வதேச மட்டத்தில் நிலைத்து நிற்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. சர்வதேச சங்கங்களும் தேசிய சங்கங்களும் இக் கோட்பாட்டினை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் செயற்படுத்தி வருகின்றன.

உலகளாவிய ரீதியில் செஞ்சிலுவைச் சங்கங்கள் மூன்று அங்கங்களாக செயற்பட்டு வருகின்றன.

1958 ஆம் ஆண்டு இளைஞர் மத்தியிலும் பாடசாலை மத்தியிலும் உருவாக்கப்பட்ட இச் செஞ்சிலுவைச் சங்கம் 1980 ஆம் ஆண்டுக்குப் பின் சிறந்த நிர்வாக அமைப்புடன் உருவாக்கப்பட்டது.

கடந்த 3 சகாப்தங்களாக ஏற்பட்ட யுத்த காலத்தின் போது பல்வேறு சேவையை விரிவுபடுத்தி மருத்துவ சேவை, நடமாடும் மருத்துவ சேவை, அம்புலன்ஸ் சேவை, இரத்தானம், செஞ்சிலுவைச் சங்க பரப்புரைகள், முதலுதவிச் சேவை, முதலுதவிப் பயிற்சிகள், நிவாரணப் பணிகள் என்பன வழங்கியதுடன் யுத்தம் முடிவுற்றபின் மீள்குடியேறிய மக்களுக்கு சுகாதார சேவை, மருத்துவ சேவை என்பன வழங்கியதுடன் இடம்பெயர்ந்த மக்களுக்காக வீடுகளையும் அமைத்துக் கொடுத்தது.

இன்றும் சிரமதானம், நடமாடும் மருத்துவ சேவை, சுகாதார சேவை, அனர்த்தத்திற்கு முகம்கொடுத்தல் போன்ற செயற்பாடுகளையும் செய்து வருகின்றது.மேலும் டெங்கு, சிக்குன்குனியா என்பன ஏற்படாமல் மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி ஒட்டுமொத்தமாக மக்கள் சுகாதாரத்துடன் வாழ்வதற்கு ஆரம்ப சுகாதார அறிவினை மக்களுக்கு ஏற்படுத்தி சுகமான வாழ்க்கைக்கு வழி வகுக்கின்றது.

எனவே செஞ்சிலுவைச் சங்கமானது சர்வதேச ரீதியிலும் தேசிய அடிப்படையிலும் இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தம் ஏற்படும் போது பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தையும் துயரத்தையும் துடைத்து அவர்களின் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை உருவாக்கும் ஓர் சர்வதேச அமைப்பாகும்.

கு. பாலகிருஷ்ணன்
தலைவர்
இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்
யாழ்.கிளை

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1406

### சியாம்

வடிவேலு அண்ணே! நீங்க பேஸ்புக்ல இருக்கீங்களா?



நான் இல்லடா தம்பி... ஆனா என் போட்டாவை வைச்சுதான்டா இந்த பேஸ்புக்கே நடக்குது...

### சுரேஷ்

பிய்யாத தோசை வேணும்னு அவளிட்ட கேட்டதும் அவளும் ஆசையா போட்டுத் தந்து...!

இப்ப பிய்க்காம சாப்பிடுங்கன்னு கரண்டியோட பக்கத்தில நிப்பா பாருங்க அவதாங்க பொண்டாட்டி

இப்ப என்னடா பண்ணலாம்னு தோசையை வெறிக்க வெறிக்க பார்த்துவிட்டு இருப்பான் பாருங்க அவன்தான் The great புருசன்...!

### அஜந்தன்

அவளை கல்யாணம் பண்ண முடியலியேன்னு சிலர் இவளைக் கல்யாணம் பண்ணிட்டமேன்னு சிலர்



எவளையுமே கல்யாணம் பண்ண முடியலையேன்னு பலர்... ஆக எவனும் நிம்மதியா இல்லை...!

### ராகுலன்

நீ மனுசனா மிருகமான்னு கேட்டா கோபப்படுற ஆளுங்க, நீ சிங்கம்டா, நீ புலிடா என்னு சொன்னா சந்தோசப்படுறாங்க



அதெல்லாம் மிருக கட்டகரில வராது போல...

### ராம்குமார்

ஒரு மழை நாளில் உன்னோடு வந்த பின்புதான் தெரிந்தது உன் சுயரூபம்... ங்கொய்யால புல்லா மேக்கப்பு



### ராஜ்குமார்

மனைவியின் பேச்சைக் கேட்காத கணவர்கள் இருக்கலாம்



ஆனால்... மகளின் பேச்சைக் கேட்காத தந்தைகள் இருக்கவே முடியாது...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனி அரசை அமைப்போம்

## பிரதமர் ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)

அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாம் தனி அரசாங்கமொன்றை அமைப்போம். அதுமாத்திரமின்றி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை 20 வருடங்களுக்கு கொண்டு செல்வதே எனது இலக்காகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வரலாற்றில் கடந்த 2017 ஆம் ஆண்டின் போதே அதிகளவிலான ஏற்றுமதி வருமானமும், வெளிநாட்டு முதலீடும் பதிவானது. ஆனால் இந்த ஆண்டு அதனை விடவும் பன்மடங்காக வெளிநாட்டு முதலீடுகளையும் ஏற்றுமதி வருமானத்தையும் அதிகரிப்பதுடன் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளையே நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாம் தனி அரசாங்கமொன்றை அமைப்போம். அதுமாத்திரமின்றி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை 20 வருடங்களுக்கு கொண்டு செல்வதே எனது இலக்காகும் என்றாலும் அந்த காலப் பகுதியில் நான் இருப்பேனோ தெரியாது என்றாலும் அதற்கான தலைமைத்துவத்தை நான் தற்போது உருவாக்கியுள்ளேன். எவ்வாறெனினும் 20,30 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை உருவாக்குவோம்.

அத்துடன் தற்போது ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக செயற்படகூடியவர்கள் தற்போது யாரும் இல்லை. அரசாங்கத்திற்கு எதிராக சரத் வீரசேகரவும் லண்டனிலுள்ள ஒரு சில தமிழ் அமைப்புமே ஜெனிவாவில் எதிர்ப்பு வெளியிடுகின்றன.

வெசாக் பண்டிகை காரணமாக இம்முறை மே தினக் கூட்டத்தை ஏழாம் திகதிக்கு நடத்த பிற்போட்டோம். இவ்வாறான சம்பவம் டட்லி சேனாநாயக்க காலத்திலும் நடந்துள்ளது. எனினும் முதலாம் திகதி பேரணியும் கூட்டமும் நடத்துவதற்கு நாம் தடை விதிக்கவில்லை.

இம்முறை மே தினக் கூட்டத்தை தொழிலாளர்களுக்கு உபகாரம் செய்யும் நோக்குடனே சுகததாசவில் நடத்த தீர்மானித்தோம். இங்கு மே கூட்டம் நடத்த ஏற்பாடு மேற்கொண்டமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கின்றனர். எனினும் ஐ.தே.க. புதிதாக சிந்திக்கும் கட்சியாகும். அதன் காரணமாகவே தொழிலாளர்களுக்கு மதிப்பளிப்பதற்கு இம்முறை எமது மே தினக் கூட்டத்தை இங்கு நடத்த தீர்மானித்தோம். நல்லாட்சி அரசாங்கத்தின் மீதும் ஐக்கிய தேசியக் கட்சியின் மீதும் இவ்வளவு காலம் நம்பிக்கை வைத்திருந்தமைக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நாட்டில் தொழிலாளர்களின் தொகை சுதந்திரத்திற்கு முன்னரான காலப் பகுதியில் குறைவாக காணப்பட்டது. எனினும் நாட்டில் ஹோட்டல்கள், தொழிற்சாலை, துறைமுக அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறையின் ஊடாக அதிகளவிலான தொழிலாளர் வர்க்கம் என்பன ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியை தவிர்ந்த வேறு எந்த கட்சியாவது தொழிற்சாலைகளை நிறுவி வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதா? இல்லை என்றே கூற வேண்டும்.

இதன்பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சியாக களமிறங்க முடியுமாக இருந்த போதிலும் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் பிரதான நோக்கம் ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை இல்லாதொழிப்பதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குறிக்கோளும் அதுவாகதான் இருந்தது. ஆகவே எமது நோக்கம் ஒன்றாக இருந்தமையினால் பொது வேட்பாளரை களமிறக்க தீர்மானித் தோம்.

இந்நிலையில் தற்போது ராஜபக்ஷவினர் மீதான பயத்தை இல்லாமல் செய்துள்ளோம். வெள்ளை வான் கடத்தலை ஒழித்து கட்டியுள்ளோம். ஊடக சுதந்திரத்தை உருவாக்கியுள்ளோம். ஆனாலும் ஊடக சுதந்திரத்தை தற்போது நாம் ஏற்படுத்தி கொடுத்தாலும் என் மீதே ஊடகங்கள் அதிக விமர்சனங்களை முன்வைக்கின்றன.

ராஜபக்ஷ ஆட்சியின் போது இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தால் ஊடகங்கள் மயானத்திற்கே சென்றிருக்கும். எவ்வாறாயினும் ஊடகங்கள் என் மீது தாக்குதல் நடத்தினால் தாக்குதல் நடத்தும் ஊடகங்களுக்கான பார்வையாளர் எண்ணிக்கை குறைவடைந்து விடும் என்பதனை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அபிவிருத்தி என்ற பெயரில் கடன் பெற்று அம்பாந்தோட்டையில் துறைமுகமொன்று நிர்மாணித்தனர். அதனால் எந்தவொரு பிரயோசனமும் கிடையாது. எனினும் தற்போது அந்த துறைமுகத்திற்கான கடன் சுமையை நாம் தீர்த்து விட்டோம். துறைமுகத்திற்கான கடன் பிரச்சினை இல்லை. தற்போது அத்துறைமுகம் பெரும் வளர்ச்சி காணவுள்ளது.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக பெரும் சிரமத்திற்குள்ளானோம். பொருளாதாரத்தை நல்லதொரு நிலைமைக்கு கொண்டு வருவதற்கு மக்களின் மீது அதிக சுமைகளை சுமத்த வேண்டி ஏற்பட்டது. இதன்படி அரசாங்கத்தினால் கடந்த காலங்களில் எதுவும் செய்ய முடியாத காரணத்தினால் ஐக்கிய தேசியக் கட்சியினர் மக்களின் பல விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

ஆகவே அதற்காக நான் உங்களிடம் மன்னிப்பு கேட்கின்றேன். ஒரு சில் குறைபாடுகளின் காரணமாக மக்கள் மீது அதீத சுமை சுமத்த வேண்டி ஏற்பட்டது. என்றாலும் கடன் சுமை நீக்கியே ஆக வேண்டும். கடன் சுமையை போக்காவிட்டால் நாட்டில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படாது. அடுத்த தலைமுறையினரே இதனால் பாதிக்கப்படுவர். ஆகவே கடன் சுமையை அடுத்த தலைமுறைக்கு விட்டு விடாமல் தற்போது தீர்த்து வைக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன பல அடுத்த தலைவர்களை உருவாக்கி விட்டே சென்றார். எனினும் பின்னர் எமது கட்சியின் தலைவர்கள் பலர் கொலை செய்யப்பட்டனர். ஆனால் அதில் நான் சாதாரணமானராகவே இருந்தேன்.

கட்சியின் நிலைமையை பார்க்கும் போது தலைமை பதவிக்கு யாருமே கிடையாது. இந்நிலைமையிலேயே கட்சியின் தலைமை பொறுப்பை நான் ஏற்றேன். அதுமாத்திரமின்றி கட்சியின் மாவட்ட மட்டத்திலும் தலைவர்கள் இருக்கவில்லை.

இந்நிலையில் கட்சியில் புதிய தலைவர்களை உருவாக்குவதற்கு எனக்கு பெரும் சவால் ஏற்பட்டது.

இந்நிலையில் தற்போது கட்சியின் தலைமைத்துவத்தை புதிய தலைமுறைக்கு வழங்க தயாராக உள்ளேன். ஆகவே தற்போது இரண்டாம் நிலை தலைவர்களை உருவாக்கியுள்ளேன். இன்னும் பல தலைவர்களை உருவாக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். எவ்வாறெனினும் அடுத்த தேர்தலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்போம்.

தற்போது சமுர்த்தியை ஐக்கிய தேசியக் கட்சி வசப்படுத்தியுள்ளது. இந்நிலையில் கட்சியினருக்கு சமுர்த்தி வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். கடந்த காலங்களின் போது சமுர்த்தி விநியோகத்திலும் மோசடிகள் நடந்துள்ளது. சமுர்த்திக்கு மூன்று நாளை 25 வீத செலவிட வேண்டியதற்கு 52 வீதம் செலவிட்டுள்ளனர்.

ஆகவே இது தொடர்பில் நிதி அமைச்சினால் விசாரணை செய்யவுள்ளோம். எவ்வாறெனினும் சமுர்த்தி மோசடிக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் முற்போக்கு கூட்டணியின் மே தினப்பேரணியும் கூட்டமும்





(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணியின் மே தினப் பேரணியும் கூட்டமும் தலவாக்கலை நகரில் நேற்று நடைபெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நல்லிணக்க அமைச்சருமான மனோ கணேசன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர்களான மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமாகிய இராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற மே தினக் கூட்டமானது தல்வாக்கலை பேருந்து தரிப்பிடத்திலிருந்து பேரணியாக வந்து தலவாக்கலை நகர மைதானத்தை சென்றடைந்தது.

பின்னர் அங்கு மே தின கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றது.

இந் நிகழ்வில் நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் .எம். திலகராஜ், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், மத்திய மாகாண சபை உறுப்பினர்களாகிய ஸ்ரீதரன், ராஜாராம், ராம் சிங் பொன்னையா, சரஸ்வதி சிவகுரு, உதயகுமார், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். பிலிப், மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அ. லோரன்ஸ், முற்போக்கு கூட்டணியின் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# இ.தொ.கா.வின் மே தின நிகழ்வு



(ஹற்றன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 79 வது மே தின நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணிக்கு இ.தொ.காவின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. மே தின பேரணியானது நுவரெலியா சினிசிட்டா நகர சபை மண்டபத்தின் அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பேரணி நுவரெலியா அஞ்சல் நிலையம் வரை இடம்பெற்றதுடன், ஏனைய இரண்டு பேரணிகளில் ஒன்று நுவரெலியா வியாபார மத்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அடுத்த பேரணி நுவரெலியா ஜனாதிபதி மாளிகைக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மூன்று பேரணிகளும் நுவரெலியா அஞ்சல் நிலையத்திற்கு அருகில் ஒன்றிணைந்து நுவரெலியா வாகன தரிப்பிடத்தில் அமைக்கப்பட்ட பிரதான மேடையை வந்தடைந்தது. இ.தொ. காவின் மே தின பேரணியில் ஆறுமுகன் தொண்டமான், சமூக நலன்புரி ஆரம்ப கைத்தொழில் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், மத்திய மாகாண இந்து கலாசார தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் தமிழ் கல்வி அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கணபதி கனகராஜ், பிலிப்குமார், சக்திவேல், பிரதேச சபையின் தவிசாளர்கள் மற்றும் பெருந்திரளான ஆதரவாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோடைக்காலத்தில் வியர்வை-அலர்ஜியை தவிர்ப்பது எப்படி?

இந்த ஆண்டு கோடைக் காலம் தொடங்குவதற்கு முன்னரே வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துவிட்டது. இவற்றை எப்படி எதிர்கொள்வது?

"சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால் இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம்"

### வியர்க்குரு

வெயில் காலத்தில் அதிகம் பேரை பாதிக்கும் முக்கியமான பிரச்சினை வியர்க்குரு. உடலில் வியர்வை தங்குவதால்தான் வியர்க்குரு ஏற்படுகிறது. இதைத் தடுக்க, தினமும் இரண்டு வேளை குளிப்பதும், வெயிலில் சென்று வீட்டுக்குத் திரும்பியவுடன் கை, கால்களை குளிர்ந்த நீரில் கழுவுவதும் வியர்க்குருவை தவிர்க்க உதவும். வியர்க்குருவைச் சொறிந்தால் அது தொற்றுக்கு வழிவகுக்கும்... கவனம்!

### சீழ்க் கட்டிகள்

நோய் எதிர்ப்புத் திறன் குறைவதாலும், சுகாதாரமற்ற பழக்கவழக்கங்களாலும் ஏற்படக்கூடியவை வெயில் கால சீழ்க்கட்டிகள். சருமத்தில் கிருமித்தொற்று ஏற்படுவதாலும், உடற்சூட்டாலும் கூடச் சீழ்க்கட்டிகள் உருவாகும். முதுகு, கழுத்து, அக்குள் மற்றும் தொடைப் பகுதிகளில் இவை உருவாகும். சிறிய கொப்புளங்கள் போலக் காட்சியளிக்கும் இந்தக் கட்டிகள் வீங்கிக் காணப்படும், வலியெடுக்கும். இந்தக் கட்டிகளை உடைக்கக் கூடாது. தொற்று ஏற்படுவதற்குள் மருத்துவரை அணுக வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் சாப்பிடக் கூடாது.

### அம்மை நோய்

கோடையில் உருவாகும் நோய்களில் முதன்மையானது, "சிக்கன் பாக்ஸ்" எனப்படும் சின்னம்மை. கோடையில் வீரியமாக செயலாற்றும் இந்தக் கிருமி, எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களை விரைவாகத் தாக்கும். நீர்ச்சத்து குறைந்தவர்களுக்கும் சின்னம்மை ஏற்படும். பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து காற்று வழியாக, மற்றவர்களுக்கு எளிதாகப் பரவும். அதிக காய்ச்சல், பின் கழுத்து, முதுகு, கை போன்ற இடங்களில் சிறுசிறு கொப்புளங்கள் வந்து, ஒரு வாரத்தில் மறைந்துவிடும். கொப்புளங்களை கிள்ளக் கூடாது. வேப்பிலை, மஞ்சள் ஆகியவை இதற்குச் சிறந்த மருந்து. அதனால் கொப்புளங்களால் ஏற்படும் அரிப்பு நீங்கும். அதிக அரிப்போ, காய்ச்சலோ இருந்தால், மருத்துவரிடம் செல்ல வேண்டும். அம்மை நோய்களுக்கு தடுப்பூசி இருப்பதால், குழந்தைகளுக்கு தடுப்பூசி போட வேண்டியது அவசியம்.

### வெயில் அலர்ஜி

சிலருக்கு வெயிலில் சென்று விட்டு வந்தால், உடலெங்கும் அரிக்கத் தொடங்கிவிடும். சருமம் சிவந்து தடிப்புகள் தோன்றும். அவற்றில் நீர் கோர்த்துக்கொள்ளும். அரிதாகச் சருமம் உரியும் பிரச்சினையும் ஏற்படலாம். இதற்கு 'சோலார் அர்ட்டிகேரியா' (Solar Urticaria) என்று பெயர். இந்தத் தொல்லை



யைத் தடுக்க, முதலில் வெயில் நேரத்தில் வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அதேபோல, அதிக நேரம்



சூரிய ஒளியின் புற ஊதாக் கதிர்கள் உடலில்படுவதால், சருமச் செல்கள் வீக்கமடைந்து 'சன் பர்ன்' (Sun Burn) என்னும் சருமப் பிரச்சினை ஏற்படும். இந்தப் பிரச்சினைகளுக்கு வெயிலில் செல்வதற்கு முன்பாக, உடலில் வெளியே தெரியும் பகுதிகளில் சன்ஸ்கிரீன் லோஷனைத் தடவிக்கொள்ளலாம். புறஊதாக் கதிர் வீச்சிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கலாம். உடல் முழுவதையும் மறைக்கிற வகையில் ஆடை அணிவதும் பலன் தரும்.

### சரும வறட்சி

கோடையின் நமக்கு அதிகம் வியர்வை வெளியேறுவதால், சருமத்திலிருக்கும் நீர்த்தன்மை வற்றிவிடும். அதை ஈடுகட்டும் அளவுக்கு அடிக்கடி நாம் தண்ணீர் குடிக்க வேண்டும். இல்லையென்றால், சருமம் வறண்டுவிடும். சருமம் வறட்சி அடையாமலிருக்க, தினமும் குறைந்தது மூன்று லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும். பழச்சாறுகள், இளநீர், மோர், பானகம், சர்பத் போன்றவற்றை அருந்தலாம். வறண்ட சருமத்தில் மாய்ச்சரைசர் கிரீம்பைப் பூசிக்கொள்ளலாம்.

### தலைமுடி வறட்சி

கோடையில் தலைமுடியும்வறண்டுபோகும். எனவே, குளிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் தலையில் எண்ணெய் தடவி, தலைக்குக் குளிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தடுக்கலாம். வெளியில் செல்லும் போது குடை அல்லது தொப்பி அணிந்து செல்வது நல்லது. தலையில் அதிகமாக வியர்த்தால், அழுக்கு சேர்ந்து அரிப்பு ஏற்படும். எனவே, வீட்டுக்கு வந்ததும், தலைக்குக் குளிக்க வேண்டும். தலையில் பொடுகு, பூஞ்சைத் தொற்று பாதிப்புள்ளவர்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெறலாம்.

### பாதங்களில் வெடிப்பு

கோடையில் ஏற்படுகிற சரும வறட்சி காரணமாக, பாதங்களில் வெடிப்பு ஏற்படலாம். இதைத் தவிர்க்க தினமும் இரவில் பாதங்களைக் கழுவி, சுத்தப்படுத்திவிட்டு, தரமான மாய்ச்சரைசர் கிரீம்பைப் பூசிக்கொள்ளலாம். கோடைகாலத்தில் சப்பாத்து அணிவதைத் தவிர்க்கவும்.

இறுக்கமான ஆடைகள் மற்றும் உள்ளாடைகளால் சருமத்தில் வியர்வை தங்கி, படர்தாமரை, அரிப்பு போன்ற பாதிப்புகள் உண்டாகும். படர்தாமரைக்கான க்ரீம்களை மருத்துவர் ஆலோசனையோடு பூசிக்கொள்ளலாம். தளர்வான ஆடைகளை அணிய வேண்டும்.

**மேற்கொள்ள வேண்டிய பொதுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!**

➢ வெயில் கொளுத்தும் நேரமான காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை வெளியில் செல்வதை முடிந்தவரை தவிர்க்கலாம் அல்லது வெளியில் செல்லும் போது குடை மற்றும் சன்கிளாஸ் எடுத்துச்செல்லலாம். குழந்தைகளின் விளையாட்டுக்குத் தடை போட முடியாது. ஆனால், வெயிலில் விளையாட அனுமதிக்கக் கூடாது. மாலை 5 மணிக்கு மேல்தான் குழந்தைகளை வெளியில் விளையாட அனுமதிக்க வேண்டும்.

➢ வெயிலில் வெளியே செல்லும்போது ஏற்படும் தாகத்தைத் தணிக்க ஒரு தண்ணீர் போத்தலை எப்போதும் கொண்டு செல்ல வேண்டும்.

➢ குளித்த பிறகு பௌடர் போடுவதைத் தவிர்க்க வேண்டும். பௌடர் நம் சருமத்தில் சிறிய நுண் துளைகளை மூடிக்கொள்ளச் செய்யும். இதனால் வெப்பம் வெளியேறாமல் சருமப் பிரச்சினைகள் ஏற்படும்.

➢ மிகவும் இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்துவிட்டு, உடலில் ஈரம் தங்காதபடி வியர்வையை உறிஞ்சக் கூடிய, சருமத்தில் அரிப்பு ஏற்படுத்தாத, பருத்தி ஆடைகளையே அணியவும். ஸ்லீவ்லெஸ் ஆடைகளைவிட முழுக்கை, கொலர் வைத்த சட்டைகளை அணிந்தால், தோலில் வெயில்படாமல் இருக்க உதவும்.

➢ சன் ஸ்க்ரீன் உபயோகப்படுத்துபவர்கள், அதன் எஸ்.பி.எஃப் (SPF - Sun Protection Factor) அளவு 30 இருக்கிறதா என பரிசோதித்துக் கொள்ளவும். வீட்டிலிருந்து புறப்படுவதற்கு, முப்பது நிமிடங்களுக்கு முன்னரே தோலில் சன் ஸ்க்ரீனை அப்ளை செய்துவிட வேண்டும். ஒவ்வொரு மூன்று மணி நேரத்துக்கும் தோலில் சன் ஸ்க்ரீன் அப்ளை செய்ய வேண்டும்.

நீங்கள் பயன்படுத்தும் சன் ஸ்க்ரீனில், விற்றமின் ஏ மற்றும் சி இருக்கின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ளவும். ஸ்டீராய்டு மற்றும் ஹைட்ரோகுயினோன் (Hydroquinone) கொண்ட க்ரீம்களை மருத்துவர் பரிந்துரையின்றி உபயோகப்படுத்த வேண்டாம்.

➢ புற ஊதாக் கதிர்களின் வெப்பத்திலிருந்து தோல்களைக் காக்க, உணவில் விற்றமின் சி அதிகமிருக்கும் பொருட்களை சேர்த்துக் கொள்ளவும். ஆந்தோசயானிடின்ஸ் (Anthocyanidins), பீட்டா கரோட்டின் (Beta carotene), லைகோபீன் (Lycopene) போன்ற ஆன்டிஆக்ஸிடன்ட் அதிகமிருக்கும் ஆரஞ்சு, கரட், புராக்கோலி, மாம்பழம், பப்பாளி, தர்பூசணி, கீரைகளை அதிகம் சாப்பிட வேண்டும்.

➢ காரமான, அதிகம் எண்ணெயுள்ள உணவுவகைகளைத் தவிர்க்க வேண்டும். இளநீர், மோர், தர்பூசணி போன்ற குளிர்ச்சியான மற்றும் நார்ச்சத்துள்ள உணவுப் பொருட்களை அதிகம் சேர்த்துக்கொள்ளலாம்.

# செய்தித்துளிகள்

## கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் இடம்பெற்ற கொலை சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மருதானை-சேக்குவத்தைப் பகுதியில் வைத்து, குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ளதாகவும், குறித்த நபர் கொழும்பு -12 ஐ சேர்ந்த 29 வயதுடைய நபர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி, குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதோடு, இதன்போது கொல்லப்பட்ட நபர் பாதாளக் குழுவின் தலைவர் மாக்கந்துர மதுஷுடன் தொடர்புடைய மொஹமட் ரிஸ்பான் என்பவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மே தின நிகழ்வுகளுக்காக இ.போ.சவின் 1500 பேருந்துகள்

(கொழும்பு)

இம்முறை மே தின நிகழ்வுகளுக்காக 1500 பேருந்துகளை வழங்கியுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. பிரதான கட்சிகளின் பிரதேச ஒருங்கிணைப்பாளர்களின் வேண்டுகோளிற்கு இணங்க பணம் செலுத்திய பின்னர் குறித்த பேருந்துகளை வழங்கியுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் செயற்பாட்டு முகாமையாளர் பீ.எச்.ஆர்.டீ. சந்திரசிறி தெரிவித்துள்ளார். (இ-7)

## காரியவசம் கடமைகளைப் பொறுப்பேற்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள அகிலவிராஜ் காரியவசம் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கு முன்னர் நீண்ட காலமாக அவர் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவியை வகித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் வைத்து அமைச்சர் அகிலவிராஜ் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்புகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த வைபவத்தின் போது அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்ட மூத்த அரசியல்வாதிகள் பலரும் சமுகமளித்திருந்தனர். (இ-7)

## இரத்ததான முகாம் ஞாயிறன்று

(கரவெட்டி)

திருவம்பலம் கபிராஜ் ஞாபகார்த்தமாக இரத்ததான முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கரவெட்டி பழைய அம்பலம் வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறும்.(இ

## வெளிநாட்டு கைத்துப்பாக்கியுடன் இளைஞன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் களுத்துறை பிரதேச குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

களுத்துறை பிரதேச குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற விசேட தகவலொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் இச்சுற்றி வளைப்பின் போது 19 வயதுடைய மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரை கைது செய்யும் வேளையில் அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியொன்றும், அதற்கு பயன்படுத்தப்படும் ரவைகள் ஐந்தும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-7)




(நேற்றைய தொடர்ச்சி)

தங்களால் கொடுமை செய்யப்பட்ட இளைத்த உடலைக்கொண்ட அடிமை, அறிவால் எப்படி உயர்ந்தவன்என்பதையும்அவர்கள்அறிந்தனர்.

அதுசரி, அத்தனை பெரிய மூட்டை உருமாறிச்சுருங்குவானேன்? நிஜமாகவே அதில் ஏதாவது மாய மந்திரம் இருந்ததா?

இல்லவே இல்லை. அந்தப் பெரிய மூட்டையில் அந்த நீண்ட நெடுநாள் பயணத்துக்கு, அத்தனை பேருக்குமான உணவுப் பொருள் இருந்தது.

ஒவ்வொரு உணவு வேளையிலும், அந்த மூட்டையிலிருந்து தான் உணவுப்பொருள் எடுத்து எல்லாருக்கும் விநியோகிக்கப்பட்டது. ஒவ்வொரு சாப்பாட்டுக்குப் பிறகும், அந்த நோஞ்சான் அடிமையுடைய மூட்டையின் கனம் குறையத்தானே செய்யும்?

பயணத்தின் முடிவில், அந்தச் சின்ன அடிமை காலிச் சாக்கைத் தோள் மீது போட்டு கையை வீசியபடியே நகரத்துக்குள் நுழைந்தான். தாங்கள் சுமக்கும் மூட்டையை எப்போது கீழே இறக்கப் போகிறோம் என்று மற்றவர்கள் தவிப்புடன் இருந்தனர். அவர்கள் அத்தனை பேர் தூக்கி வந்த மூட்டைகளிலும் வியாபாரப் பொருட்கள் இருந்தன. அவை அந்தப் புதிய நகரத்தில் விற்கப்பட வேண்டியவை.


அப்பாவியும், அழகற்றவனும், பலம் இல்லாதவனுமான அந்தச் நோஞ்சான் அடிமை தன்னுடைய பொறுமையிலும், புத்திசாலித்தனத்திலும் எல்லோருடைய அன்புக்கும் பாத்திரமானான். ஆரம்பத்தில் அவனைக் கேலி செய்த தோழர்கள் கூட அவனிடம் அன்பும், மதிப்பும் காட்டினர். அந்த நோஞ்சான் அடிமைக்கு விடுதலை வழங்கினார் பணக்காரன்.

அவனுக்குச் சுதந்திரம் கிடைத்ததில் மற்ற அடிமைகளுக்கு ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியானாலும் தங்களை விட்டு அவன் பிரிந்து போகிறானே என்று அவர்கள் வேதனைப்பட்டனர். அவனோடு வேலை செய்யும் போதும், பயணம் செய்யும் போதும் யாருக்கும் அலுப்போ, களைப்போ ஏற்படாது. ஏனென்றால், அந்தச் சின்ன அடிமை வழியெல்லாம் அழகழகான கதைகள் சொல்லி எல்லாரையும் மகிழ்விப்பான்.

சின்ன அடிமையும், தனக்கு விடுதலை கிடைத்ததில் மகிழ்ச்சி கொள்ளவில்லை. நினைவு தெரிந்ததிலிருந்து அடிமையாக இருந்த அவனுக்கு, உழைப்பைத் தவிர வேறு எதுவுமே தெரியாது.

ஆகவே, எப்படிப் பிழைப்பது? வேலை செய்வதைத் தவிர அவனுக்குத் தெரிந்த ஒரே கலை, கதை சொல்லுவது தான். ஆகவே, அந்த அப்பாவி அடிமை கடை வீதிகளிலும், நான்கு சாலைகள் கூடுமிடங்

# கதை கேளு... கதை கேளு...



களிலும் சந்தைகளிலும் நின்று கதைகள் கூறித் தன் உணவுக்கு வழி தேடினான். அவன் கூறும் குட்டிக் கதைகளைக் கேட்க மக்கள் வந்து கூடினர்.

அவன் சிரிக்கச் சிரிக்கச் கதைகளைச் சொன்னான். கதை கேட்டவர்களை சிந்திக்க வைத்தான். அவன் கூறும் கதைகளின் புகழ், அந்த நாட்டின் மூலை முடுக்குகளிளெல்லாம் பரவியது. அந்நாட்டு மன்னர் அவனை வரவழைத்தார். அவையில் அவனுக்கு ஒரு பதவியைக் கொடுத்தார்.

என்ன பதவி தெரியுமா?

தினமும் அவர் முன்னிலையில், அவன் கதைகள் சொல்ல வேண்டும்!

அந்தச் சின்ன அடிமையின் வறுமை ஓடியது. நடுங்கும் குளிரில் அடைத்திருக்கும் வீட்டுக் கதவுகளின் அடியில் முடங்கிக் கொண்டு துயர் மிகுந்த இரவுகளை அவன் நினைத்துக் கொண்டான். ஒரு கவளம் உணவைப் பெறப் புதிய கதைகளை உருவாக்க மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டதை எண்ணிப் பார்த்தான். அன்று, அப்படியெல்லாம் தான் கஷ்டப்பட்டதனால்தான் இன்று மன்னரின் அவையில், கதை சொல்லும் மகிமை, தனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை அவன் மறக்கவில்லை.

தன் சின்னச் சின்னக் கதைகளால் மன்னரையும், அவையோரையும் மகிழ்வித்தான் சின்ன அடிமை. அவன் கதைகளில் மிருகங்களும், பறவைகளும் மனிதர்களைப் போலவே பேசும் சிரிக்கும். ஒவ்வொரு கதையிலும் ஒரு நீதியும், படிப்பினையும் பொதிந்திருக்கும். அந்த அடிமை கூறிய நூற்றுக்கணக்கான குட்டிக் கதைகளைக் கேட்ட மக்களுக்கு அலுப்பே ஏற்படவில்லை. அப்படிப்பட்ட சிரஞ்சீவியான அற்புதக் கதைகளைக் கூறினான் அந்த அழகற்ற நோஞ்சான் அடிமை.

அவனுக்கு எழுதத் தெரியாது, படிக்கத் தெரியாது. கதை மட்டுமே சொல்லத் தெரியும். அவன் கூறிய கதைகளைக் கேட்ட மக்கள், பிற்காலத்தில் அதைத் தங்கள் குழந்தைகளுக்குக் கூறினர். அவர்கள் அதைத் தங்கள் சந்ததிகளுக்குச் சொன்னார்கள்.

இப்படியே வாய்மொழியாகவே பரவிய இக்கதைகளை, பின்னால் சிலர் சேகரித்து எழுதி வைத்தனர். பிற்காலத்தில், இந்த அற்புதமான நீதிக்கதைகள் புத்தகங்களாக வெளிவந்தன. அந்த சின்ன அடிமையின் கதைகள், அவன் மறைந்த பின், எத்தனையோ நூற்றாண்டுகளான பிறகு, இன்றும் போற்றிப் புகழப்படுகிறது.

இவ்வள்வு பிரபலமான அந்த அடிமையின் பெயர் என்ன தெரியுமா?

ஈசாப். புராதன கிரேக்க நாட்டில் வாழ்ந்த அடிமைதான் இந்த ஈசாப். இவரது நீதிக்கதைகள் இன்று உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. நம்முடைய பஞ்ச தந்திரக் கதைகள், கீதோபதேசக் கதைகள் ஆகியவற்றுக்கும், ஈசாப்பின் நீதிக் கதைகளுக்கும் ஒற்றுமை இருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

கீழை நாடுகளிலிருந்து வந்த வியாபாரிகளிடம் கேட்டறிந்துதான், ஈசாப் தன் கதைகளை உருவாக்கி இருக்க வேண்டும் என்பது சில ஆராய்ச்சியாளரின் முடிவு.

நாம் அந்தக் காலத்திலேயே கடல் கடந்து வாணிபம் செய்ய மேலை நாடுகளுக்குப் போயிருக்கிறோமே? எப்படியானாலும் ஈசாப்பின் நீதிக் கதைகள் தனித்தன்மை வாய்ந்தவை. நீங்கள் அவசியம் படிக்க வேண்டியவை.

**முற்றும்.**

## 2018.05 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 1450-இங்கிலாந்தில் கென்ட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக் கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம்பெற்றது.

❖ 1821-கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தனர்.

❖ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

❖ 1933-மகாத்மா காந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21-நாட்கள் உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.

❖ 1942-இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி அடக்கப்பட்டு மூவர் தூக்கிலிடப்பட்டனர்.

❖ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தனர்.

❖ 1984-லொஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளை நிறுத்தப்போவதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.

❖ 2007-புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

❖ 2017-தமிழ் விக்கிப்பீடியாவில் 100,000-வது கட்டுரை எழுதப்பட்டது.

### பிறப்புகள்

❖ 1521-பீட்டர் கனிசியு, டச்சு-சுவிட்சர்லாந்து மதகுரு, புனிதர் (இ. 1597)

❖ 1737-எட்வார்ட் கிப்பன், ஆங்கிலேய அரசியல்வாதி, வரலாற்றாளர் (இ. 1794)

❖ 1786-ஜான் வியான்னி, பிரான்சியப் புனிதர் (இ. 1859)

❖ 1828-ஹென்றி டியூனாண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவிய சுவிட்சர்லாந்து தொழிலதிபர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1910)

❖ 1884-ஹாரி எஸ். ட்ருமன், ஐக்கிய அமெரிக்காவின் 33வது அரசுத்தலைவர் (இ. 1972)

❖ 1924-சு. வித்தியானந்தன், இலங்கைக் கல்விமான், தமிழறிஞர் (இ. 1989)

### இறப்புகள்

❖ 1794-அந்துவான் இலவாசியே, பிரான்சிய வேதியியலாளர்; உயிரியலாளர் (பி. 1743)

❖ 1891-எலனா பிளவாத்ஸ்கி, பிரம்மஞான சபையைத் தோற்றுவித்த உருசிய-ஆங்கிலேயர் (பி. 1831)

❖ 1951-மு. நல்லதம்பி, ஈழத்துப் புலவர்

❖ 2008-சி. நாகராஜா, இலங்கை வழக்கறிஞர், யாழ்ப்பாண மாநகர முதல்வர் (பி. 1931)

### சிறப்பு நாள்

❖ உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள்

❖ உலக தாலசீமியா நோய் தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 45 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 75 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 40 | 70 | 60 | 45 | 80 | 50 |
| தக்காளி | 100 | 80 | 100 | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 | 25 | 40 | 60 |
| கோவா | 50 | 60 | 60 | 30 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 100 | 80 | 200 | 100 |
| பூசணி | 30 | 20 | 40 | 20 | 40 | 80 |
| புடோல் | 60 | 60 | 80 | 30 | 120 | 70 |
| வாழைக்காய் | 50 | 35 | 40 | 35 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 200 | 160 | 160 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 90 | 65 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 40 | 160 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 60 | — | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 100 | 80 | 140 |
| லீக்ஸ் | 150 | 200 | 200 | — | 240 | 200 |
| பீற்றூட் | 40 | 60 | 60 | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 40 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 100 | 100 | 120 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 170 | — | 240 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 50 | — | 50 | 50 |
| கீரை-1பிடி | 30 | 20 | 30 | 20 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 240 | 190 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 20-55 | 60-75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | 160 | 130 | 140 | 120 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | — | 20 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — |

ஏர் நடக்கும் எனில்; இயலிசை நாடகம் நடக்கும்,
பார் நடக்கும், படை நடக்கும், பசி நடக்கமாட்டாதே.
– கம்பர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வியர்வை சிந்தி உழைத்த உணவு பாழ்பட்டுப் போவது ஏன்?

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்* என்று கூறியவர் வள்ளுவப் பெருமான்.

உழவுக்கு வந்தனை செய்கின்ற தமிழர் பண்பாட்டில் உணவை கடவுள் தந்த அமிர்தமாகப் போற்றும் வழமை உண்டு.

சோற்றை "அமுது" என்று நம்மவர்கள் அழைத்தனர் எனில், நெல்லுக்கு அவர்கள் கொடுத்த முன்னுரிமை எத்துணை உயர்வானதென்பதை அறிதல் அவ்வளவு கடினமன்று.

கலாசார விழாக்களின் போதெல்லாம் கும்பம் வைக்கும் பண்பாட்டை உடைய நம் தமிழினம் கும்பத்தின் அடியில் நெல்லை அல்லது அரிசியை வைத்தனர். கூடவே வாழைப்பழத்தையும் அதனோடு சேர்த்தனர்.

ஆக, எங்கள் வாழ்வில் நெல்லின் மகத்துவமும் பழவகைகளின் முக்கியத்துவமும் உணரப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே வரவேற்கும் இடத்தில் கும்பத்தோடு இவற்றுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்* என்று கூறிய வள்ளுவப் பெருமான், சோறு உண்ணும் போது ஒரு கிண்ணத்தில் தண்ணீரும் ஊசியும் வைத்துக் கொள்ளும்படி தன்மனையாள் வாசுகிக்கு கூறிவைப்பார்.

இஃது எதற்காக என்று அறிவதற்காக வாசுகி அம்மையார் வள்ளுவரிடம் வினவ;

உண்ணும் போது சோறு நிலத்தில் வீழ்ந்தால் அதனை ஊசியால் எடுத்து கிண்ணத்தில் உள்ள நீரில் சுத்தம் செய்து மீண்டும் உண்பதற்காக என்று பதில் கூறினார்.

எனினும் வள்ளுவர் உண்ணும்போது ஒரு சோற்றையும் நிலத்தில் சிந்தவிடவில்லை.

ஆக, உண்ணும் உணவுப் பொருட்கள் என்பது இறைவனால் தரப்பட்டவை. அவற்றை உற்பத்தி செய்வதற்காக விவசாயிகள் பட்ட, படுகின்ற பாடுகள் கொஞ்சமல்ல.

இருந்தும் வியர்வை சிந்தி, வெயிலில் காய்ந்து உற்பத்தி செய்த உணவுப் பொருட்களும் பழவகைகளும் வெளியில் கொட்டப்படுகின்றன எனும்போது இதைவிட அநியாயம் எதுவும் இல்லை எனலாம்.

ஐந்து, பத்து ரூபாய்களை குறைப்புச் செய்தால் எல்லாப் பழவகைகளும் விற்றுத் தீரும் என்ற நிலைமை இருக்கின்றபோதிலும் உச்ச விலையில் மாற்றமில்லை, தேவை என்றால் அழுகிப் போகும் பழங்களை கொட்டி விட்டுப் போவோம் என்றொரு மனநிலை நம் வர்த்தகர்களிடம் ஏற்பட்டிருப்பது, இது அதர்மத்தின் காலமோ என்று எண்ண வைக்கும்.

அந்தளவுக்கு வாழைப்பழம், பாப்பாசிப்பழம், மாம்பழம் என்பன அழுகிய நிலையில் கொட்டப்படுகின்றன.

இதுதவிர, மருந்து விசிறி பழுக்க வைப்பதன் காரணமாக ஒட்டுமொத்தப் பழங்களும் ஒரே நேரத்தில் பழுத்துப் போக, விலையும் உச்சமாக இருக்க,

எங்கள் மண்ணில் விளைந்த பழங்கள் குப்பைமேட்டில் கொட்டப்பட்டுக் கிடக்கிறது.

ஓ கடவுளே! எம் மீது இரக்கம் கொண்டு நீ தந்த அமிர்தம் உச்ச இலாபம் என்ற பெயரால் பாழ்பட்டுப் போகிறது.

இதைத் தடுப்பது யார்? என்பதுதான் நம் முன் இன்றிருக்கும் கேள்வி.

# பல எதிர்ப்புக்களை கடந்து நிறைவுபெற்றது நீட் தேர்வு

(டில்லி)

மருத்துவ கல்விக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ள 'நீட்' எனப்படும் தேசிய தகுதி நுழைவுத் தேர்வு பரீட்சை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தியா முழுவதும் நடைபெற்றது.

எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். பட்ட படிப்புக்காக மொத்தம் 60 ஆயிரத்து 990 மருத்துவ வெற்றிடங்கள் இந்த நீட் தேர்வு மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான நீட் தேர்வு பரீட்சை நேற்று முன்தினம் காலை முதல் நடைபெற்றது. இந்த தேர்வுக்காக நாடு முழுவதும் 5 இலட்சத்து 80 ஆயிரத்து 648 மாணவர்களும் 7 இலட்சத்து 46 ஆயிரத்து 76 மாணவிகளும் ஒரு திருநங்கையும் தோற்றியிருந்தனர்.

இவர்கள் பரீட்சை எழுதுவதற்காக 136 நகரங்களில், இரண்டாயிரத்து 255 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை, நெல்லை, சேலம், நாமக்கல், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 10 நகரங்களில் பரீட்சை மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய தமிழகத்தில் 170 பரீட்சை நிலையங்களில் சுமார் ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 288 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

ஆங்கிலம், இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், அசாம, வங்காளம், ஒரியா, குஜராத்தி, மராத்தி, உருது ஆகிய 11 மொழிகளில் இந்த பரீட்சை நடைபெற்றது.

இந்த பரீட்சையில் இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடப் பிரிவுகளில் மொத்தம் 720 மதிப்பெண்களுக்கு 180 கேள்விகள் கேட்கப்படும்.

இந்த ஆண்டுக்கான நீட் தேர்வுக்கு விண்ணப்பித்த தமிழக மாணவர்களுக்கு கேரளா, ராஜஸ்தானில் பரீட்சை மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன் நீட் தேர்வை நடத்தும் சி.பி.எஸ்.சியின் அலட்சியம் காரணமாகவே மாணவர்கள் அலைக்கழிக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு ஆரம்பமான பரீட்சை பிற்பகல் ஒரு மணிக்கு நிறைவடைந்தது. பரீட்சை பெறுபேறுகள் ஜூன் மாதம் ஐந்தாம் திகதி வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(7)

# மத்திய கிழக்கில் பேச்சுவார்த்தை நடத்த சீனா உதவத் தயாராகவுள்ளது

## சீனாவின் மத்திய கிழக்கு விவகார சிறப்புத்தூதுவர் உறுதி

(லண்டன்)

மத்திய கிழக்கில் அமைதி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் அதற்கு உதவ சீனா தயாராக உள்ளது எனவும் சீனாவின் மத்திய கிழக்கு விவகார சிறப்புத் தூதுவர் Gong Xiaosheng தெரிவித்துள்ளார்.

மத்தியகிழக்கில் காணப்படும் நிலைமைகள் குறித்து ஆழ்ந்த வருத்தங்களைத் தெரிவித்த சிறப்புத் தூதுவர் மத்தியகிழக்கில் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்த சீனா தயாராகவுள்ளதாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய நாட்டின் தலைநகரான ரியாத்தில், சவுதி அரேபியாவின் அரசியல் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான வெளிவிவகார அமைச்சின் பிரதித் துணைத்தலைவரான Jamal Aqeel இனை சந்தித்த போதே அவர் இக்கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இச் சந்திப்பினைத் தொடர்ந்து அங்குள்ள ஊடகமொன்றிற்குப் பேட்டியளிக்கும்போது மத்திய கிழக்கில் உள்ள பிரச்சினைகள் குறித்து அவர் விரிவாகப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அப்போது அவர் தெரிவிக்கையில், சிரிய உள்நாட்டுப் போர், பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியருக்கும் இடையேயான மோதல்கள், யேமனில் நடந்த யுத்தம் மற்றும் ஈரானிய அணு சக்தி ஒப்பந்தம் ஆகியவை பாரிய அச்சுறுத்தலாக இருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

மத்தியகிழ்க்கு நாடுகளின் நட்பு நாடாக சீனா விளங்குவதாகவும் மத்திய கிழக்கு நாட்டுத் தலைவர்கள் நல்லதொரு அமைதிப் பேசசுவார்த்தையினை நடத்துவதன் எல்லா முரண்பாடுகளையும் தீர்க்கமுடியும் எனவும் அதற்கு சீனா உதவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

## வாக்காளர் பதிவு மையத்தில் குண்டுவெடிப்பு;12 பேர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கோஸ்ட மாகாணத்தின் கிழக்கு பகுதியில் வாக்காளர் பதிவு மையத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 12 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் பாராளுமன்றத்திற்கு விரைவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி முதல் புதிய வாக்காளர்களுக்கான சேர்க்கை முகாம் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. இந்த வாக்காளர்கள் முகாம் மீது பயங்கரவாதிகள் இதுவரை 7 முறை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த மாதம் காபூல் நகரில் வாக்காளர் முகாம் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 60 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் கோஸ்ட் மாகாணத்தின் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் தற்காலிக வாக்காளர் சேர்ப்பு முகாம் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. அப்போது அங்கு வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஒரு பெண் உட்பட 12 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 30 பேர் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதால் இந்த தாக்குதலில் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (7)

## சூரிய ஒளியைப் பயன்படுத்தி தண்ணீர் சுத்திகரிப்பு முறை

### விஞ்ஞானிகள் சாதனை

(லண்டன்)

சூரியஒளியை பயன்படுத்தி புதிய தொழில்நுட்பத்தின் மூலம் விஞ்ஞானிகள் தண்ணீர் சுத்திகரிப்பு முறையை கையாண்டு சாதனை படைத்துள்ளனர்.

இயந்திரம் மூலம் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு வரும் இந்த காலத்தில் தற்போது சூரியஒளியை பயன் படுத்தி புதிய தொழில்நுட்பத்தின் மூலம் குடிநீரை விஞ்ஞானிகள் சுத்திகரித்துள்ளனர்.

கடந்த 2000 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க தத்துவவியல் விஞ்ஞானி அரிஸ்ரோட்டில் தண்ணீரை சுத்திகரிக்க புதிய முறையை கையாண்டார். முக்கோண வடிவிலான கறுப்பு நிற கார்பன் பேப்பரை தண்ணீரில் மூழ்கடித்து அதை சுத்திகரித்தார.

அதை அடிப்படையாக கொண்டு சூரியஒளியை பயன்படுத்தி புதிய தொழில் நுட்பத்தின் மூலம் விஞ்ஞானிகள் தண்ணீர் சுத்திகரிப்பு முறையை கையாண்டு வெற்றி பெற்றுள்ளனர்.

மிக குறைந்த செலவில் இதை செயற்படுத்த முடியும். இயற்கை பேரிடர் காலங்களில் இது மிகவும் உதவிக்கரமாக இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ஒருவனுக்கு தன்னம்பிக்கையே அடிப்படை. அதில் இல்லாதவன் தெய்வ பக்தி இல்லாத நாத்திகனைப் போன்றவன்.
- விடாமுயற்சிமட்டும் நம்மிடம் இருந்துவிட்டால் நம்மால் சாதிக்க முடியாத செயல்என்று எதுவுமே இல்லை.
- என்னால் முடியாது என்று ஒருபோதும் சொல்வது கூடாது. எல்லாவற்றையும் சாதிக்கக்கூடிய வல்லமை நம்மிடம் இருக்கிறது.
- சுயநலம் என்பது சிறிதும் மனதில் இருப்பது கூடாது. அதை தூர எறிந்துவிட்டு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுங்கள்.
- நீங்கள் சிங்கம் போன்றவர்கள். செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளிவிட்டு உற்சாகத்துடன் செயலாற்றுங்கள்.
- தன்னைத்தானே தாங்குபவனாக, சொந்தக்காலில் தலைநிமிர்ந்து நிற்கும் பலமுள்ளவனாக செய்ய வல்ல கல்வித்திட்டம் நமக்குத் தேவை.
- உயர்ந்த லட்சியங்களை மனதில் உருவாக்குங்கள். எப்போதும் அதை அடைவதற்கான சிந்தனையில் ஈடுபடுங்கள்.
- சிந்திப்பதை செயற்படுத்தும் துணிவையும் மனவலிமையையும் தியானத்தின் மூலம் நம்மால் பெற முடியும்.

# இராமலிங்கம் இராசதுரை வெற்றிக்கிண்ணம் மகுடம் சூடியது தெல்லிப்பழை யூனியன்




சுன்னாகம் ரோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் இராமலிங்கம் இராசதுரை ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட தொடர்

சுன்னாகம் ரோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் இராமலிங்கம் இராசதுரை ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட தொடரில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றது.

இச் சுற்றுப்போட்டியில் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், யாழ்.ரோட்டரி கழக தலைவர் றொபிசன் பிரசாந்தன், சுன்னாகம் ரோட்டறக்ட் கழகத்தின் தலைவர் ஜெயரூபன், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் மற்றும் அமரர் இராமலிங்கம் இராசதுரை அவரின் குடும்பத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மோதியது. நான்கு கால்ப் பகுதியை கொண்டதாக அமைந்த இவ் ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 8:2, 13:8, 15:13, 22:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மூன்றாவது இடத்திற்கான சுற்றுப்போட்டியில் அராலி சரஸ்வதி வித்தியாலயமும் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியும் மோதின. இதில் மூன்றாவது இடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலயம் சுவீகரித்தது.

இச்சுற்றுப்போட்டியில் சிறந்த கோல் காட்டாராக விக்ரோறியா கல்லூரி வீராங்கனை ஐஸ்வர்யாவும் சிறந்தமைதான காப்பாளராக யூனியன் கல்லூரி வீராங்கனை யுவன்யாவும், சிறந்த மைய பிரதேச வீராங்கனையாக சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் தனுயாவும் தெரிவு செய்யப்பட்டனர். (சு)





## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## பெண்களுக்கான கால்பந்தாட்டம் கிளிநொச்சி மாவட்டம் சம்பியன்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பெண்களுக்கான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி சம்பியனாகியது.

மேற்படி போட்டிகள் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட பெண்கள் அணி மோதியது. ஆட்டநேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நடாத்தப்பட்டது. இதில் கிளிநொச்சி மாவட்ட அணி, 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதன் மூலம் யாழ் மாவட்ட அணியின் தொடர்ச்சியான 3 வருடகால வெற்றிக்கு கிளிநொச்சி மாவட்டம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

### யாழ்ப்பாண - மன்னார் மாவட்ட அணிகள் இறுதியில்

இதேவேளை ஆண்களுக்கான போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணி, வவுனியா மாவட்ட அணியை வென்றது.

தொடர்ந்து, பை மூலமாக இரண்டாம் சுற்றுக்குள் நேரடியாக நுழைந்த மன்னார் மாவட்டத்துடன் முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. இதில் மன்னார் மாவட்ட அணி 5:1 என்ற கோல்கள் அடிப்படையில் வென்று இறுதிக்குள் நுழைந்தது.


மறுபக்கத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட அணிக்கும் இடையில் போட்டி இடம்பெற்றது. இதில் யாழ் மாவட்ட அணி, 7:2 என்ற கோல்கள் கணக்கில் வென்று இறுதிக்குள் நுழைந்தது. இறுதிப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (கு-26)

## நாமகள் தொடர் காலிறுதிப் போட்டிகள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

காலிறுதியின் முதலாவது போட்டியில் பகல் 3.30 மணிக்கு முல்லைத்தீவு சென் யூட் அணியினை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் இரண்டாம் காலிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (கு)

## அரியாலை சரஸ்வதியின் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அமரர் நரேந்திரன் சிவம் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது கோண்டாவில் கிங்ஸ்ரார், பருத்தித்துறை உதய கதிர்காமர் அணியினர். (கு)

## இறுதிப் போட்டியில் சிறப்பாட்டம் கொக்குவில் இந்து சம்பியனானது



நான்காவது கால்பாதியாட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மடம் அணி அபார ஆட்டம் ஆடியும், கொக்குவில் இந்து அணி ஆடிய முறியடித்த அபாரத்தை தகர்த்தெறிய முடியவில்லை.

இதன் மூலம் இந்த சுற்றுப் போட்டியில் தொடர்ந்து மூன்று முறைகள் சம்பியனாகி கிண்ணத்தையும் கொக்குவில் இந்து அணி பெற்றுக் கொண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மற்றுநாத் முன்னாள் கூடைப்பந்தாட்ட வீரர் ஜெயக்குமார் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடத்தி வருகின்றது. இந்தச் சுற்றுப் போட்டியில் 5 பெண்கள் கூடைப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றின. அரையிறுதியில் திருக்குடும்ப கன்னியர் மடம் அணி, உடுவில் மகளிர் கல்லூரி அணியையும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியையும் வென்று இறுதிக்குள் நுழைந்தன.

5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற, இறுதிப்போட்டியில் திருக்குடும்ப கன்னியர்மடமும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதியது.

தொடக்கம் முதல் சிறப்பாக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, முதல் கால்பாதியில் 17:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது கால்பாதியிலும் கொக்குவில் இந்து சிறப்பாக ஆட, அந்தக் கால்பாதி முடிவில் 34:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

மூன்றாவது கால்பாதியாட்டத்தில் திருக்குடும்ப கன்னியர்மடம் அணி கடுமையாக போராடியது.

எனினும், மூன்றாவது கால்பாதியாட்டம் முடிவில் 51:34 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

நான்காவதும் இறுதியுமான கால்பாதியாட்டத்தில் திருக்குடும்ப கன்னியர்மடம் மிகமிகச் சிறப்பாக அடுத்தடுத்து கூடைகளைப் போட்டு அசத்தியது.

எனினும், பெறுமதிப்புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் இந்து அணியை முந்த முடியவில்லை. முடிவில், கொக்குவில் இந்து அணி 66:59 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இறுதிப் போட்டியின் நாயகியாக கொக்குவில இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த தர்சிகாவும், தொடர் நாயகியாக திருக்குடும்ப கன்னியர் மடத்தின் டபிள்யூ. எப். சிபானுயும் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

## 8 மணித்தியாலங்களுக்கு...

துடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சம்பவ இடத்தில் வைத்து மூன்று பேரைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர்.விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை நேரத்தில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, வடமராட்சி கிழக்கு முள்ளியான் கேவில் என்ற இடத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தினர் சுண்டிக்குளம் உழவனூர் கிராமத்தில் உள்ள தமது உறவினர் வீட்டிற்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வந்துள்ளனர்.

இந் நிலையில், திடீரென அந்த வீட்டிற்கு மது போதையுடன் கொட்டன்களுடன் வந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்களை வெளியேற விடாமல் அச்சுறுத்தி தடுத்து வைத்துக் கொண்டு முள்ளியானில் இருந்து வந்த குடும்பத்தினரை சுமார்

08 மணித் தியாலங்களுக்கு மேல் சிறைபிடித்து வைத்துக் கொண்டு சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர் தெரிவிக்கையில், இனம் தெரியாத மர்ம நபர்களால் தாங்கள் சுமார் 8 மணித் தியாலங்களுக்கு மேல் சிறைப்பிடித்து வைக்கப்பட்டதுடன் தங்கள் மீது மோசமான தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலில் எனது மனைவியின் கை ஒன்று முறிக்கப்பட்டுள்ளது. மேலும் அவரது வயிற்றில் இருந்த 5 மாத கர்ப்பத்திற்கும் ஆபத்தான நிலையில் தமது உறவினர்களால் அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கமான 119 ஊடாக தொடர்பு கொண்டு உதவிகோரிய நிலையில் தருமபுரம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சுற்றி வளைப்பை மேற்கொண்ட போது சிலர் தப்பிச் சென்ற நிலையில் சந்தேக நபர்களில் மூன்று பேரைக் கைது செய்ததுடன், சிறைப்பிடிக்கப்பட்டிருந்த எங்களை மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் வடமராட்சி கிழக்கு முள்ளியான் கேவில் பகுதியைச் சேர்ந்த உதயகீலன் சசிகலா வயது 30 என்ற குடும்பப்பெண்ணே தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம- 15)

## பாரை மீன்கள்...

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடலில் நேற்று பல இலட்சம் பெறுமதியான பாரை மீன்கள் அகப்பட்டுள்ளன.

நேற்று மதியம் கரவலைக்கு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்கள் அகப்பட்டுள்ளன.

ஆழியவளை மக்களின் உதவியுடன் பிடிபட்ட பாரை மீன்களை கரவலை உரிமையாளர் கரை சேர்த்தார்.

கடந்த மாதமும் இதே இடத்தில் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பாரை மீன்கள் பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-64)

## நீர்வேலியில் கொலை...

சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருகையில், நீர்வேலி செம்பாட்டு பிள்ளையார் கோவில் வளாகத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இளைஞர்கள் நின்றுள்ளனர். அப்போது வாள், கத்தி, இரும்பு, பொல்லுகளுடன் அப்பகுதிக்கு 4 மோட்டார் சைக்கிள்களில் வந்த 8 பேர் கொண்ட குழுவினர், அங்கு நின்றிருந்த இளைஞன் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். கழுத்து தலை, கால் பகுதியில் வாளால் வெட்டியுள்ளனர்.

அப்போது அந்த பகுதியில் மாடு மேய்த்து விட்டு வந்துகொண்டிருந்த இளைஞரை துரத்தித் துரத்தி தாக்கியதுடன், தலை மற்றும் காலில் வாளால் வெட்டியுள்ளனர். பின்னர் அப்பகுதியில் நின்றிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் துவிச்சக்கர வண்டிகள் மூன்றையும் கோவில் கிணற்றினுள் வீசிவிட்டு அவ்விடத்தை விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இதில் வாள்வெட்டுக்குள்ளாகிய அப்பாத்துரை கிரிகேசன் (வயது 23), தவராசா அனுசன் (வயது 21) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை அவசரசிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த பொதுமக்கள் காயமடைந்தவர்களை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதுடன் பொலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(ம-9.136)

## வட மாகாண சபை...

செயற்பாட்டுக் குழுக்களும் அமைப்புக்களும் எமது இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கியிருந்தன. கடந்த ஆண்டு நிகழ்வுகளை நடத்திய தரப்புக்கள்கூட தமது ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. இந்நிலையில் வடமாகாணசபை தாமே இந்நிகழ்வை நடத்துவோமென அறிவித்துள்ளது எமது மனவேதனையைத் தந்திருக்கிறது.?

வடமாகாணசபை இந்நிகழ்வை நடத்துவதானது மீளவும் கடந்த ஆண்டுகளைப் போல் நிகழ்வுகள் பிரிந்து நடாத்தப்படும் நிலைக்கே இட்டுச்செல்லும் என்பதை நாம் மனவேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெறும் நிகழ்வானது தனியே முள்ளிவாய்க்கால் மண்ணில் மடிந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வோ அல்லது மே-18 என்பது தனியே அன்று மடிந்த மக்களை மட்டும் நினைவுகொள்ளும் நாளோ அன்று. மாறாக தமிழினம் எதிர்கொண்ட இனவழிப்பை ஒட்டுமொத்த மாகச் சுட்டிநிற்கும் நாள்தான் மே-18. இந் நாள் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் உரியதன்று. முள்ளிவாய்க்கால் நிகழ்வும் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் உரித்தானதன்று.

எனவே இந்நிகழ்வை வடமாகாண சபைதான் நடத்துவதென்பது அரசியற்பொருத்த மற்ற செயல். அத்தோடு சர்ச்சைக்குரிய இந்த அரசியல் அதிகாரக் கட்டமைப்பு தமிழர்களைத் தலைமைதாங்கும் கட்டமைப்பாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்வுமில்லை. இந்நிலையில் தாமே தமிழர்களை ஒருங்கிணைக்கும் அதிகாரக் கட்டமைப்பு என்ற தொனியில், தமக்கே இந்த நிகழ்வை நடத்த உரித்துண்டு என்று வடமாகாண சபை உறுப்பினர்கள் நினைப்பது பொருத்தமற்றது.

ஏற்கனவே எமது கடந்த அறிக்கையில் குறிப்பிட்டதைப்போல், இந்நிகழ்வானது ஒற்றுமையென்ற பேரில் தகாதவர்களையும் கூட்டி கூத்தடிக்கும் வகையில் அமையக் கூடாதென்பது மக்களின் அவாவாகும். வடமாகாணசபையானது இந்த அவாவை நிறைவுசெய்யக்கூடிய தகுதியுள்ளதா என்ற கேள்வியை அவர்களே தமது மனச்சாட்சியைக் கேட்டுக்கொள்ளட்டும்.

மேலும், வடமாகாண சபையானது தேர்தல் வழி அமைக்கப்படும் ஒரு கட்டமைப்பாகும். அது காலப்போக்கில் யார்யார் கையிலாவது போய்ச்சேரும். இன்றிருக்கும் முதல்வர், இனவழிப்பு தொடர்பிலும் தமிழரின் அரசியல் அபிலாசைகள் தொடர்பிலும் சரியான நோக்குடன் செயற்படுகிறார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஆனால் தொடர்ந்து வரப்போகும் முதல்வர்களும் ஆளுங்கட்சியும், உறுப்பினர்களும் எவ்வாறு அமைவார்களென்பது உறுதிபடச் சொல்லமுடியாது. இனவழிப்புக்குத் துணைபோனவர்கள்கூட மாகாண சபை நிர்வாகத்தைக் கோலோச்சக்கூடும்.

இந்நிலையில் வடமாகாணசபைதான் மே-18 நிகழ்வை முள்ளிவாய்க்காலில் செய்யும் என்ற நிலைப்பாட்டை உறுதியாக்கினால் காலப்போக்கில் இந்நிகழ்வே கேலிக்குரியதும் கேள்விக்குரியதும் ஆகிவிடுமென்ற கரிசனை எமக்குண்டு. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, தாங்கள் முதல்வராக இருக்கும்போதே இந்நிகழ்வை ஒரு பொது மக்கள் நிகழ்வாக மாற்ற வழிசமையுங்கள் என்று நாம் முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எனினும் வடமாகாணசபையின் தன்னிச்சையான போக்கும் தமது தனிப்பட்ட அரசியல் நலன்கள் அடிப்படையில் சிலர் சிந்தித்தின் விளைவும் முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழ இருந்த ஒன்றுபட்ட எழுச்சி நிகழ்வைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் சமூகம் முன்னெடுத்த இந்த முயற்சிக்கு ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகமும் பல்வேறு வழிகளில் தமது ஆதரவை வழங்கியிருந்த நிலையில் வடமாகாணசபையின் தான்தோன்றித்தனமான இந்த முடிவு எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. இயன்றவரை முயன்றும் அவர்களின் விடாப்பிடியான முடிவால் எமது முயற்சிகள் முழுமைபெறாமல் முடக்கப்பட்டுள்ளதை எமது மக்களுக்கு மிகுந்த மனவருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓர் இனத்தின் ஆன்மாவே அவதிக்குள்ளாகித் தவிப்பதை நினைவுகொள்ளும் நாளை உலகின் மனச்சாட்சியை எம் ஒன்றுபட்ட குரல்களால் உலுப்பும் நாளை எமதினம் எதிர்கொண்ட ஒட்டுமொத்தத் துன்பத்தையும் நினைந்துருகிக் கரையும் நாளை தமது அரசியல் சுயலாபங்களுக்காக பந்தாட நினைக்கும் அரசியலாளர்கள் மக்களுக்குப் பதில்சொல்லியே ஆகவேண்டும்.

எமது ஒற்றுமை முயற்சியின் பலனாக ஏற்கனவே எழுச்சியுற்றிருக்கும் மாணவர் சமூகம், மக்கள் கூட்டம், செயற்பாட்டியக்கங்களின் கோபக்குமுறுலுக்கான பதிலை அவர்களே தயார்செய்ய வேண்டும். முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கென அனைத்து மாவட்டங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான வர்கள் பேருந்து வசதிகள் செய்து பயணம் மேற்கொள்ளவிருந்த சூழ்நிலையிலும், பல்வேறு மக்கள் அமைப்புக்கள் எமது முயற்சிக்கு ஆதரவுதந்து பெரும் மக்கள் அலை திரண்டு வந்து நிகழ்ந்திருக்கக்கூடிய இந்த நிகழ்வை, கடந்த ஆண்டுகளைப் போல் சிதைந்துபோக வைத்த பெருமை வடமாகாண சபையினரையே சாரும். (ம)

## கூட்டு அரசு மிக விரைவில்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் காலி, சமனல விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இந்த மே தின கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

இந்த நாட்டிற்கு முதலீட்டாளர்கள் இப்போது வருவதில்லை. மாறாக ஓடுகிறார்கள். அதற்கு காரணம் நாட்டில் நிலவும் ஸ்தீரமற்ற நிலையே எனவும் தற்போதுள்ள அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் எப்போது முடிவிற்கு வருமென்றும், அதன் பிறகு தாங்கள் நாட்டிற்கு முதலீடு செய்ய வருவதாகவும் முதலீட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரவித்தார்.

மேலும் தொடர்ந்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்துக்கொண்டிருப்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் என்றும் உங்கள் அனைவரது ஒத்துழைப்புடனும் இந்த அரசை மிக விரைவில் வீட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்போம் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்தார்.

ஜனநாயக சோசலிச குடியரசு என்று சொல்லப்படும் இலங்கையை இப்போது ஐக்கிய தேசிய கட்சி பொலிஸ் இராஜ்ஜியம் என்று தான் சொல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## சில்லாலையில் மாணவி...

உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

சில்லாலை பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய அருளானந்தம் மரியரயி என்ற மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தவறான முடிவை எடுத்து குறித்த சிறுமி உயிரை மாய்த்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் இளவாலைபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

# கண்டி இனக் கலவரம் கூட்டு எதிரணியினருக்கு பயங்கரவாத பிரிவு அழைப்பு

(கொழும்பு)

அண்மையில் கண்டி மற்றும் திகன பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றினை பெறுவதற்கு, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகமவிற்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

குறித்த விசாரணை தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதியன்று பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவுக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் திகன கலவரத்தின் போது அப்பிரதேசத்தைச் சுற்றி அவரது வாகனத்தில் பாதுகாவலர்கள் சென்றமை தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளவே அவர் அழைக்கப்பட்டுள்ள்தாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தற்போது, குறித்த தினத்தில் நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளதால் விசாரணை தினத்தை மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அமுனுகம கூறினார். (ம)

## ஜனாதிபதி தலைமையில்...

முதல் அமுலாகும் வகையில், பாராளுமன்ற அமர்வு நிறைவு செய்யப்பட்டது.

அதன்பிரகாரம் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வு சம்பிரதாயபூர்வமாக நடைபெறும் வைபவத்தின் பின்னர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்த வைபவத்தில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மற்றும் அவரின் பாரியார் பிற்பகல் 1.40 இற்கு பாராளுமன்றத்திற்கு வருகைத் தரவுள்ளனர்.

அதனை தொடர்ந்து ஜனாதிபதியால் கொடி ஏற்றப்பட்டு, மரியாதை அளிக்கப்படும்.

பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய பிற்பகல் 2.10 அளவில் பாராளுமன்ற கோரத்திற்கான மணி ஓசை எழுப்பப்பட்ட பின்னர், அனைத்து உறுப்பினர்களும் வருகை தந்து இருக்கையில் அமர்வார்கள்.

சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற பொதுச்செயலாளருடன் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்த பின்னர், சபாநாயகரின் இருக்கையில் ஜனாதிபதி அமர்வார்.

அதனைத் தொடர்ந்து சபை அமர்வை ஆரம்பித்து, ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றுவார்.

ஜனாதிபதியின் உரையின் பின்னர் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுவதுடன், சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் இருந்து வெளியேறும் போது, மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்படும்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய விடயங்கள்மீதான விவாதம் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)

## 2020இல் ஓய்வுபெறாமல்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் 2020 இன் பின்னரும் ஓய்வு பெறப் போவதில்லையென உறுதியாக அறிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனைக் கூறினார்.

தனக்கு ஓய்வு பெற முடியாது எனவும், இன்னும் தன்னால் நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பலவுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

தூய்மையான அரசியல்வாதிகள் எத்தனை பேர் இந்த நாட்டில் உள்ளனர். பொதுச் சொத்தைத் திருடாத எத்தனை பேர் உள்ளனர்? சிலர் 2020 இல் அதிகாரத்துக்கு வர நினைக்கின்றனர். இருப்பினும், அவர்களிடம் எந்த வித காத்திரமான வேலைத்திட்டமும் காணப்படாதுள்ளது.

இவ்வாறு அதிகாரத்துக்கு வர நினைப்பவர்கள் ஏழை மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும், கற்பனை உலகில் இருந்து கொண்டு பல கதைகளை சிலர் கூறுகின்றனர். இவர்களால் கனவு காண முடியும். இத்தகையவர்களுக்கு ஏழை மக்களைப் பற்றிய எந்தவொரு கவலையும் இல்லை.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் நாட்களில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தெளிவான வேலைத் திட்டமொன்றை முன்னெடுத்துச் செல்லவுள்ளது. அந்த புதிய வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு நான் சகலரையும் கேட்டுக் கொள்கின்றேன் எனவும் ஜனாதிபதி தனது நீண்ட உரையில் மேலும்கூறினார். (மு)

## கடலுக்கு சென்ற...

நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் அதே பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பி ள்ளை செல்வநாயகம் (வயது -64) என்பவர் மீன் பிடிப்பதற்காக படகில் கடலுக்கு சென் றுள்ளார். கடலில் அவ ருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதையடுத்து அவசரமாக கரைதி ரும்பிய போதும் அவர் மரணமானார்.

இது தொடர்பில் பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் மரண விசா ரணையினை மேற் கொண்டார். மேலதிக விசாரணையினை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற் கொண்டு சடலத்தை உறவினர்களிடம் கையளித்தனர்.(ம-60)


### பதவி வெற்றிடம்

எதிர்காலத்தை வெற்றி கொள்ள நிரந்தர தொழில் சர்வதேச முன்னணி நிறுவனத்தின் New Office 4 இற்கு 18 வயதுக்கு மேற்பட்ட O/L தோற்றிய 30 பேர் வீதம் இணைத்து கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு - உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
ஆரம்பம் - 12000 பின் 35000

தொடர்புகளுக்கு
077 1571699
021 5679001
(C-2531)



DMI JAFFNA

### கருத்தரங்கு பொருளியல்

A/L 2018

S.S. சிறி (B.COM)

• ஆரம்பம் :- எதிர்வரும்: வெள்ளி: 11.05.2018 (3 மணி)
• 8 கையேடுகள் வழங்கப்படும்.
• கிடைக்கப் பெற்ற எதிர்பார்க்கை குறிப்புக்கள் வழங்கப்படும்
• வெளிமாணவர்கள் கலந்து கொள்ளலாம். (C-2520)

கட்டணம் :- 1000/= Pho-No :- 0777297263



### ஜசுபி பழரசத் தொழிற்சாலை

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வது)

JACHUFI Fruit Based Factory

CHUNNAKAM MPCS Ltd

#### எமது நோக்கு

வட மாகாணத்தில் முதல்தர உணவு பதனிடல் தொழிற்சாலையாக நாம் தொழிற்படுவோம்.

#### எமது இலக்கு

"எமது மதிப்பிற்குரிய நுகர்வோருக்கு பல்வேறுபட்ட பாதுகாப்பான, போஷாக்கான,தரமான, இயற்கையான பழம்சார் உற்பத்திகளை நியாய விலையில் யாழ்ப்பாண உற்பத்திக்கான நவீன தொழில்நுட்பத்துடன் சமூக வலுவூட்டப்பட்ட அர்ப்பணிப்புள்ள தொழிலாளர்களைக் கொண்டு நியாயமான பிரதிபலன்கள் சமூகப் பொறுப்பானவர்களுக்கு கிடைக்க வழியமைத்தல்"

#### எமது உற்பத்திகள்

* நெல்லிக் கிரஸ்
* கிரேப்ஸ் கோடியல்
* ஒரேஞ் கோடியல்
* மிக்ஸ் புறூட் கோடியல்
* மிக்ஸ்புறூட் ஜாம்
* அன்னாசி ஜாம்
* ஸ்ரோபெரி ஜாம்
* விளாம்பழ ஜாம்
* மாம்பழ உடனடி பானம்

மேற்படி உற்பத்திகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.


(C-2514)

ஜசுபி பழரசத் தொழிற்சாலை
ஆலடி, மானிப்பாய் வீதி,
உடுவில்.
T.P.No- 021 225 6065
E-mail : jachufijaffna@gmail.com

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வது)
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
T.P.No- 021 2243627
E-mail : chunnakammpcs1557@gmail.com


## மரண அறிவித்தல்

### திருமதி சிவனேசமணி சொர்ணலிங்கம் (பளை அக்கா)



இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவனேசமணி சொர்ணலிங்கம் கடந்த சனிக்கிழமை (05.05.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொர்ணலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லாச்சி தம்பதியினரின் ஏகபுத்திரியும், காலஞ் சென்றவர்களான இராசலிங்கம் - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும், சண்முகேஸ்வரன் (ஜேர்மனி), வத்சலா ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியை - யா/இணுவில் மத்திய கல்லூரி), வாசுகி சிவனேசன் (ஆசிரியை- யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), கௌதமி சொர்ணலிங்கம் (ஆசிரியை- யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை, யா/ஸ்ரீ மலை நருவேஸ்வரா மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஜனி சண்முகேஸ்வரன் (ஜேர்மனி), சற்குணராஜா ஸ்ரீஸ்கந்தராஜா (கிராம சேவகர், சங்கானை மேற்கு), நாகலிங்கம் சிவனேசன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர்- கோட்டக் கல்வி அலுவலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ச.மதுஷா (ஜேர்மனி), சி.நவநீதன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), சி.சிற்வர்மா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.சிவப்பிரியா, கி.சிவகௌரி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சி.சிவானுஜன் (யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (08.05.2018) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு, (வட்டுவினி) இணுவில்.

தகவல் : குடும்பத்தினர் 0772867532, 0774540501

## முள்ளிவாய்க்கால்...

னர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முதலமைச்சர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை கடந்த 3 வருடங்களாக வடக்கு மாகாண சபையே ஒழுங்கு செய்து நடத்தி வந்தது. அதேபோன்று இம்முறையும் வடக்கு மாகாணசபையே ஒழுங்குபடுத்தி நடத்தவேண்டும் என்பது கலந்துரையாடலில் ஈடுபட்ட அனைத்து உறுப்பினர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறும் அமைவிடம் பிரதேச சபைக் குரிய காணியாகும். அது எனது உள்ளூராட்சி அமைச்சுக்கு கீழ் வருகிறது

எனவே நினைவேந்தல் நிகழ்வை ஒழுங்குபடுத்தி நடத்துவதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எமது இனத்துக்கு ஏற்பட்ட பேரவலத்தை நினைவுகூரும் நிகழ்வை எம்முடன் இணைந்து முன்னெடுக்க பலதரப்பட்ட பொது அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

இவ்வாறான அக்கறையுடைய அனைத்து அமைப்புக்கள் குழுவினரும் நாளை 9ஆம் திகதி புதன்கிழமை மு.ப 11.30 மணிக்கு முதலமைச்சர் மாநாட்டு மண்டபத்தில் கூடி ஒன்றுபட்டு அனைவரும் ஒத்துழைப்புடன் இந்த நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பது பற்றி ஆராயப்படும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மாகாண சபையுடன் இணைந்து நடத்த விரும்பும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இருவர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவது தொடர்பில் எம்முடன் பேச்சு நடத்தினர். அவர்கள் சற்று வித்தியாசமான கருத்தை தெரிவித்திருந்தனர்.

வடக்கு மாகாண சபை நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுத்து வந்ததை ஏற்றுக் கொள்வதாகவும், அவ்வாறு செய்திருந்தும் கடந்த வருடம் 4 இடங்களில் நடைபெற்றது போன்றல்லாமல் ஒரே இடத்தில் செய்ய முன்வரவேண்டும் என தெரிவித்தார்கள். அதை நாமும் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தேன்.

தனிப்பட்ட முறையில் அனைவரையும் ஒன்றிணைக்க முடியாத காரணத்தினால் தாம் இம்முறை அனைவரையும் அழைத்து வந்து செயற்படுத்துவதாக தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபை ஜனநாயக முறையில் சில விடயங்களை மக்களுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். எனவே சில விடயங்களை விட்டுவிட முடியாது. எம்முடன் இணைந்து செயற்பட விரும்பினால் சேர்ந்து செயற்படுங்கள் ஏனெனில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்க வேண்டி உள்ளது. அதாவது, நினைவேந்தல் வளாகம் அழகுபடுத்தல், நுழைவாயில் வடிவமைத்தல், தீச்சுடர் ஏற்பாடு, பொதுமக்கள் சுடர், கதிரை ஒழுங்கு, பொலிஸ் அனுமதி பெறல், ஊடக ஏற்பாடு, ஒலிபெருக்கி ஏற்பாடு, பிரயாண ஒழுங்குமற்றும் உணவு என பல ஏற்பாடுகள் உள்ளது. அதற்கு சேர்ந்து செயற்படுங்கள் என தெரிவித்தேன்.

மேலும் கூட்டம் எவ்வாறு நடத்த வேண்டும் என தெரிவித்தார்கள். இந்த கருத்துக்களை நாளை நடைபெறும் கூட்டத்தில் முன் வைத்து செயற்பாட்டுக்குழுவுடன் கலந்துரையாடி உரிய முடிவுகளை எடுக்க லாம் என அவர்களுக்கு தெரிவித்துள்ளேன் என மேலும் தெரிவித்தார். (ம-9)


### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 /-Kg
கனடா- 900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து- 700 /-Kg

DELIVERY IN 3-5DAYS

• மானிப்பாய் ☎ 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## இளவாலையில்...

நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இளவாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு அருகில் சென்ற பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான முறையில் இருவர் நிற்பதை கண்டு அவர்களை சோதனை செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து 53 போத்தல் கசிப்பும், 110 போத்தல் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

42 மற்றும் 18 வயதுடைய நபர்களே மேற்படி கைது செய்யப்பட்டவர்களாவர். (ம-9)


வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை விசேட இறுதி கருத்தரங்குகள்

D.M.I யாழ்நகர் (வெலிங்டன் சந்தி) 076 5843394

பிரிவு I
செவ்வாய்,புதன், வியாழன்
பி.ப 3.00-6.00
பிரிவு II
மாலை 5.00-8.00
(C-2533)

வவுனியா (077 220 5126)
கிளிநொச்சி (077 548 3470)
போன்ற இடங்களில் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.



### கடந்த 2017 ஆம் ஆண்டின் சாதனையுடன்...

A/L 2020 தொழில்நுட்பபிரிவு மாணவர்களை

# TECHNO WORLD

வெலிங்டன் சந்தி (லிங்கன் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம்.

அன்புடன் வரவேற்கின்றது

புதிய பிரிவு - A/L 2020

அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்

வெளிமாவட்ட மாணவர்களுக்காக சனி, ஞாயிறு தினங்களில் விசேட நேர அட்டவணைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

எமது கடந்தகால சாதனைகள்

மாவட்ட ரீதியில் முதல் நிலை சாதனையாளர்கள்

பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு - தமிழினியன் (1) கோகுலன் (3)

Z - புள்ளி 2.9808 - தேசிய நிலை 20 (2A,B)

உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு - கேசனா (1), சரண்சனா (3)

எமது நிறுவனத்தில் கல்வி கற்று 65 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர்.

(C-2532) 077 017 5346



### Vacancy available!!!

• Air ticketing Executive/Visa consultant - 2
• Marketing Staff -1
• Candidates should have minimum 2 years Experience in relevant field.

Please send your CV -Sbtravelsjaffna@gmail.com
No 212, Kasthuriyar Road, Jaffna.
No.160, Temple Road, Nallur.

Contact us - 021 222 7111



### விற்பனைக்கு

வட்டக்கச்சியில் 1 1/2 ஏக்கர் தென்னங் காணி விற்பனைக்குண்டு.

(C-2626)

071 487 1665


இப்பத்திரிகை வலம்புரி அச்சகம் ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.